# தமிழரசு

16-9-1988 ரூ. 1











1

சென்னை உயர்நீதி மன்றத்தின் 125வது ஆண்டு விழாவையொட்டி, 30-8-88 அன்று உயர்நீதி மன்ற வளாகத்தில் சமநீதிச் சோழன் சிலையை, மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் முன்னிலையில் மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் திறந்து வைத்தார்.

2

மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் 31-8-88 அன்று வேலூர் மத்திய சிறைச் சாலைக்கு வருகை புரிந்ததன் நினைவாக அங்கு மரக்கன்று ஒன்றினை நட்டார்.

3

மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் 31-8-88 அன்று வேலூரில், தீரர் சத்தியமூர்த்தி அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தனர்.



## தலைமைச் செயலர் பேட்டி

நேர்மையான நிர்வாகத்தை உறுதி செய்யும் பொருட்டு, ஆளுநர் உத்தரவின் பேரில் மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கையை அடுத்து, கண்காணிப்புப் பிரிவின் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.

பிப்ரவரி 1988 முதல் பொது மக்களிடம் அரசுஊழியர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ள வேண்டிய முக்கியப் பிரிவுகளில் 599 திடீர்ச் சோதனைகள் இதுவரை மேற்கொள்ளப்பட்டன. முன் கூட்டியே கிடைத்த தகவலின் அடிப்படையில் 69 இனங்களில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் 100 அரசு ஊழியர்களும் மற்றும் 18 பேரும் லஞ்சம் மற்றும் அரசு நிர்வாகத்தைத் தவறாகப் பயன் படுத்தியதாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரசுப் பணியில் உள்ள 307 பேர் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. இதில் 85 பேர் மீது பூர்வாங்க விசாரணையும், 107 பேர் மீது விரிவான விசாரணையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 117 பேர் மீது கிரிமினல் வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மதுவிலக்கைத் தீவிரமாக அமல்படுத்தும் நோக்கத்துடன் தமிழகக் காவல் துறையின் மது விலக்கு அமல் பிரிவு, சிறப்புப் பிரிவு அன்றாடம் நடைமுறையில் உள்ள சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் காவலருடன் இணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மாநிலத்திலுள்ள பல்வேறு காவல் நிலையங்களுக்கு 2,000 காவலர்களின் பணி கிடைக்கிறது. இதனால் காவல் நிலையங்களே மதுவிலக்கைத் தீவிரமாக அமல்படுத்த வழி ஏற்படுகிறது.

*(1-9-'88 அன்று தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலர் திரு எம். எம். இராசேந்திரன் அவர்கள் செய்தியாளர்கட்கு அளித்த பேட்டியிலிருந்து..)*

## தமிழகத்திற்கு கூடுதல் அரிசி

### மைய அரசின் உத்தரவு

மத்திய பொது இருப்பிலிருந்து தமிழ்நாட்டிற்கு, தற்போது மாதத்திற்கு 50 ஆயிரம் டன் ஒதுக்கீடு செய்யப் படுகிறது. அக்டோபர், நவம்பர் மாதங்களுக்கு தலா 30 ஆயிரம் டன் வீதம ஒதுக்கிடு கூடுதலாக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒரு இலட்சம் டன் அரிசியை வெளிச் சந்தையிலிருந்து தமிழக அரசு வாங்கிக் கொள்வதற்கும் மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இத்தகவலை மத்திய உணவுத்துறை துணை அமைச்சர் மாண்புமிகு திரு சுக்ராம், 2-9-'88 அன்று சென்னையில் அறிவித்துள்ளார்

தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று இந்த அறிவிப்பை வெளியிடுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

'விநாயக தர்சன்'
செய்தி 48-ஆம் பக்கம்



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2019
விபவ - புரட்டாசி 1

மலர்: 19 இதழ்: 6

16-9-1988

தமிழ்நாட்டில்...

# குடியரசுத் தலைவர் நிகழ்ச்சிகள்



**மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் ஆகஸ்ட் மாதக் கடைசியில், தமிழ்நாட்டில் நான்கு நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அந்தப் பயண விவர நிகழ்ச்சிகள் இங்கே சுருக்கித் தொகுத்தளிக்கப்படுகின்றன.**

தமிழ்நாட்டில் நான்கு நாள் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் திட்டப்படி மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் 28.8.88 அன்று தமிழகம் வந்து சேர்ந்தார். அன்று மாலை 5.30 மணியளவில் கோயம்புத்தூரில் உள்ள சூலூர் விமான நிலையத்தில் தம் துணைவியாருடன் இராணுவ விமானம் மூலம் வந்திறங்கினார். மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி.அலெக்சாண்டரும் அவரது துணைவியாரும் அவர்களோடு வந்தனர்.

மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு பிரபு, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு என்.கோவிந்தன், மறறும் அரசு உயர் அதிகாரிகளும்,வேளாண்மைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ராஜகோபாலன், அவினாசிலிங்கம் மகளிர் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் ராஜம்மாள் தேவதாஸ் முதலான பலரும், விமான நிலையத்தில் அவர்களுக்குஅன்பான வரவேற்பளித்தார்கள்.

6.30 மணியளவில், கோயம்புத்தூர் பி.எஸ்.ஜி. கல்லூரி விழாவில் கலந்துகொண்ட மேதகு குடியரசுத் தலைவர், அங்கு ஜி.ஆர். தாமோதரன் சிலையைத்திறந்துவைத்தார்.

விழாவில், திரு.ஜி.வரதராசன் வரவேற்புரையாற்றினார். மேதகு குடியரசுத் தலைவரின் துணைவியார் குத்துவிளக்கேற்றி வைத்தார். மேதகு ஆளுநர் தலைமையில் நடைபெற்ற அவ்விழாவில், மாண்புமிகு மத்திய அமைச்சர் பிரபு, முன்னாள் அமைச்சர் திரு சி.சுப்பிரமணியம் ஆகியோரும் கலந்துகொண்டு பேசினார்கள்.

விழாவில் திரு.ஜி.ஆர்.தாமோதரன் பற்றிய கட்டுரைத் தொகுப்பு நூல் ஒன்றைத் திரு சி.சுப்பிரமணியம் வெளியீட்டார். அதன் முதல் பிரதியை மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் பெற்றுக்கொண்டார்.

தலைமையுரையாற்றிய மேதகு ஆளுநர் ''ஆரம்பக் கல்வி, சுகாதாரம், பெண்கல்வி போன்றவை கிராமப்புற மக்களுக்கும் கிடைக்கச் செய்யும் முயற்சியில் இதுபோன்ற அறக்கட்டளைகள் ஈடுபடவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் பேசுகையில் ''தொழில் நுட்பத்துறையில் நாம் மேலும் முன்னேற்றம் காணவேண்டும். எலக்ட்ரானிக் வளர்ச்சியால் அமெரிக்காவிற்கு இணையாக இன்று ஜப்பான் நாடும் தொழில் துறையில்

**கோவை பி.எஸ்.ஜி. கல்லூரி விழாவில் நூல் வெளியீடு**






**கஸ்தூரி சீனிவாசன் கலாச்சார மையத்தில்..**

வளர்ந்திருக்கிறது. அதைப்போல் நம் இந்திய நாடும் முன்னேற இன்னும் பல தொழிற் கல்விப் பயிற்சி மையங்கள் தொடங்கப்பட வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

விழாமுடிவில், திரு.ஜி.என் வேங்கடபதி நன்றி கூறினார்.

## லட்சுமி மிஷன் ஒர்க்ஸ்

கோவை லட்சுமி மிஷன் ஒர்க்ஸ் நிறுவனத்தின் சார்பில், கோயம்புத்தூருக்கு அருகில் உள்ள அரசூரில் முப்பது கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டிருக்கிறது 'மிஷன் டூல்ஸ்' தொழிற்சாலை. அதை 29.8.88 அன்று காலையில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர்.வெங்கட்ராமன் திறந்து வைத்தார். அவரது துணைவியார் திருமதி ஜானகியம்மாள் குத்துவிளக் கேற்றிவைத்தார்.

விழாவுக்குத் தலைமை தாங்கிய மேதகு தமிழக ஆளுநர் அவர்கள்- ''இவ்வாறு தொடங்கப்படும் தொழிற்சாலைகள் தரமான பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும்'' என்று தமது உரையில் குறிப்பிட்டார்.

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் தம்முடைய தொடக்கஉரையில், ''இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் தொழில் துறையின் பங்கு முக்கியமானதாகும். எனவேதான், விவசாயத்திற்கு அடுத்தபடியாக தொழில் துறையின் வளர்ச்சிக்கு அரசு முக்கியத்துவம் கொடுக்கிறது. புதிய ஜவுளிக்கொள்கை மூலம் ஜவுளித்தொழிலை நவீனமயமாக்க அரசு பல திட்டங்களை மேற்கொண்டு வருகிறது'' என்றார்.

மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு ஆர்.பிரபு, லட்சுமி மிஷன் ஒர்க்ஸ் நிறுவனத் தலைவர் மூரி, ஜப்பான் நாட்டுப் பிரதிநிதி கெய்க் டிரிக்லர் ஆகியோரும் விழாவில் பேசினர். முடிவில், நிறுவன இயக்குநர் திரு.வெங்கடரங்கப்பன் நன்றி கூறினார்.

## கலாச்சார மையம்

அதையடுத்து - கோவை பீளமேடு சென்றார் மேதகு குடியரசுத் தலைவர். அங்கு, கஸ்தூரி சீனிவாசன் அறக்கட்டளை சார்பில் அமைக்கப்பட்டுள்ள கலாச்சார மையத்தை அவர் திறந்துவைத்தார். இவ்விழாவிற்கும் மேதகு தமிழ்நாடு ஆளுநர் தலைமை தாங்கினார்.

மேதகு குடியரசுத் தலைவரின் துணைவியார் குத்துவிளக்கேற்றி வைத்தார். மேதகு ஆளுநரின் மனைவி திருமதி அக்கம்மாள், விழாமலரை வெளியிட்டார்.

கலாச்சார மையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் சித்ராசினிவாசன், திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து இருப்பதைப் பாராட்டிய குடியரசுத் தலைவர், ''கலைகள் மக்களிடையே ஒற்றுமையை வளர்க்கும்'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு ஆர்.பிரபுவும் இவ்விழாவில் கலந்துகொண்டார்.

## அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூரில், ஸ்ரீஅவினாசிலிங்கம் பல்கலைக்கழகத்தை 29.8.88 அன்று மாலை மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் தொடங்கிவைத்தார்.

பல்கலைக் கழக வேந்தர் திரு தி. சு.அவினாசிலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மேதகு ஆளுநர் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். திருமதி ஜானகி வெங்கட்ராமன் குத்துவிளக்கேற்றினார். வாழ்த்துச் செய்திகளைப் பதிவாளர் டாக்டர் கே. குழந்தைவேல் படித்தார். மகளிருக்கான உயர்கல்விக் கட்டடத்திற்கான அறக்கட்டளை நிதி ரூ. 50 ஆயிரத்திற்கான காசோலை மேதகு ஆளுநரின் துணைவியார் திருமதி அக்கம்மாள்மூலம் வழங்கப்பட்டது.

**அவினாசிலிங்கம் பல்கலைக் கழகத்தில், வேந்தர் திரு தி. சு. அவினாசிலிங்கம் வரவேற்பு.**





அமீர் மகாலில் வரவேற்பு

பல்கலைக் கழகத் துணைவேந்தர் திருமதி டாக்டர் ராஜம்மாள் தேவதாஸ் வரவேற்புரையுடன் துவங்கிய இவ்விழாவில், மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ஆர். பிரபு, முன்னாள் அமைச்சர் திரு சி.சுப்பிரமணியம், திருமதி லட்சுமி என். மேனன், டாக்டர் மு.அறம் ஆகியோர் பேசினார்கள்.

இவ்விழாவில் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா.கிருஷ்ணபாரதி ஐ.ஏ.எஸ். எழுதிய 'அறிவுச்சுடர் ஏற்றிய அவிநாசிலிங்கப் பெருந்தகை என்ற புத்தகத்தை மேதகு தமிழக ஆளுநர் வெளியிட்டார். முதல் நூலை இந்தியக் குடியரசுத் தலைவர் பெற்றுக்கொண்டார். இந்நூலின் பதிப்பாளர் 'பூங்கொடி' வே.சுப்பையாவுக்குப் பல்கலைக்கழக வேந்தர் பட்டாடை அணிவித்தார்.

பல்கலைக் கழகத்தைத் துவக்கி வைத்து, மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர்.வெங்கட்ராமன் பேசியதாவது:

''பெண் கல்வி என்பது வருவாய்க்கு மட்டுமல்லாமல், அவர்களுடைய வாழ்க்கைத் தர உயர்வுக்கும் பயன்படுவதாக அமைய வேண்டும். கிராமப்புறப் பெண்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் இயக்கங்கள் மிகவும் குறைவு. எனவே, கிராமப்புறப் பெண்களின் பிரச்சினைகள், அவர்களின் வாழ்க்கைத்தரம், கல்வி வசதி, குடும்ப நலம் ஆகியவற்றுக்காக நாமெல்லாம் பெரிதும் முயற்சி மேற்கொள்ளவேண்டும்''.

—விழா முடிவில், பல்கலைக்கழக இயக்குநர் திருமதி கோதாவரி கமலநாதன் நன்றி கூறினார்.

## சேலத்தில் வரவேற்பு

மேதகு குடியரசுத் தலைவரும் மற்றவர்களும் சேலத்திற்கு ஹெலிகாப்டர் மூலம் வருகை தந்தபோது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு பாரூக்கி முதலானோர் அவர்களை அன்புடன் வரவேற்றனர்.

மூவேந்தர் கலையரங்கத்தில் அவர்களுக்குப் பொது வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்நிகழ்ச்சியில் எல்லா மதத்தினரும் மேதகு குடியரசுத் தலைவருக்குத் தத்தம் மதரீதியிலான வரவேற்பு வழங்கி வாழ்த்தினார்கள்.

வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கடராமன் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''சேலம் மாவட்டம் ராஜாஜி, விஜயராகவாச்சாரியார் போன்ற பல விடுதலைப் போராட்ட வீரர்களைப் பெற்ற மாவட்டமாகும். அவர்களைப் போன்றவர்களின் தியாகங்களினால்தான் குடியரசுத் தலைவர் போன்ற உயர் பதவிகளுக்கு என் போன்றவர்கள் வர முடிகிறது. தமிழ்நாட்டில் மேலும் மின்னணுவியல் மற்றும் கம்ப்யூட்டர் தொழில்களைத் துவக்கத் தொழிலதிபர்கள் முன்வரவேண்டும். தமிழகத்தில் தற்பொழுது எழுபது சதவிகிதம் பேர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர்; அவர்களில் ஐம்பது சதவிகிதம் பேர் போக, மற்றவர்கள் தொழில் துறைக்கு ஈர்க்கப்பட வேண்டும். காவிரிப் பிரச்னைக்குக் கூடிய விரைவில் தீர்வு காணவேண்டும். தமிழகம் தனக்கு உரிய பங்கு காவிரித் தண்ணீரைப் பெறவேண்டும். அப்போதுதான் தமிழகத்துக்குச் செழிப்பைக் கொண்டுவர முடியும்''

வேலூரில் வரவேற்பு



## அண்ணா பல்கலைக் கழகம்

சென்னைக்கு வந்த மேதகு குடியரசுத் தலைவர், அண்ணா பல்கலைக் கழகத்தில் (30.8.88) நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கேற்றார்.

அரசியல் பிரமுகர்கள், தொழிலதிபர்கள், எழுத்தாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் -விவேகானந்தா மண்டபத்தில் நடைபெற்ற அந்தக் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்குகொண்டார்கள்.

## அமீர்மகால் வரவேற்பு

சென்னையில் குடியரசுத் தலைவருக்கும், அவரது துணைவியார்



சென்னை-மீனாட்சி கல்லூரியில்...

திருமதி ஜானகியம்மாளுக்கும ஆர்க காடு இளவரசர் நவாப் ஜி.எம். அப்துல் காதர் (30.8.88) வரவேற் பளித்தார்.

திருவல்லிக்கேணியில் உள்ள அமீர்மகாலில் நடைபெற்ற இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர், அவர் மனைவி திருமதி அக்கம்மாள், தமிழ்வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர் டாக் டர் ம.பொ.சிவஞானம் மற்றும் முப்படைத் தளபதிகளும், நாடாளு மன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

## உயர்நீதிமன்ற விழா

சென்னை உயர்நீதிமன்றத்தின் 125வது ஆண்டு நிறைவு விழா 30.8.88 அன்றுமாலை மிகச் சிறப் பாகக் கொண்டாடப்பட்டது. வண்ணவிளக்குகளால் அலங்கரிக்கப் பட்டிருந்த உயர்நீதிமன்ற வளா கத்தில் அவ்விழாவை மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் தொடங்கி வைத்தார்.

உயர்நீதிமன்ற வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த ஒன்பதரை அடி உயர சமநீதிச் சோழன் திரு வுருவச் சிலையை மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி.அலெக் சாண்டர் திறந்து வைத்தார்.

மாண்புமிகு சுப்ரீம்கோர்ட் தலைமை நீதிபதி திரு.ஆர்.எஸ். பதக், இவ் விழாவிற்குத் தலைமை தாங்கினார். நீதிமன்றத்தின் 125-வது ஆண்டு நிறைவு குறித்த கல் வெட்டை, மாண்புமிகு மத்திய சட்ட அமைச்சர் திரு.சங்கரானந்த் திறந்து வைத்தார்.

நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் நாதசுர இசையோடு தொடங்கிய அவ்விழாவில் திருமதி எம்.எஸ்.சுப்பு லட்சுமி இறைவணக்கம் பாடினார். உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி (பொறுப்பு) திரு.எஸ்.ரத்தினவேல் பாண்டியன் வரவேற்புரையாற்றி னார். விழா முடிவில் நீதிபதி திரு. எஸ்.மோகன் நன்றி கூறினார்.

அரசு தலைமைச் செயலாளர் திரு.எம்.எம் ராஜேந்திரன், உயர் அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப் பினர்கள், உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்களும் விழா வுக்கு வந்திருந்தனர்.

விழாவைத் துவக்கிவைத்துப் பேசு கையில், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் பேசியதாவது:

''நான் இந்த வக்கீல்கள் சங்கத் தில் ஐம்பதாண்டுக் கால உறுப் பினன்.

''சென்னை உயர்நீதிமன்றம் 1862ல் தொடங்கியபோது, இந்தி யாவின் முதல் சுதந்திரப் போராட் டம் தோல்வியடைந்த நேரம். அன்று நமக்குச் சுதந்திரம் இல்லை. இன்று நாம் சுதந்திரம் அடைந்து நாற்பதாண்டுகள் ஆகிவிட்டன. உயர்நீதிமன்றக் கட்டடத்தின் செங்கலும் சுண்ணாம்பும் இங்கி லாந்திலிருந்து வந்தாலும், இதில் நீதிதேவனாகக் குடியிருப்பது நம் மனச்சாட்சியேயாகும்.

''வழக்கறிஞர்கள் பலரும் விடு தலைப் போராட்டத்தில் பங்கேற்ற னர். குறிப்பாக மகாத்மா காந்தி, மோதிலால் நேரு, ஜவஹர்லால் நேரு, படேல், ராஜேந்திரபிரசாத், பிரகாசம், சர்.சி.பி.ராமசாமிஐயர், ராஜாஜி, சத்தியமூர்த்தி, சி.ஆர். தாஸ், போன்றவர்களெல்லாம் புகழ்பெற்ற வழக்கறிஞர்களேயா வார்கள். முதல் இந்திய நீதிபதி சர் முத்துசாமி ஐயர், சென்னை உயர்நீதிமன்றத்தில்தான் சிறப்பா கப் பணியாற்றினார்.

''நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் நீதி பரிபாலனத்தின் இரண்டு கண் களாக விளங்குகிறார்கள். நேர்மை யாக நடந்து நீதிபதிகள் ஏழை எளிய மக்களின் நம்பிக்கையைப் பெறும் அளவிற்குச் சிறப்பாகப் பணியாற்ற வேண்டும். வழக்கறிஞர் களும் சுதந்திரமாகத் தைரியமாகப் பணிபுரிய வேண்டும். நீதி வழங்கு வதில் தாமதம் கூடாது; தாமதமே நீதியின் பலனைக் கெடுத்துவிடும். இலவசச் சட்ட உதவி போன்றவை ஏழை எளிய மக்களுக்கு மிகுந்த உதவியாக இருந்து வருகின்றன.''

சமநீதிச் சோழன் சிலையைத் திறந்து வைத்துப் பேசுகையில் மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் ''சமநீதிச்சோழன் இரண்டாயிரத்து நூறு ஆண்டு களுக்கு முற்பட்டவர் என்று ஆய் வாளர்கள் கூறுகின்றனர். சமநீதியை நாட்டுக்கு உணர்த்தும் இந்தத் தமி ழர்பண்பாட்டுச்சிலையைத் திறந்து வைப்பதில் பெருமை அடைகிறேன்'' என்றார். ''நீதிக்காக நீதிமன்றம் வரும் மக்கள் நம்பிக்கையை நிறை வேற்றும் வகையில் நாம் பாடுபட வேண்டும்'' என்றும் அவர் கூறி னார்.

''நீதித்துறையில் உள்ளவர்கள், சமூக ஒழுக்கங்கள் குறைந்து வரு வதைத் தடுத்து நிறுத்தப் பாடுபட வேண்டும்.'' என்று விழாத் தலைமை யேற்ற சுப்ரீம்கோர்ட் தலைமை நீதிபதி எஸ்.ஆர்.பதக் பேசும் போது குறிப்பிட்டார்.

மாண்புமிகு மத்திய சட்ட அமைச்சர் திரு.பி.சங்கரானந்த் தமது உரையில் ''அரசியல் சட்டத் தின் கீழ் புதிய சமத்துவ சமுதாயத் தைக் கொண்டுவர நீதித்துறையி னர் பெருமுயற்சி மேற்கொள்ள வேண்டும்'' என்று கேட்டுக்கொண் டார்.

## வேலூர் சிறைச்சாலை

வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு வருகை தந்த மேதகு குடியரசுத் தலைவரும் மற்றவர்களும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மாலதி மற்றும் பலரால் வரவேற்கப்பட் டார்கள். (31.8.88)

10.30 மணியளவில் வேலூர் சிறைச்சாலைக்கு மேதகு குடியரசுத் தலைவர் வருகை தந்தார். 1942ல் நடைபெற்ற 'வெள்ளையனே வெளி யேறு' இயக்கத்தின்போது தான் கைது செய்து வைக்கப்பட்டிருந்த சிறை அறையை மேதகு குடியரசுத் தலைவர் பார்வையிட்டார். பசுமை மாறாத பழைய நினைவுகளால் அப்போது அவர் உள்ளம் உருகி னார்.

சிறைச்சாலைக்கு வருகைபுரிந்த அவர்களுக்கு, கைதிகள் இருவர் மாலையணிவித்து மகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

## சத்தியமூர்த்தி சிலைதிறப்பு

வேலூரில் நடைபெற்ற (31.8.88) தீரர் சத்திய மூர்த்தி சிலைதிறப்பு விழாவில் மேதகு குடியரசுத் தலைவர் பங்கேற்றார். ரவுண்டானாவில் அமைக்கப்பட்டிருந்த சிலையைத் திறந்துவைத்த அவர், கோட்டை மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலும் கலந்து கொண்டு பேசினார்.

அக்கூட்டத்தில் மேதகு ஆளுநர் திரு ஆர்.ஜீவரத்தினம் எம்.பி. வரவேற்புரையாற்றினார். திரு ஜி. கருப்பையா மூப்பனார் எம்.பி., வேலூர் நகராட்சி மன்றத் தலைவர் திரு.வி.எம்.தேவராஜ், முன்னாள் அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகர்,எம்.பி,சத்திய மூர்த்தியின் மகள் திருமதிலட்சுமி கிருஷ்ண மூர்த்தி முதலான பலரும் அவ்விழாவில் கலந்துகொண்டனர். கூட்ட முடிவில் திரு ஏ. ஜெயமோகன் எம்.பி. நன்றி கூறினார்.

மேதகு குடியரசுத் தலைவர் திரு.ஆர்.வெங்கடராமன் அக்கூட்டத்தில் பேசியதாவது:

''நாடாளுமன்றத்தில் பத்து சத்தியமூர்த்திகள் இருந்தால், பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை என்று காந்தியடிகளே பாராட்டினார். வீரர் சத்தியமூர்த்தியை சட்டமன்ற-நாடாளு மன்ற உறுப்பினர்கள் பின்பற்ற வேண்டும்''.

மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் பேசுகையில்,"இந்திய சுதந்திரப் போரில் தமிழகம் முன்னணி வகிக்க தீரர் சத்தியமூர்த்தி, பெருந்தலைவர் காமராசர் போன்றவர்கள் தலைமை தாங்கி நடத்தியதே முக்கியக் காரணம்" என்று பெருமையோடு குறிப்பிட்டார்.

## மீனாட்சி கல்லூரி விழா

சென்னை -மீனாட்சி மகளிர் கல்லூரியில் இரண்டாவது கம்ப்யூட்டர் மையத்தை மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர்.வெங்கட்ராமன் 31.8.88ல் துவக்கிவைத்தார்.

தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு எம்.எம்.ராஜேந்திரன் தலைமையில் நடந்த இவ்விழாவில் கல்லூரி நிர்வாகக் குழு உறுப்பினர் திரு ஏ.வேணுகோபால் வரவேற்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் திருமதி கே.எஸ்.லட்சுமி அறிக்கை படித்தார். கல்வித்துறைச் செயலாளர் திரு எச்.பி.என் ஷெட்டி சென்னைப் பல்கலைக் கழகத்துணைவேந்தர் திரு.ஞானம், அண்ணா பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. வி.சி.குழந்தைசாமி ஆகியோர் பேசினார்கள். விழா முடிவில் ,கல்லூரி நிறுவனர் திரு. கே.ஆர்.சுந்தரராஜன் நன்றி கூறினார்.



அவினாசிலிங்கம் பல்கலைக் கழகத்தில்

மீனாட்சி மகளிர் கல்லூரியில் இரண்டாவது கம்ப்யூட்டர் மையத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவாகள் பேசியதாவது:

''நாளைய அறிவியல் வளர்ச்சியே இன்றைய கம்ப்யூட்டர். விண்வெளி ஆராய்ச்சி, மருத்துவத்துறை, பாதுகாப்புத்துறை, தொழில்துறை ஆகிய எல்லாத்துறைகளிலும் கம்ப்யூட்டர் நீக்கமற நிறைந்திருக்கிறது. கம்ப்யூட்டர்களை உருவாக்குவதற்குத் தேவையான நுண்கருவிகளைத் தயாரிக்கும் பணியில் ஏராளமானவர்களுக்கு வேலை கிடைக்கும்; இதனால் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முடியும்.

## சுற்றுப்பயணம் முடிவு

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு.ஆர்.வெங்கட்ராமன் தமிழ்நாட்டில் மேற்கொண்ட நான்கு நாள் சுற்றுப்பயணம் 31.8.88ல் முடிவுற்றது. அன்று மாலை6.30 மணியளவில், சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து, விமானப்படைக்குரிய சிறப்பு விமானத்தில் அவர் தம் துணைவியாருடன் டில்லிக்குப் பயணமானார்.

தமிழ்நாடு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டா, ஆளுநரின் ஆலோசகர் திரு.ஆ.பத்மநாபன், அரசு தலைமைச் செயலாளர் திரு எம்.எம்.ராஜேந்திரன், உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி (பொறுப்பு) திரு. இரத்தினவேல் பாண்டியன் முதலான பலரும் வழியனுப்பிவைத்தார்கள்.

—நிகழ்ச்சித் தொகுப்பு :
'சோழராஜா'

**முன்புற அட்டை:**

**வேலூர் மத்திய சிறைக்கு 31-8-88 அன்று வருகைபுரிந்த மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள், சுதந்திரப் போராட்டத்தின்போது வேலூர் சிறையில் தீரர் சத்தியமூர்த்தி வைக்கப் பட்டிருந்த அறையின் முன்பு அன்னாரது திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்.**

**சென்னை உயர்நீதி மன்றத்தின்125வது ஆண்டு நிறைவையொட்டி 30-8-88 அன்று நடைபெற்ற விழாவில் உயர்நீதி மன்ற நீதிபதி (பொறுப்பு) திரு இரத்தினவேல் பாண்டியன் அவர்கள் நினைவுப் பரிசை மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கட்கு வழங்கினார்.**

**பின் அட்டை:**

**மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் சென்னைக்கு வருகை தந்தபோது அவருக்கு அன்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. (30-8-'88).**

**கோயம்புத்தூரில் அவினாசிலிங்கம் பல்கலைக் கழகத் தொடக்க விழா (29-8-'88).**

**கோயம்புத்தூரில் ஜி.ஆர்.தாமோதரன் திருவுருவச் சிலைத் திறப்பு விழா (28-8-'88).**

**மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் துணைவியார் அவர்கள் அவினாசிலிங்கம் பல்கலைக் கழக விழாவில் குத்துவிளக்கேற்றி வைக்கிறார் (29-8-'88).**

# இதன் வயது 125



சென்னை உயர்நீதிமன்றம் சிறப்புமிக்க வரலாற்றிற்குச் சொந்தமானது. ஆங்கிலேயர் ஆட்சி இந்தியாவில் நிலைபெற்ற பின்பு, முதன்முதலாக இந்தியாவில் இரண்டு உயர்நீதிமன்றங்கள் ஒரே நேரத்தில் நிறுவப்பட்டன. அவை சென்னை உயர் நீதிமன்றமும், கல்கத்தா உயர்நீதிமன்றமும் ஆகும்.

*1862*ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் *15*ஆம் நாள் வெள்ளிக்கிழமை சென்னை உயர்நீதிமன்றம் தொடங்கப்பட்டது. இப்போது கம்பீரமாகக் காட்சிதரும் உயர்நீதிமன்றக் கட்டடம் அப்போது கட்டப்படவே இல்லை. சென்னைத் துறைமுகத்திற்கு எதிரே உள்ள ஒரு கட்டடத்தில் முதன் முதலாக உயர்நீதிமன்றம் இயங்க ஆரம்பித்தது.



முதல் தலைமை நீதிபதியாகப் பதவி வகித்தவர் சர் வால்டர் ஹார்மன் ஸ்காட்லேண்ட் என்ற ஆங்கிலேயராவார். அப்போது நீதிபதிகள் அனைவரும் ஆங்கிலேயர்களே.

முதல் இந்திய நீதிபதியாக உயர்நீதிமன்றத்தில் அமர்ந்தவர் திருவாரூர் முத்துசாமி அய்யராவார்.

*1878*இல் உயர்நீதிமன்ற நீதிபதியாக இந்த இந்தியருக்கு வாய்ப்புக் கிடைத்தாலும், முதல் தலைமை நீதிபதி பதவியில் ஓர் இந்தியர் அமர வெகுகாலம் பிடித்தது. அதுவும் இந்தியா சுதந்திரம் அடைந்த ஆண்டுதான் அந்த வாய்ப்புக் கிட்டியது. *1948*இல் முதல் இந்தியத் தலைமை நீதிபதியாகி, பெருமை தாங்கிய அப்பொறுப்பினைப் பெற்றவர் ராஜமன்னாராவார்.

இப்போது பாரிமுனை அருகே பாங்குடன் காட்சி தருகிற உயர்நீதிமன்றக் கட்டடம் சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன்பு அதாவது *1888*-இல் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. *1892*-இல் கட்டி முடிக்கப்பட்டது.

*96* ஆண்டுகளுக்கு முன்பு இந்த மாபெரும் கட்டடத்தைக் கட்ட செலவான தொகை, சுமார் பதிமூன்று இலட்ச ரூபாய்தான். இந்த மாதிரிக் கட்டடம் கட்டி முடிக்க இப்போது 250 கோடி ரூபாய் செலவு ஆகும் என்று தோராயமாக மதிப்பிட்டுள்ளார்கள் கட்டடக்கலை நிபுணர்கள்.

*1892*ஆம் ஆண்டு ஜூலை மாதம் *12*ஆம் தேதி அன்றைய வெள்ளைக்காரக் கவர்னர் உயர் நீதிமன்றக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். அப்போது சர் ஆர்தர் காலின்ஸ் தலைமை நீதிபதியாக இருந்து வரவேற்றார். தற்போது 125வது ஆண்டுவிழாவைக்கொண்டாடும்போது எஸ்.ரத்தினவேல்பாண்டியன் தலைமை நீதிபதி(பொறுப்பு) ஆக இருக்கிறார்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் மொத்தம் நீதிபதிகளின் எண்ணிக்கை 25. தற்பொழுது 23 பேர்கள் நீதிபதிகளாக உள்ளனர்.

—அ. மருது.



# பெரும் பேராசிரியர் சஞ்சீவிப் பெருந்தகை

காலாகாலத்துக்கும் பெருமை சேர்க்கும் வகையில் தமிழ்ப் பணி யாற்றிய பெரியாருள் ஒருவர் பேரா சிரியர் டாக்டர் ந.சஞ்சீவி அவர்கள்

கட்டபொம்மனுக்கு முன்னதாக விடுதலைப் போராட்டத்தில் ஈடு பட்ட பூலித்தேவரை நாட்டுக்கு அறிமுகப்படுத்திய பெருமையும் டாக்டர் சஞ்சீவி அவர்களையே சேரும். 1956-ஆம் ஆண்டில், பிப்ர வரி - மார்ச்சு 'கலைமகள்' இதழ் களில் எழுதிய 'வீரத்தலைவர் பூலித்தேவர்' என்ற கட்டுரை பூலித்தேவரைப் பற்றி நாட்டு மக்கள் நன்கு அறிந்துகொள்ளப் பேருதவியாகத் திகழ்ந்தது.

மருது சகோதரர்கள் பற்றி மானங்காத்த மருதுபாண்டியர், மருதிருவர் என்ற நூல்களை எழு திய பெருமையும் விடுதலைப் போராட்டக் காலத்தில் நடை பெற்ற வேலூர்ப் புரட்சியைப்பற்றி யும் எழுதிய விடுதலை உணர்வுமிக்க நல்லறிஞர் பேராசிரியர் டாக்டர் சஞ்சீவி.

இந்திய விடுதலை இயக்க வர லாறாகப் பல நூல்களை எழுதிய டாக்டர் சஞ்சீவி, எழுதிய ஆய்வு நூல்களும் அதிகமாகும். அவர் அடிக்கடி சொல்வார்: ''வாழ்வே ஆய்வு''''ஆய்வே வாழ்வு'' என்று. அதற்கொப்பஇலக்கியத் திறனாய்வு களாக அமைந்த அவரது நூல்கள் சிறந்த ஆய்வுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவை ஆகும்.

காஞ்சிபுரம் பச்சையப்பன் கல் லூரித் தமிழ்த் துறைத் தலைவ ராகவும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை ஆய்வாளர், விரிவுரையாளர், இணைப் பேராசிரி யர், பேராசிரியர், தமிழ் இலக்கியத் துறைத் தலைவர் என்ற நிலைகளி லும். முப்பத்தேழு ஆண்டுகளாகத் தமிழ்ப்பணி ஆற்றிய பெருமகன் டாக்டர் சஞ்சீவி.

தமிழிலும் ஆங்கிலத்திலும் இவ ருக்கிருந்த ஆற்றலை வெளிநாட்ட வர்களே வியந்து பாராட்டியுள்ள னர். இந்தியாவிலுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களில் பல்வேறு ஆய்வுக் குழுக்களில் உறுப்பினராக வும், பல்கலைக் கழக நிதி நல்கைக் குழு,இந்திய மொழிகள் உயராய்வுக் குழு உறுப்பினராகவும், சாகித்ய அகாடமியின் தமிழகக் கிளையின் உறுப்பினராகவும், பலவகைகளில் பணியாற்றி உள்ளவர் டாக்டர் சஞ்சீவி. தமிழகப் பல்கலைக் கழ கங்கள் பலவற்றின் தமிழ்ப்பாட நூற்குழு உறுப்பினராகவும், தலை வராகவும் பல ஆண்டுகள் தொண் டாற்றியவர் டாக்டர் சஞ்சீவி.

சென்னைப் பல்கலைக் கழகத் தில் தமிழாய்வு, உயராய்வு என் றும் இரண்டு பல்கலைக்கழக ஆய் விதழ்கள் வெளிவரக் காரணமாகத் திகழ்ந்தவர் இவர். சென்னைப் பல்கலைக் கழகக் கல்விப் பேரவை யிலும், ஆட்சிப் பேரவையிலும் முப்பதாண்டுகள் பணியாற்றியவர். ஓய்வு பெற்ற பின்னர் அண்மையில் தமிழக ஆளுநரால் சென்னைப் பல்கலைக் கழகப் பேரவையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

தமிழகப் பல்கலைக் கழகங்களில் அறக்கட்டளை பல நிறுவியுள்ளார் பேராசிரியர் சஞ்சீவி.

சென்னை, மதுரை காமராஜர், பாரதியார், பாரதிதாசன், தமிழ்ப் பல்கலைக் கழகங்களில் நிறுவப் பட்ட இந்த அறக்கட்டளைகளைத் தமது துணைவியார் பேராசிரியர் திருமதி கிருஷ்ணா, தமது தந்தை யார் நடேச முதலியார் ரா.பி. சேதுப்பிள்ளை, தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், டாக்டர் மு. வ., ஏ.எல்.முதலியார், நெ.து.சுநதரவடி வேலு, ஏ.வி. மெய்யப்பச் செட்டி யார், சிலம்புச் செல்வர் ம. பொ. சி. போன்றோரின் பெயரிலும், தான் ஈட்டிய பொருள்கொண்டு அறக் கட்டளைகளை அமைத்திருக்கும் பண்பாளர் டாக்டர் சஞ்சீவி.

தமிழகப் புலவர் குழுவில் அங் கம் பெற்றிருந்த டாக்டர் சஞ்சீவி, 'செந்தமிழ் இலக்கியச் செம்மல்' 'நூலறி புலவர்' ஆகிய பட்டங் களைப் பெற்றவர்.

பல்வேறு பல்கலைக் கழகங்களில் விருந்து ஆய்வு அறிஞராக (Visiting Professor ship) உரை நிகழ்த் தியவர். காசி, அலகாபாத், திருப் பதி வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகங்களிலும் சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார். மலேசியா, சிங் கப்பூர், ஹாங்காங், சீனா, ஜப்பான் ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா போன்ற நாடுகளில் சுற்றுப்பயணம் செய்துள்ளார். இவரது சுற்றுப் பயணங்கள் அனைத்திலும் தமிழ் மணம் பரவச் செய்வதில் மிகவும் அக்கறை எடுத்துக் கொண்ட பேராசிரியர் டாக்டர் சஞ்சீவி.

இருபது நூல்களையும், முந் நூறுக்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதி வெளியிட் டுள்ளார் பேராசிரியர் சஞ்சீவி.

சிந்தனைக் கருவூலமாகத் திகழ்ந்த டாக்டர் சஞ்சீவி தான் ஏற்ற கருத்துக்களைத் துணிந்து சொல்லும் ஆற்றல் உடையவராகத் திகழ்ந்தார்.

ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு வழி காட்டியாகத் திகழ்ந்த அந்தப் பெரு மகனார் கடந்த **22.8.1988 அன்று** திருவடிப்பேறு அடைந்தார்.

நாடறிந்த இந்தப் பேராசிரியர் முனிவர்போலவும், துறவி போலவும் வாழ்ந்தவர் ஆவார்.

தமிழுக்குத் தொண்டு செய்தோர் மடிந்தாலும், மாப்புகழுக்குச் சொந்தக்காரர்கள் அல்லவா. அந்த வகையில் பெருமை வாய்ந்த ''சஞ் சீவி முனிவர்'' புகழ் என்றும் நின்று நிலவும்.

—மாமூலன்



# அவர்தான் பெரியார்

கவிஞர் சாமி பழனியப்பன்

பகுத்தறிவுப் பகலவனான தந்தை பெரியார், பண்புகளின் திருவுருவம்; மனிதநேயம் போற்றிய மாமனிதர்; மரபுகளுக்கு மரியாதை கொடுத்த மாமேதை; பொதுப் பணத்தைப் பொன்னினும் மேலாக மதித்த புகழாளர்; தலைவர்களுக்கு வழிகாட்டும் தலைவர்; மக்களுக்காகச் சிந்தித்த மாபெரும் சிந்தனையாளர்; இதற்கு, அவர் வாழ்வில் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளை, அந்த ஒப்பற்ற தலைவரின் நினைவு நாளில் நினைவுகூர்வது பொருத்தமாக இருக்கும்.

**பெரியார் கேட்ட சாப்பாடு!**

தமிழ்த்திருவான தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் நேர்முக உதவியாளராக நான் பணிபுரிந்த காலம்; அப்போது ஒருநாள், தந்தை பெரியார், குன்றக்குடித் திருமடத்திற்கு வந்தார்கள்; அன்னை மணியம்மை அவர்களும் வந்திருந்தார்.

தவத்திரு அடிகளார், தந்தை பெரியாருக்கு மடத்து சம்பிரதாயப்படி, வரவேற்பளித்து மரியாதை செய்வித்தார்கள். பின்னர், தவத்திரு அடிகளார் பேட்டியளிக்கும் கண்ணாடி மண்டபத்தில், இருவரின் கலந்துரையாடல் தொடங்கியது. பல்வேறு பிரச்சினைகள் பற்றிப் பேசினார்கள்.

இடையே, தவத்திரு அடிகளார், என்னை அருகில் கூப்பிட்டு, 'ஐயாவுக்கு விருப்பமான சாப்பாடு ஏற்பாடு செய்யுங்கள்' என்று என் காதுக்குள் சொன்னார்கள்.

நான், அன்னை மணியம்மையாரின் அருகில் சென்று, 'அய்யாவுக்கு விருப்பமான சாப்பாடு.....' என்று கூறி, அம்மையாரின் பதிலை எதிர்பார்த்தேன்.

இதனைக் கவனித்த தந்தை பெரியார், 'தம்பி என்ன சொல்றாங்க?' என்று கேட்டார்.

'ஒன்றுமில்லை! அய்யாவுக்கு சாப்பாடு பற்றிக் கேட்டார்கள்!' என்றார் அன்னையார்.

தந்தை பெரியார் மிகவும் அமைதியாக,

'அதெல்லாம் ஒன்றும் சிரமப்பட வேண்டாம். மடத்து சம்பிரதாயப்படி, என்ன சாப்பாடு போடுவார்களோ, அந்தச் சாப்பாடு போதும்' என்றார்கள்!

அடிகளார் புன்னகை பூத்தார்!

மரபுகளுக்கு, தந்தை பெரியார் எவ்வளவு மரியாதையும் மதிப்பும் கொடுக்கிறார் என்பதைக் கண்டு நான் வியப்படைந்தேன்!

**பொதுப்பணிக்குப் புதுப்பாதை!**

காரைக்குடியில் 1946-ல் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம், நான் அப்போது மாணவன்! தந்தை பெரியார் வந்திருந்தார்கள். அன்றைக்கும், வழக்கம்போல சமதர்ம இல்லத்தில் தான் தங்கினார்கள். அண்ணன் இராம. சுப்பையாவின் இல்லம் தான் சமதர்ம இல்லம்.

மறுநாள் காலை, திருச்சிக்குப் பயணமாக வேண்டும். காரைக்குடி ரயில் நிலையத்திலிருந்துதான் இரயிலேற வேண்டும். சமதர்ம இல்லத்திலிருந்து ரயில் நிலையம் செல்ல, பத்து மணித்துளிகள் ஆகும்; ஆனால், ரயில் வருவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பே, தந்தை பெரியார் தயாராகி விட்டார்.

'ஐயா! இன்னும் நேரமிருக்கிறதே! ரயில் நிலையத்திற்கு இங்கிருந்து போக பத்து நிமிஷம்தான் ஆகும்!' என்றோம்.

'பரவாயில்லை! இங்கே பேசிக் கொண்டிருப்பதை அங்கே போய்ப் பேசிக் கொண்டிருக்கலாம்! ஒரு நிமிஷம் தாமதமாய் போனாலும் ரயில் போய்விடும்!' என்றார் தந்தை பெரியார். அதை மறுக்க எங்களுக்குத் துணிவில்லை.

உடனே, பயணப் பொருள்கள் காரில் ஏற்றப்பட்டன. தந்தை

பெரியார், அன்னை மணியம்மையார், அண்ணன் இராமசுப்பையா, நான் நால்வரும் காரில் ஏறினோம். கார் புறப்பட்டது. பல தொண்டர்கள், சைக்கிள்களில் காரைப் பின் தொடர்ந்தனர்.

அனைவரும் காரைக்குடி ரயில் நிலையத்தை அடைந்தோம். பிளாட்பாரத்தில் காற்றோட்டமாக ஒரு மரத்தடியில் சிறிதுநேரம் எல்லோரும் பேசிக்கொண்டிருந்தோம்.

தந்தை பெரியார் என்ன நினைத்தாரோ தெரியவில்லை. திடீரென்று,

'ஏம்மா! பிளாஸ்க் எடுத்து வச்சிட்டயா?' என்று அன்னை மணியம்மையாரைக் கேட்டார்.

அன்னை மணியம்மையார் தேடிப் பார்த்துவிட்டு, மிகவும் தணிந்த குரலில், 'எடுத்துவைக்க மறந்துட்டேன்' என்றார்.

தந்தை பெரியாருக்குக் கடுமையான கோபம் வந்துவிட்டது. 'பொதுப்பணியில் இருக்கும் நமக்கு மறதி இருக்கலாமா? எப்படி மறந்தாய்?' என்று கேட்டார்.

பிறகு,

'நீ அந்த பிளாஸ்கை எடுத்துக் கொண்டு, அடுத்த வண்டியில் வா. மறதிக்குத் தண்டனை இது! உனக்கு அப்போதுதான் புத்திவரும்' என்றார்.

தந்தை பெரியார் அவர்கள், இப்படிக் கோபமாகப் பேசிக்கொண்டிருந்தபோதே, அவர்கள் யாருக்கும் தெரியாமல், ஒரு தொண்டரைக் கூப்பிட்டு, பிளாஸ்கை எடுத்துவரச் சொல்லி, சைக்கிளில் அனுப்பி வைத்தார் அண்ணன் இராமசுப்பையா. அந்தத் தொண்டரும், வேகமாகப் பறந்து பதினைந்து மணித்துளிகளில் பிளாஸ்குடன் வந்து நின்றார்.

'ஐயா! பிளாஸ்க் வந்துவிட்டது' என்றோம்.

'அப்படியா!' என்று வியப்போடு கேட்டுவிட்டு, தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள்:

'இந்த பிளாஸ்க் ஒன்றும் பெரிதில்லை. பொதுப்பணியில் இருப்பவர்களுக்கு மறதியும், அலட்சிய புத்தியும் இருக்கக்கூடாது. இது மக்கள் சொத்து! அதைப் பேணிக் காப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்!' என்று முடித்தார்.



- என் தொண்டெல்லாம் நம் மக்கள் உலக மக்களைப்போல சரிசமமாக வாழவேண்டும், அறிவிலே முன்னேற வேண்டும் என்பதற்குத் தான்!
- நமது பெண்கள், தங்களைப் பிறவி அடிமை என்று நினைத்துக் கொண்டிருப்பதை மாற்றிக் கொள்ள வேண்டும்!
- நான் ஒரு பகுத்தறிவுவாதி என்று கருதிக் கொண்டிருக்கிறேன். பகுத்தறிவுக்கு ஒத்த எதுவும் எனக்கு விரோதம் அல்ல. பகுத்தறிவுக்கு ஒவ்வாத எதுவும் எனக்கு நட்பும் அல்ல. இதுதான் எனது நிலை!
- மனிதனுடைய ஒழுக்கம், நாணயம், நேர்மை முதலானவை அவற்றை உடைய மனிதனுக்குப் பெருமை அளிப்பது மாத்திரமல்லாமல், அவனைச் சுற்றியுள்ள எல்லா மக்களுக்கும் நன்மையும் அளிக்கும்!

**மலரினும் மெல்லிது மனிதாபிமானம்!**

பேராசிரியர் கல்கியின் மகள் திருமணம். கல்கியே நேரில்போய், தந்தை பெரியாருக்கு அழைப்பிதழ் கொடுத்து, அவசியம் வரவேண்டும் என்று அழைத்தார். தந்தை பெரியாரும் திருமணத்திற்கு வர ஒத்துக் கொண்டார்.

ஆனால் திருமணத்தன்று, தந்தை பெரியார் வரவில்லை; மறுநாள், கல்கியின் வீட்டுக்குப் போனார். கல்கி, தந்தை பெரியாரை அன்புடனும், மகிழ்ச்சியுடனும் வரவேற்றார்.

'ஐயா நேற்று வரவில்லையே; ஊரில் இல்லையா?' என்று கேட்டார் கல்கி.

தந்தை பெரியார், 'நான் ஊரில் தான் இருந்தேன். வேண்டுமென்றே தான் வரவில்லை. என்னை உங்களுக்கும், உங்கள் வீட்டாருக்கும் தெரியும். நீங்கள் யாரும் தப்பாக நினைக்கமாட்டீர்கள். ஆனால், திருமணத்திற்கு வந்திருக்கும் உங்கள் உறவினர்களும், மற்ற சிலரும் நல்ல நிகழ்ச்சியில், கருப்புச்சட்டையோடு நான் வருவதைப் பார்த்து மனம் சுழிக்கக் கூடாதே, என்றுதான் நேற்று வரவில்லை' என்றார்.

'கல்கி' சிரித்துக்கொண்டார்.

மரபுகளையும் மனித நேயத்தையும், காப்பாற்றுவதில் தந்தை பெரியார் எவ்வளவு அக்கறையோடு இருந்திருக்கிறார்! தேவையில்லாமல் மற்றவர்களின் மனம் புண்படக் கூடாது என்று நினைப்பது எவ்வளவு சிறப்பான பண்பு!

தலைவர்களும், பொதுப்பணியாளர்களும் தந்தை பெரியாரின் நம்பிக்கையை - நாணயத்தை - பண்பாட்டை - பண்பைக் கடைப்பிடித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

''செயற்கரிய செய்வார் பெரியார்!''

ஆம், அவர்தாம் பெரியார்!



# இனியர் அண்ணா!

புலவர் இளஞ்செழியன்



அடுக்குமொழிக் குழந்தைக்குத் தந்தை! எந்த
அழகுமொழிக் கும்அவரே அன்னை! அள்ளிக்
கொடுக்குமொழி அத்தனைக்கும் குமணன்! என்றும்
கொச்சைமொழி உதிர்க்காத தலைவன்! சின்னத்
துடுக்குமொழி சொல்லாத இனியன்! அண்ணாத்
துரைமொழிக்கு இணையாய்ஓர் மொழியே இல்லை!
எடுக்குமொழி ஒவ்வொன்றும் எவர்க்கும், எங்கும்
எழுச்சிமொழி கின்றமொழி என்று செரல்வேன்.

விழித்திருந்தும் படித்திருந்தும், நினைத்தி ருந்தும்
வெள்ளைத்தாள் மாளிகையை எழுப்பி வந்தார்!
எழுத்துலகில் புரட்சிசெய்தார்! சமுதா யத்தை
இருட்டுலகில் தள்ளாமல் மீட்டு வந்தார்!
புழுத்தபுழு வாய்நெளிந்த தமிழர் தம்மைப்
புத்துலகில் கொண்டுவந்து சேர்த்தார்! செல்வம்
கொழுத்தவர்பால் சாயாமல், இளைத்தோர் பக்கம்
கொண்டிருந்தார் பெருநட்பு! அவர்தான் அண்ணா!

கொட்டித்தான் கிடந்தசெங்கல், ஏள னங்கள்
கூறித்தான் வந்தவர்கள் நனிவி யக்க,
கட்டித்தான் முடித்தகோ புரமாய் ஆனார்!
கருத்துமணிக் கோபுரங்கள் கொடுத்துப் போனார்!
சுட்டித்தான், சொல்லத்தான், அண்ணா வைப்போல்
சொன்னபடி வெற்றிபெற்ற தலைவர் இல்லை!
தட்டித்தான் அவர்நம்மை எழுப்பா விட்டால்,
தமிழைத்தான் மறந்துநாம் போயி ருப்போம்!

கோடியிலே ஒருவரென்றால், உலகின் எந்தக்
கோடியிலும் அண்ணாபோல் பிறக்க வில்லை!
மாடியிலே பிறக்காத தலைவர், மக்கள்
மனங்களையே மாடியாக்கிக் குடியி ருந்தார்!
தாடியிலே மயங்கியவர்! பெரியார் பின்னால்
தளபதியாய் நடைபோட்ட அறிஞர் அண்ணா
நாடியிலே ஓடுகிறார்! நம்ந ரம்பு
நாளங்கள் அனைத்திலுமே குடியி ருப்பார்!

# எளிமையின் திருவுரு அண்ணா

எளிய குடும்பத்தில் பிறந்து, நல்ல மாணவராக, ஆற்றல்மிகு பேச்சாளராக, உள்ளம் கவர்ந்த பத்திரிகை ஆசிரியராக, நல்ல நூலாசிரியராக, நாடக ஆசிரியராக, நாடக நடிகராக, பண்பட்ட அரசியல்வாதியாக, நாடு போற்றிய முதல் அமைச்சராக ஓங்குபுகழ் எய்தியவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

இவர், ஏழை எளிய மக்களிடையே தம் பேச்சாற்றலால் அறிவுப் புரட்சியை உருவாக்கிய சாமான்யர்களின் தலைவர்; தமிழ் வாக்கிய அமைப்பிலே புதிய நடை கண்டு, எழுச்சிமிகு எழுத்தால், இலட்சக்கணக்கான இளைஞர்களின் இதயங்களைக் கவர்ந்து, எழுத்துலகில் புரட்சியை உண்டாக்கிய மேதை; மோனையும், எதுகையும் விரவிவர, சொல்லை வலையாகக் கொண்டு, கேட்டாரைப் பிணிக்கும் ஆற்றல் இவரிடம் இருந்ததால், இவரைச் சொல்வலை வேட்டுவன் என்றே கற்றோர் போற்றினர்.

இவர் அடக்கத்தின் உரு; தற்பெருமை இல்லாதவர்; தாட்சண்யம் நிறைந்தவர்; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் பண்பாட்டுக் கூறுகளைச் செயல்முறையாக அறிவித்தவர்; ''மாற்றான் வீட்டுத் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு'' என உரைத்து, மாற்றுக் கருத்துடையோரையும் மதித்த சிறந்த ஜனநாயகத் தலைவர்.

ஆடம்பரத்தை அறவே வெறுத்தவர்; எளிமையின் திருவுரு; புகழ்ச்சிச் சொற்களைக் கேட்டு, அதிகமாக மகிழ்ச்சி அடைந்திடவும் மாட்டார்; வசைச் சொற்களைக் கேட்டு, பொங்கி எழவும் மாட்டார்; இரண்டிற்கும் பதில் புன்னகைதான்; எளிமையும், கனிவும் இவருக்குப் பிறவிக்குணம்; இவர் வளர்த்துக் கொண்ட சகிப்புத் தன்மை அனைவருக்கும் வழிகாட்டவல்லது.

தமிழ், தமிழன், தமிழ்நெறி என்றாலே ஒரு தாழ்வு மனப்பான்மை சமூகத்தில் இருந்த கால கட்டத்தில், அண்ணா பொதுவாழ்வில் புகுந்தார். தாம் பெறும் கல்வி தம் சுகபோக வாழ்வுக்கல்ல-சமுதாயத்தைச் செப்பனிட - தாய்த் தமிழை வளர்த்திட- தாய்த் திருநாட்டைத் தலைநிமிர்ந்து நிற்கச் செய்திட-என்று கருதியதனால், படித்துப் பட்டம்பெற்றபின், உத்தியோகம் தேடாமல், பொதுவாழ்விற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். ''மக்களுக்குச் செய்யும் தொண்டே மகேசனுக்குச் செய்யும் தொண்டு'' என்ற எண்ணத்தில் உறுதியாக இருந்து செயல்பட்டார்.

உலகச் சிந்தனையாளர்கள், சமதர்மவாதிகள், பகுத்தறிவுவாதிகள் எழுதிய நூல்களை எல்லாம் படித்தார்; ஓய்வு இல்லாமல் படித்துக் கொண்டே இருந்தார். தமிழ் மக்களின் சிந்தனையில் படிந்து கிடந்த அழுக்குகளை அகற்றி, மறுமலர்ச்சிச் சமுதாயத்தை உருவாக்கத் தம் பேனாவையும், நாவையும் இறுதி மூச்சுவரை பயன்படுத்தினார்.



அண்ணாவின் உருவப்படங்களை பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் திறந்து வைத்தார். (1969)

சமூகச் சீர்திருத்த நாடகங்களை எழுதி, தமிழ்ச் சமுதாயத்தில் விழிப்புணர்வையும் மறுமலர்ச்சியையும் உருவாக்கினார். நாடகங்களை எழுதியது மட்டுமல்ல, சில நாடகங்களில் நடிக்கவும் செய்தார். திரைப்படங்களுக்குக் கதை வசனம் எழுதி, சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பினார்.

சுதந்திரத் திருநாளைத் துக்க நாளாகக் கொள்ளுமாறு, தலைவர் பெரியார் அறிவித்தபோது, ''இந்தத் துணைக் கண்டத்தின்மீது இருந்து வந்த பழிச்சொல்லை, இழிவை, நீக்கும் நாள் துக்கநாள் ஆகாது'' என்று தெளிவுபடுத்தியும், சீனப்போர் நடந்தபோது, இந்தியாவின் ஒற்றுமைப் பணிகளுக்கு முழு ஒத்துழைப்பைத்தந்தும், வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தில் இந்தியாவின் பெருமைக்குப் பெருமை சேர்க்கும்வகையில் கருத்துக்களை வெளியிட்டும், தாய்நாட்டுப் பற்றுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கினார்.

15.9.1909 அன்று காஞ்சிபுரத்தில் எளிய குடும்பத்தில் பிறந்து, ஏழை-எளிய நடுத்தர மக்களிடையே அறிவுப் புரட்சியை உருவாக்கி, மக்கள் நிலை உயர, நினைப்பு உயர அயராது பாடுபட்ட அண்ணா 3.2.1969 அன்று உடலால் நம்மை விட்டுப் பிரிந்தார்; ஒளியாக நம் நெஞ்சில் நிறைந்திருக்கிறார்.

—வ. இராசமனோகரன்



# எல்.ஐ.சி யின் நன்மைதரும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்

இந்திய நாட்டின் முதல் பிரதமர் பண்டித ஜவகர்லால்நேரு அவர்கள் தீர்க்க தரிசனத்துடன் ஆயுள் இன்சூரன்ஸ் வணிகத்தைத் தேசியமய மாக்கி 1956 செப்டம்பரில் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தைத் துவக்கினார்கள்.

**குழு ஆயுள் இன்சூரன்ஸ் திட்டம்**

இந்த நிறுவனம் 32 ஆண்டுகளாக நாட்டின் மூலை முடுக்கில் எல்லாம் ஆயுள் பாதுகாப்பினை மக்கள்பெற, பொதுமக்கள் ஆதரவுடன் உழைத்து வருகிறது. இதுவரை சுமார் 2 கோடி மக்கள் ஆயுள் பாதுகாப்புத் திட்டங்களில் சேர்ந்துள்ளனர். 80 கோடி மக்கள் தொகையில் 60 சத விகிதத்தினர் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கின்றனர். இவர்களால் சேமிப்பு செய்து ஆயுள் பாதுகாப்பு பெறுவது என்பது நடைமுறையில் சாத்தியப்படவில்லை. எனவே, மக்களின் நல்வாழ்வைக் கருத்தில் கொண்டு செயல்படும் நம் அரசு வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் சமுதாயத்தின் வசதியற்ற பிரிவினருக்கு இலவச ஆயுள் பாது காப்பு வழங்குவதன் மூலம் பொரு ளாதார மறு வாழ்வு அளிக்க நட வடிக்கை எடுத்துள்ளது. அதன்படி, இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத் தின் (எல். ஐ. சி.) மூலம் விவசாயத் தொழிலாளர்களுக்கான இலவசக் குழுக் காப்புறுதித் திட்டத்தை அரசு செயல்படுத்துகிறது. இத் தகைய நாடு தழுவிய சமுதாயப் பாதுகாப்புத் திட்டத்தைப் பற்றி 15-8-87-இல், 41-வது சுதந்திர தினப் பேச்சினில் பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் அறிவித் தார்கள்.

அதன்படி, முதல் கட்டமாக 3 கோடி நிலமற்ற விவசாயத் தொழி லாளர்களுக்கு எல். ஐ. சி. சமுதாய இலவசக் குழு ஆயுள் பாதுகாப் பினை வழங்க முன் வந்துள்ளது. புள்ளி விவரங்களின் அடிப்படை யில் நிலமற்ற ஒரு விவசாயத்தொழி லாளி சராசரி ரூ.800கடன் பட்டுள் ளான். இந்நிலையில் இறப்பு ஏற் படுமாயின், குடும்பத் தலைவனின் தின வருமானம் நின்று விடுவதுடன், குடும்பத்தார் கடன் தொல்லைக் கும் ஆளாகின்றனர். இந்த இக் கட்டான நிலையிலிருந்து விடுபட, தலைவனை இழந்து வாடும் நில மற்ற விவசாயத் தொழிலாளர் குடும்பத்தினருக்கு லைஃப் இன்சூ ரன்ஸ் கார்ப்பொரேஷன் நிறுவனம் ரூ. 1,000 ஆயுள் பாதுகாப்புத் தொகையை இலவசமாக வழங்கி உதவுகின்றது.

இந்த இலவசப் பாதுகாப்புத் திட் டத்தில் சேர, எந்தவிதப் பிரீமியப் பணமும் செலுத்தத் தேவை இல்லை ஆனால், தான் ஒரு நிலமற்ற விவ சாயத் தொழிலாளி என்று கிராம அதிகாரியின் பதிவேட்டில் பதிந்து கொண்டு, இலவசக் காப்பீட்டுக் கான அடையாள அட்டையைப் பெற்று வைத்துக் கொள்ள வேண் டும். அந்த அட்டையில், விவசாயத் தொழிலாளி பெயர், வயது, தந்தை பெயர், முகவரி, வாரிசுதாரர் விவரம், குடும்ப அட்டை எண், காப்பீடு முடிவடையும் தேதி முதலிய விவரங்கள் இருக்கும்; குடும்பத் தலைவர் இறந்து விட் டால், வாரிசுதாரர் விண்ணப்பப் படிவத்தை மரணச் சான்றிதழ், காப்பீட்டு அடையாள அட்டை ஆகியவற்றுடன் எல். ஐ. சி. அலு வலகத்திற்கு அனுப்ப வேண்டும். கிராம அதிகாரி விண்ணப்பப்படிவத் தில் கையொப்பம் இடுவார். காப் பீடான ரூ. 1000 வாரிசுதாரருக்கு எல். ஐ. சி. யால் வழங்கப்படும்.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட் டத்தின்கீழ், கடன் பெறுவோர்க்கான குழு ஆயுள் பாதுகாப்பு:**

அடுத்து, அரசாங்கம், வறுமைக் கோட்டின்கீழ் உள்ளவர்கள், அதே சமயம்,போதிய வருவாயினை ஈட்டு வதற்கான வழி முறைகளை ஆராய்ந்து, ஐ. ஆர். டி. பி. கடன்



## புதுக்கோட்டையில் புதிய எல். ஐ. சி. கட்டடம்

புதுக்கோட்டையில் வடக்குவீதியில் எல்.ஐ.சி. க்குச் சொந்தமாக ரூ. 12 இலட்சம் செலவில் கட்டப்பட்ட புதிய கட்டடத்தை மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு ப. சிதம்பரம் அவர்கள் 21.8.'88 அன்று திறந்து வைத்தார். விழாவிற்கு இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தலைவர் திரு ஆர். நாராயணன் தலைமை வகித்தார். அமைச்சர் கட்டடத்தைத் திறந்து குத்துவிளக்கு ஏற்றி வைத்து, அலுவலகத்திலுள்ள கம்ப்யூட்டரைப் பார்வையிட்டு சிறப் புரையாற்றினார்.

**விழாவில், குரூப் இன்சூரன்ஸ் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் நிலமற்ற விவசாயத் தொழிலாளரின் குடும்பத்தினருக்கு ரூ 1,000-க்கான காசோலையும், எல். ஐ. சி. வளர்ச்சி அதிகாரிகள் மற்றும் முகவர்களுக்குப் பாராட்டு இதழ்களையும் அமைச்சர் வழங்கினார்.**

நிவாரணத் திட்டத்தையும் வகுத்துள்ளது. இதனை ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் என்று கூறுகின்றோம். இத்திட்டம் ஊராட்சி ஒன்றியம் மூலம் அமல் படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் கடன் பெறுவோர் ஒரு சில ஆண்டுகளுக்குள் வருவாயினைப் பெருக்கிடும் தொழில்களைத் துவக்கிப் பொருளாதார முன்னேற்றம் அடைவார்கள். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டக் கடன் பெறுபவர் அகால மரணமடைந்தால், அவர் குடும்பத்தினர் கடன் தொல்லையிலிருந்து விடுபடவும், துவக்கப்பட்ட தொழில் முயற்சியினைத் தொடரவும் உதவுவதே, எல்.ஐ.சி.யின் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் பெறுவோருக்கான குழு ஆயுள் பாதுகாப்புத் திட்டமாகும். இத்திட்டத்தினால் பயன் பெறுவோர் 30 லட்சத்திற்கும் அதிகமாகும். இத்திட்டம் 1-4-88 முதல் செயல்படுத்தப்படுகிறது. இதன் ஆயுள் பாதுகாப்புத் தொகை ரூ. 3,000 ஆகும். கடன் பெறுபவர் 18 வயதுக்கு மேல் 60 வயது வரை இத்திட்டத்தில் சேரலாம். அவர் கடன் பெற்ற நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு ஆயுள் பாதுகாப்பு வழங்கப்படும். கடன் பெறுவோர் விபத்தில் இறந்தால், இரட்டிப்புத் தொகையாக ரூ. 6,000 குடும்பத்தாருக்கு வழங்கப்படும். இந்தக் குழு ஆயுள் பாதுகாப்புப் பெற ஐ. ஆர். டி. பி. கடன் பெறுவோர் எவ்விதப் பிரிமியமும் செலுத்தத் தேவை இல்லை. இதற்கான பிரிமியத்தினை மத்திய அரசும், மாநில அரசும் சரிபாதியாக ஏற்று எல்.ஐ.சிக்குத் தந்து விடும்.

எல். ஐ. சி. குழு ஆயுள் பாதுகாப்பு ரூ. 3,000 பெறுவதற்கு ஐ. ஆர். டி. பி. கடன் பெற்றோர் தங்கள் பெயரினை மாவட்ட ஊரக வளர்ச்சித் திட்ட (டி. ஆர். டி. ஏ.) தாசில்தாரிடம் பதிவதுடன், தங்கள் வாரிசுதாரின் பெயரினையும்பதிந்து வைத்துக் கொள்ள வேண்டும். ஐ. ஆர். டி. பி. கடன்தாரர் கடன் பெற்ற ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் இறக்க நேரிட்டால், வாரிசுதாரர், மரணச் சான்றிதழ், காப்பீட்டு அடையாள அட்டை ஆகிய இரண்டையும் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மூலம் எல். ஐ. சி. கோட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தால், ரூ.3,000 பாதுகாப்புத் தொகையை வழங்க எல். ஐ. சி நடவடிக்கை எடுக்கும்.

மத்திய அரசாங்கம் மற்றுமொரு குழு ஆயுள் பாதுகாப்புத் திட்டத்தினை எல். ஐ. சி. மூலம் வழங்குகின்றது. இந்த மூன்றாவது திட்டம் குறிப்பிட்ட தொழிலாளி வர்க்கத்தினருக்கென உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் பயனடையும் தொழிலாளர் மூன்று வகைப்படுவர்.

1. நெசவுத் தொழிலாளர்.
2. ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள்.
3. சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள்.

இத்திட்டத்தில் வழங்கும் ஆயுள் பாதுகாப்புத் தொகை ரூ. 3,000 ஆகும். இதற்கான பிரிமியத்தில் சரிபாதி (50 சதம்) மத்திய அரசாங்கம் எல். ஐ. சி.க்குத் தந்து விடும். இந்தச் சலுகையுடன் கூடிய குழு ஆயுள் பாதுகாப்பைப் பெற மேற்குறிப்பிட்ட தொழிலாள வர்க்கத்தினர் தங்கள் சங்கங்கள் மூலமாக எல். ஐ. சி. கோட்ட அலுவலகங்களையோ அல்லது அருகில் உள்ள கிளை அலுவலகங்களையோ அணுகலாம்.

மத்திய அரசு தந்துள்ள ரூ. 100 கோடியினை எல். ஐ. சி. 'சமுதாய நலக் குழு ஆயுள் பாதுகாப்பு நிதி'' என ஒதுக்கீடு செய்து, சலுகையுடன் கூடிய குறைந்த அளவு பிரிமிய குழு ஆயுள் பாதுகாப்புத் திட்டங்களை வகுத்துள்ளது. தொழிலாளர் சங்கங்கள் முயற்சித்து, சங்க உறுப்பினர்கள் பயன் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்க முன் வர வேண்டும்.

தமிழக அரசின் முயற்சியின் காரணமாக 1,25,000 நெசவாளத் தொழிலாளர்கள் ரூ. 3,000க்கான குழு ஆயுள் பாதுகாப்புத் திட்டத்தினைப் பெற்றுள்ளார்கள். எந்த ஒரு நெசவாளரும் இறக்க நேரிடின் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் தகவல் அறிந்து எல். ஐ. சி. ரூ. 3,000-க்கான காசோலையை அனுப்பி வைத்து உதவுகிறது. தமிழக அரசின் முன்னோடி சமுதாயத் திட்டங்களுள் நெசவாளர் குழு ஆயுள் பாதுகாப்புத் திட்டம் முக்கிய அம்சம் வகிக்கிறது.

**சமுதாய நல சேமிப்புத் திட்டம்**

தமிழக அரசால் எல். ஐ. சி.யின் உதவியுடன் செயல்படுத்தப்படும் இன்னொரு திட்டம் சமுதாய நல சேமிப்புத் திட்டமாகும். தனிப்பட்ட முறையில் நலிந்த பிரிவைச் சேர்ந்த எவரும் மாதம் ரூ. 10 சேமித்துப் பயன் பெறலாம். இத்திட்டம் கிராம அதிகாரிகள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. மாவட்ட இன்சூரன்ஸ் திட்ட தாசில்தார் கண்காணிப்பாளராகச் செயல்படுவார். இத்திட்டத்தில் சேருபவர்களுக்கென்று சேமிப்புப் புத்தகத்தைக் கிராம அதிகாரி வழங்குவார். செலுத்தும் தொகைகள் இதில் பதிவு செய்யப்படும். 58 வயதில், இத்திட்டத்தினால் சேமிக்கப்பட்ட பணமும், வட்டியும் சேர்த்து அரசாங்கம் உறுப்பினருக்கு வழங்கும். இத்திட்டத்தில் சேர்ந்த நபர் இறக்க நேரிடின் குழு ஆயுள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் எல்.ஐ.சி. ரூ. 5,000க்கான தொகையினை அரசாங்கத்தின் மூலம் அனுப்பி வைக்கும். நிரந்தர வேலையில்லாத தொழிலாளர்கள் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் பயனடையலாம்.

**எம். குற்றாலிங்கம்**

## கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு நிதி ஒதுக்கீடு !

தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்திற்கு 1988-89-ஆம் ஆண்டிற்கு, பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு ரூ. 13.57 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இது சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகையை விட ரூபாய் 1.27 கோடி அதிகமாகும்.

தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் இந்தத் தொகையைக் கொண்டு நடப்பு ஆண்டில் புதிதாக 59,100 கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையில் பல திட்டங்களைச் செயல்படுத்த உள்ளது. இவ்வாண்டு கதர் உற்பத்தி ரூ. 19.00 கோடி மதிப்பிற்கு உயரும்; கதர் விற்பனை மட்டும் இவ்வாண்டு ரூபாய் 21.50 கோடி வரை எதிர்பார்க்கப்படுகிறது.

நடப்பு ஆண்டில் கிராமத்தொழில் பொருட்களின் உற்பத்தி இலக்கு ரூபாய் 170.00 கோடியாகும். பனைத்தொழிலில் மட்டும் 30,000 கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், ரூபாய் 1.34 கோடி முதலீடு செய்யப்பட உள்ளது.

'கிராமத் தொழில்' என்பதற்கு திருத்தம் வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, கதர் கிராமத்தொழில் ஆணைக்குழு இது வரை வழக்கமாக நிறைவேற்றிவரும் தொழில்கள் அல்லாமல், புதுவகைத் தொழில்களாகிய கல் உடைத்தல், கற்களிலிருந்து வேலைப்பாடுடைய பொருட்கள் உற்பத்தி செய்தல், சேவை அடிப்படையில் அமைந்துள்ள சலவைத் தொழில், முடி திருத்தும் தொழில், தண்ணீர் பைப்புகள் அமைத்தல், பழுது பார்த்தல் போன்ற தொழில்களை தொடங்குவதற்கு 88-89-ஆம் ஆண்டிற்கு ரூபாய் 25.87 இலட்சம் ஒதுக்கியுள்ளது.



# காய்கறி உற்பத்தியில் ஒரு சாதனை

கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் 25 அடி × 15 அடி × 40 அடி ஆழம் உள்ள பாசனக் கிணறு, 3 குதிரை வேக மின் சார மோட்டார் இணைப்புடன் கூடியது. இதனைச் சுற்றி சர்வே நிர். 239, 240, 243க்கு 2.50 ஏக்கர் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான புஞ்சை நிலம் உள்ளது.

இந்த நிலத்தைப் பயன்படுத்தி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பால் அருணாசலபுரம் என்னும் கிராமத்தைச் சேர்நத நிலமற்ற ஆதிதிராவிடர் விவசாயக் கூலிகளாகிய திரு முருகராஜ், திரு. திருமூர்த்தி ஆகிய இருவரைத் தேர்வு செய்து, நிலத்தை உழுது சீர்திருத்தம் செய்யும் பணி 26.3.88இல் துவக்கப்பட்டது.

காய்கறி உற்பத்தி செய்ய தேர்வு செய்யப்பட்ட இரண்டு பேருக்கும் தலா ரூ. 1500- (ரூ.1000-கடன், ரூ.500 -மான்யம்) வீதம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மூலம் 2.4.88இல் கடன் வழங்கப்பட்டது. 2.4.88 அன்று அன்றைய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு கா. பொன்னுசாமி அவர்களால், திட்ட அலுவலர் திரு தீனபந்து முன்னிலையில் இந்நிலத்தில் காய்கறி நாற்றுக்கள் நடப்பட்டு காய்கறி உற்பத்தித் தோட்டம் துவக்கி வைக்கப்பட்டது.

முதல் கட்டமாக 1.50 ஏக்கரில் கத்தரி, தக்காளி, சீனி அவரை, வெண்டை, அகத்திக்கீரை, முருங்கை, வாழை, பப்பாளி, முட்டைக்கோஸ், பூசணிக்காய், பரங்கிக்காய், மொச்சை, பீர்க்கங்காய், சுரைக்காய், புடலங்காய் போன்ற 15 வகைக் காய்கறிகள் பயிர் செய்யப்பட்டுள்ளன. 2.4.88இல் நடப்பட்ட கத்தரி, வெண்டை, சீனி அவரை, 45 நாட்களிலேயே பலனுக்கு வந்துவிட்டன. இந்தக் காய்கறிகளுடன் தண்டுக் கீரையும் சேர்த்து, 15.5.88இல் மாண்புமிகு மத்திய தொழில் துறை இணை அமைச்சர் திரு எம். அருணாசலம், அவர்களால் 11 முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையங்களுக்குக் காய்கறிகள் விநியோகம் துவக்கி வைக்கப்பட்டது. மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சியரின் இப்புதிய திட்டத்தையும் முயற்சியையும் வெகுவாகப் பாராட்டி, இத்திட்டத்திற்குப் 'பொன்னுச்சாமி திட்டம்'' என்று பெயர் சூட்டினார்.

கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் மொத்தம் 31 முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையங்கள் செயல்படுகின்றன. அனைத்து மையங்களுக்கும் மீதமிருந்த 1.00 ஏக்கர் இடத்தில் பயிர்செய்யப்பட்ட காய்கறிகள் கிடைத்தவுடன் காய்கறிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மையங்களுக்கு காய்கறிகள் வழங்கும் பணியை பால்அருணாசலபுரத்தைச் சேர்ந்த (1) ரா.சேதுராஜ் 7 மையங்களிலும், 2) சண்முகைய்யா 12 மையங்களிலும், (3) வீ.பண்டாரம் 12 மையங்களிலும், செய்து வருகின்றனர்.

இவர்களுக்கு மாத ஊதியமாகத் தலா ரூ.300 காய்கறிஉற்பத்தியாளர்கள் வழங்கி வருகின்றனர். காய்கறி உற்பத்தி செய்யும் திரு.முருகராஜ், அவரது மனைவி திருமதி,சமுத்திரம், அவரது அண்ணன் திரு. மதுரை வீரன், இவரது மனைவி திருமதி, முப்பிடாது, மற்றும் திரு.மூர்த்தி, இவரது மனைவி திருமதி சின்னத்தாய் ஆகியோர் காய்கறி உற்பத்தித் தோட்டத்தில் நாள்தோறும் வேலை செய்கின்றனர். காலை 6 மணி முதல் 7 மணி வரை காய்கறிகளைப் பறித்து, 7.30 மணிக்குள் காய்கறிகளை மையம் வாரியாக தனித்தனிப் பைகளில் எடைபோட்டு

7.30 மணி முதல் 10.30 மணிக்குள் அனைத்து மையங்களுக்கும், சைக்கிள்களில் இதற்கான மூன்று பணியாளர்கள் விநியோகம் செய்து வருகின்றனர். இந்த மூன்று பணியாளர்களும் பிற்பகலில் 1 மணி முதல் 6 மணி வரை காய்கறி உற்பத்தித் தோட்டத்தில், பல்வேறு பணிகளையும் மேற்கொள்கின்றனர். பெண் பணியாளர்கள் தற்சமயம் வாரம் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் கூலியாகப் பெறுகின்றனர். காய்கறி விநியோகம் செய்யும் மூன்று நபர்களுக்கும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மானியத்தோடு கூடிய கடன் மூலம் விரைவில் சைக்கிள் வழங்கப்படவுள்ளது.



ஒன்றியத்திற்குச் சொந்தமான மேற்படி 2.50 ஏக்கர் நிலத்திற்கு ஆண்டுக் குத்தகையாக முதல் ஆண்டிற்கு ரூ.500, அடுத்த ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ. 1000 வீதம் மூன்றாண்டுகளுக்குக் காய்கறி உற்பத்தி செய்து, தரமான, பச்சைக் காய்கறிகளை ஆண்டு முழுவதும் ஒரே நிர்ணய நிலையில் வழங்கி வர ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. முதல் ஆண்டுக் குத்தகை செலுத்தப்பட்டுவிட்டது. காய்கறிகள் தக்காளி கிலோ 2.50 வீதமும், இதர காய்கறிகள் கிலோ ரூ.2 வீதமும் ஆண்டு முழுவதும் வழங்கப்படவுள்ளன. வாரத்திற்கு மூன்று தினங்கள் காய்கறிகளுடன் கீரை வழங்கப்படுகிறது. மின் மோட்டாருக்குரிய கட்டணம் ஒப்பந்தக்காரர்களே செலுத்தி வருகின்றனர்.

காய்கறி உற்பத்தி செய்து வழங்கிய வகையில் கீழே கண்டுள்ளவாறு பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

1) 15.5.88 முதல் 31.5.88 முடிய காய்கறி வழங்கியதற்குரிய தொகை ரூ. 1206.85, (6.6.88இல்)

2) 1.6.88 முதல் 15.6.88முடிய ரூ. 1529.25 (17.6.88இல்)

3) 16.6.88 முதல் 30.6.88முடிய ரூ. 1315.45 (4.7.88இல்)

31 மையங்களுக்கும் மாதம் ஒன்றுக்கு சராசரி ரூ. 2,900 மதிப்புள்ள தரமான பச்சைக்காய்கறிகள் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படுகின்றன. 2.50 ஏக்கர் முழுவதிலும் காய்கறிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ள நிலையில், 31 மையங்களின் தேவைக்கும் மேலாகக் காய்கறிகள் கிடைப்பதைக் கருத்தில்கொண்டு, கடையநல்லூர் நகராட்சியின் நிர்வாகத்தில் உள்ள 21 குழந்தைகள் மையங்கள் மற்றும் 2 பள்ளி மதிய உணவு மையங்களுக்கும் விரைவில் காய்கறி விநியோகம் விரிவு படுத்தப்பட உள்ளது.



காய்கறி உற்பத்தி செய்து வழங்கும் திருவாளர்கள் முருகராஜ், திருமூர்த்தி ஆகிய இருவருக்கும், மாதம் ஒன்றுக்கு தலா ரூ. 500 நிகர வருமானம் கிடைக்கும் வாய்ப்புள்ளது. இவர்கள் இருவரும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1987-88ஆம் ஆண்டில் கல் உடைப்போர் கடன் தலா ரூ. 1500 (கடன் ரூ. 1000, மானியம் ரூ. 500) பெற்றுள்ளனர். காய்கறி உற்பத்திசெய்ய 1988-89இல்பெற்ற வங்கிக்கடனை மாதத் தவணை ரூ. 40 வீதம் 30 தவணைகளில் திரும்பச் செலுத்திவிடுவார்கள்.

மேற்கண்ட திட்டத்தின் வாயிலாக, கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 31 மையங்களிலுள்ள 1,789 குழந்தைகளும், 180 முதியவர்களும் நாள் தோறும் தாங்கள் பெறும் சத்துணவில் தரமான பல்வேறு வகை பச்சைக் காய்கறிகளுடன் கூடிய சுவையான உணவு பெறுகின்றனர். ஒன்பது ஏழை ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள் நிரந்தரமான வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

# நூல் நயம்



## விக்கிரமன் கதைகள்

ஆசிரியர் : டாக்டர் விக்கிரமன்

வெளியீடு: விக்கிரமன் பதிப்பகம்,
8, ஜெய்சங்கர்தெரு,
சென்னை-600 033.

விலை : ரூ. 36 பக்: 488

தமிழகத்தின் தலைசிறந்த புதின எழுத்தாளர் டாக்டர் விக்கிரமன் 1945 முதல் 1985 வரையிலான கால எல்லையில் 'அமுதசுரபி' போன்ற ஏடுகளில் எழுதிய சிறந்த 30 சிறுகதைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர் தாம் எழுதிய சிறு கதைகளைக் காலத்தை அளவு கோலாகக் கொண்டு நான்கு தொகுதிகளாகப் பிரித்து, லட்சுமி போன்ற சிறந்த எழுத்துச் சிற்பிகளைக் கொண்டு கணிப்புரை வடிக்கச் செய்து, ஒவ்வொரு கதைத் தொகுதிக்குமுன் நூலில் தந்திருப்பது, சந்தனம், கற்கண்டு, மலர் தந்து வரவேற்பது போன்ற உணர்வைப் படிப்போருக்கு ஏற்படுத்துகிறது.

இந்நூலின் வாழ்க்கை உண்மைகளை உணர்வு பூர்வமாக ஆசிரியர் சொல்லோவியம் ஆக்கியுள்ளார்.

'வாணக்காரன்'—முதல்கதையே படிப்போர் நெஞ்சில் செம்மை ஒளி பாய்ச்சுகிறது. 'தொழிலுக்குத் திறமை மட்டுமல்ல, தூய்மையும் வேண்டும் என்பதை உள்ளம் உருக்கும் சம்பவங்களுடன் விவரிக்கின்றது.

குருவாக, தந்தையாகக் கருதி இசை பயிலும் மாணவி வாணியை மனதார நேசித்து, சூழ்நிலைகாரணமாகத் தவறான எண்ணத்துடன் கள்ளங் கபடம் அறியாத அப் பெண்ணிடம் பழக முயன்றதை மனச்சான்று இடித்துரைத்ததும், தனக்குத்தானே தண்டனை கொடுத்துக் கொண்டு, ஒழுக்க நெறி காத்த, சங்கீத முதல்வர் 'கேசவராம்' 'நல்லதோர் வீணை'' யில் இமயமாக உயர்கிறார். மனமே எல்லாம்' என்பதைப் . 'பொல்லாத மனசு'' உருக்கத்துடன் எடுத்துரைக்கின்றது.

வரலாற்று நினைவுகளை எழுப்பும் 'சுவர்ணக்கிளி';'வீரமும் ஈரமும் ஆகிய கதைகளும், சமூக நிகழ்ச்சிகளைச் சுவைபடப் படம் பிடித்துக் காட்டும் ஏனைய கதைகளும் படிப்போர் இதயத்தைப் பண்படுத்த வல்லவை.

இவருடைய கதைகளில் சொல்லழகும், நடையழகும், கருத்தழகும் களிநடம் புரிகின்றன. ஒழுக்க நெறி நீக்கமற நிறைந்திருக்கிறது. பெண்மை பெருமிதத்துடன் போற்றப்படுகிறது.

வண்ணமுகப்பு, உள்ளே அழகான ஓவியங்கள் நூலுக்கு அழகு சேர்க்கின்றன.




டாக்டர் விக்கிரமன் சிறுகதை இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள தொண்டிற்கு இந்நூல், சிறந்த எடுத்துக்காட்டு.

—வ. இராசமனோகரன்

## ஜீவாவின் தமிழ்ப் பணிகள்

ஆசிரியர் : அ. சீனிவாசன்

வெளியீடு: நியூ செஞ்சுரி புக்அவுஸ்
பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

விலை : ரூ. 10. பக்: 136.

ஜீவா, அன்னைத் தமிழுக்கு ஆற்றிய அரும்பணிகளை அலசி ஆராய்கிறது இந்நூல்.

ஜீவா தமிழைப் படித்தார்-ஜீவா தமிழைப் பேசினார் - ஜீவாவின் தமிழ் எழுத்துப் பணிகள் என்று மூன்று தலைப்புகளில் இந்நூல், முழுமை பெற்றுள்ளது.

''ஜீவா இந்திய நாட்டின் தேசிய விடுதலைப்போராட்டத்தில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டவர். அவர் ஒரு தீவிரமான தேசியவாதி, ஒரு தீவிரமான அரசியல்வாதி என்னும் முறையில், ஒரு புரட்சிகர ஜனநாயகவாதியாகத் தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கி, பொதுவுடைமைவாதியாக வளர்ந்தவர் என்னும் முறையில் அவர் தமிழ் இலக்கியங்களைப் படித்தார். தமிழ் இலக்கியங்களைப் பற்றி மக்களிடம் பேசினார். தமிழில் பல கருத்துரைகளையும், கட்டுரைகளையும், சிறு நூல்களையும் எழுதி தமிழ் மக்களுக்கு அர்ப்பணம் செய்தார்.''

-என்று தொடக்கத்திலேயே ஜீவாவைப் படம் பிடித்து விடுகிறார் நூலாசிரியர்.

நூல் முழுவதும் ஜீவாவின் தமிழார்வம், தமிழ்ப்பற்று, சொல்லாற்றல் எல்லாம் அழகுறத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. இறுதியாக ஜீவாவின் படைப்பாற்றலை எடுத்துக் காட்டுகிறார் ஆசிரியர். படிக்கப்படிக்கச் சுவையூட்டும் பகுதிகள்; எல்லாவற்றுக்கும் மேலாக நல்ல தமிழ்நடை, நூலுக்கு அணி சேர்க்கின்றது.

— பி.வி. கிரி.

## பாட்டாளிகளைப் பாடிய பாவலர்கள்

ஆசிரியர் : ஆர். நல்லகண்ணு
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட். 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட். சென்னை-600 098.

விலை ரூ. 11. பக்:140.

சென்னைப் பல்கலைக் கழக ஆதரவில் நடைபெற்ற பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் நினைவு அறக்கட்டளைச் சொற் பொழிவுகளின் தொகுப்பு இந்நூல். திரு ஆர். நல்லகண்ணு, கவிஞர்கள் தமிழ்ஒளி, வெ. நா. திருமூர்த்தி, பாவலர் வரதராஜன் ஆகியோர் களின் படைப்புகளை இந்நூலில் ஆராய்ந்துள்ளார்.

'காலம் நமக்குக்
கதை சொல்லப் போகிறது
ஓலம் இடாதீர்

உதயம் பிறக்கிறது'—என்று அணுசக்தி யுகத்தின் விளைவைப் படம் பிடித்துக் காட்டும் தமிழ் ஒளியின் கவிதை வரிகளையும், கவிஞர் வெ.நா. திரு மூர்த்தியின் பட்டாளியின் குரலாக ஒலிக்கும் கவிதைகளையும், ஏழை மக்களின் ஏக்கங்களை இசையோடு சேர்த்து எதிரொலித்த பாவலர் வரதராஜனின் பாடல் நலங்களை யும் அருமையாகத் திறனாய்வு செய்துள்ளார். முற்போக்குச் சிந்தனையாளர்களைக் கவரும் நூல் இது.

—மாமூலன்

## குடும்ப நலப் பாடல்கள்

ஆசிரியர் : கானதாசன்

வெளியீடு: ''மழலைச் செல்வம்'' வெளியீடு சென்னை-600 016.

விலை ரூ. 2. பக்:14.

நாட்டின் இன்றைய நிலைமைக்கு ஏற்ப, குடும்பக் கட்டுப்பாடு பற்றிய அனைத்துக் கருத்துக்களையும் தன் நயமிகு கவிதைகளில் - நாகரிகமாக எடுத்துரைக்கின்றார், இந்நூலா சிரியர்.

பிறந்தபின், வளர்க்க இயலாமல் குழந்தைகளை வறுமைப் பேயின் பிடியில் வாட விடுவதைவிட, பிற வாமல் தடுப்பதே சாலச் சிறந்தது என்ற கருத்து கவிதைதோறும் காணப் பெறுகின்றது.

பாடல்கள் திரை இசை மெட்டில் அமைந்திருப்பதால் பலராலும் பல இடங்களிலும் குறிப்பாக, குடும்பக் கட்டுப்பாடு தொடர் பான கருத்தரங்குகளிலும் கவி யரங்குகளிலும் விழாக்களிலும் இசைத்திடச் செய்யலாம்.

நூல்நயம் பகுதிக்குப் புத்தகம் அனுப்புவோர் இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டுகிறோம்.

—ஆசிரியர்

## வேர்கள்

ஆசிரியர் : க. பொ. இளம்வழுதி.

வெளியீடு: முத்துப் பதிப்பகம், 20, வ.உ.சி. தெரு, விழுப்புரம்-605 602.

விலை ரூ. 13. பக்: 136.

நாட்டின் உரிமைப் போராட்டத் தில் தம் உயிரைப் பணயம் வைத் துப் போராடிப் புகழுடம்பெய்திய பல்வேறு வீரர்களை வெளிச்சத் துக்குக் கொணரும் கவிதை நூல்.

அண்ணல் காந்தி, நேத்தாஜி, லாலா லஜபதிராய், பெரியார், ராணிலட்சுமிபாய்,வேலுநாச்சியார், பாபுகான், மங்கல்பாண்டே, ராஜ் பால், விசுவநாததாஸ் முதலியவர் களை, சுதந்திர மரம் நின்று நிலை பெறுதற்குக் காரணமான வேர் களாக உருவகித்து,அழகுபட,நயமுற, சொல்லிச் செல்கின்றார், நூலாசிரி யர்.

நாட்டுக்கு நலம் சேர்த்த நல்ல வர்களின் தொண்டும் உழைப்பும் தெள்ளத் தெளிவாகப் படம்பிடித் துக் காட்டப்பட்டுள்ளன. படிப் போர்க்கு எழுச்சியையும் நாட்டுப் பற்றையும் ஊட்டவல்ல சிறந்த படைப்பு.

## அன்னை மீனாட்சி அருள்மணி நூறு

ஆசிரியர் : மு. இராமசாமி.

வெளியீடு: இரா. சரசுவதி, பிளாட் எண். 465. கோகுலம் காலனி, காஜாமலை, திருச்சி-620 023.

விலை : ரூ. 12. பக்: 114

அன்னை மீனாட்சியின் அருள் திறத்தினைப் புகழ்ந்து பரவும் வகையில், இன்றைய காலத்துக்கு ஏற்ற கருத்துகளை எளிய முறை யில் சொல்லிச் செல்கின்றார் ஆசிரியர். நூறு பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அறம், மக்கட்பேறு, அன்பு, நன்றி மறவாமை, இன் சொல் கூறல், ஒழுக்கம், ஈகை, பயனில சொல்லாமை முதலிய தலைப்புகள் உலகப் பொது மறையை ஒட்டியே அமைந்துள் ளன.

அன்பு, அடக்கம், பொறுமை போன்ற உயர் பண்புகள், உயிர னைய ஒழுக்கம் எல்லாம் மறந்து கொண்டே வரும் இந்நாளில் இவற்றை நினைவூட்டி வலியுறுத்து கின்றன இப்பாடல்கள்.

அன்னை மீனாட்சியின் அருள் பாடுவதோடு, காலத்துக்கு ஏற்ற கருத்துக்களையும் நன்முறையில் கூறும் இக்கவிதை நூல், படித்துப் பயன் பெறத்தக்கது.

—டாக்டர்
சிவ அரசி முத்துக்காளத்தி

## இருதயம் ஒரு புதிர்

ஆசிரியர்: டாக்டர் எஸ். ராஜா

வெளியீடு: நியுசெஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி. சிட்கோ இண்டஸ்டி ரியல் எஸ்டேட் சென்னை-600098.

விலை: ரூ.10.00 பக்கம்: 123

வாய்க்குள் நுழையாத மருத்து வச் சொற்களை விலக்கி, எளிய தமிழில் அனைவரும் படித்துப் பயன்பெறும் வண்ணம் இந்நூலை எழுதியுள்ளார் ஆசிரியர். இருதயத் தில் ஏற்படும் பலவித நோய்களின் தன்மைகள், அவற்றிற்கான கார ணங்கள் ஆகியவை விளக்கப் பட்டுள்ளன. நகைச்சுவை மிளிர, ஆர்வத்தைத் தூண்டும் வண்ணம் எழுதப்பட்டிருக்கிறது இந்நூல்.

## அறிவியலின் அண்மைக்காலச் சாதனைகள்

ஆசிரியர்: டாக்டர் மு. முத்துக் காளத்தி
விற்பனை உரிமை: பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை-600108

விலை: ரூ.9.00 பக்கம்: 84

இது கம்ப்யூட்டர் யுகம்.

கம்ப்யூட்டர்கள் எத்தனைவகை, அவை எப்படி நுணுக்கமாகப் பயன் படுத்தப்படுகின்றன, விண்வெளி ஆய்வு, சந்திரமண்டல ஆராய்ச்சி போன்ற எத்தனை வகைகளில் கம்ப்யூட்டர் நமக்கு உதவுகின்றது என்னும் விவரங்கள் இந்நூலில் தெளிவாக்கப்பட்டுள்ளன. படித் துப் பயன் பெறத்தக்க நூல்.

—அ. மருதவிநாயகம்.

## நூலகம்

''எந்த வீட்டில் நூலகம் இருக் கிறதோ அந்த வீட்டில் ஆன்மா இருக்கிறது''

—பிளேட்டோ




ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புறுதித் திட்டம் மத்திய அரசின் முழு உதவியுடன் 1983 ஆகஸ்டு மாதத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் நோக்கம் ஆண்டுக்குக் குறைந்தது 100 நாட்களுக்கு நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புத் தருவதும், அதன் மூலம் பொது மக்களுக்குப்பயன்தரும் நிலையான திட்டங்களைச் செயல்படுத்துவதுமாகும். இத்திட்டத்தின் மூலம் கிராமப்புற மக்களுக்கு ஒரு நிரந்தர வேலைவாய்ப்பு ஏற்பட உதவுவதுடன் பொருளாதாரம் மற்றும் சுற்றுப்புறச் சூழ்நிலை மேம்பாடு அடைய வழிவகை செய்கிறது. இத்திட்டத்திற்கான முழுத் தொகையும் மத்திய அரசு உதவித் தொகையாகத் தருகிறது.

கிராமங்களில் உள்ள நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டி, ஒப்பந்த முறையில் செயல்படுத்துவதைத் தவிர்த்து, பணிகள் இவர்கள் மூலம் நேரடியாகவே செயல் படுத்தப் படுகின்றன.இத்திட்டத்தில் செலவிடப்படும் தொகையில் 50 சதவிகிதத்திற்குக் குறையாமல் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. இந்த ஊதியத்தில் நாளொன்றுக்கு அரசு நிர்ணயித்துள்ள குறைந்த பட்ச ஊதியமாக ரூ. 10க்குக்குறையாமல் ஊதியம் தரப்படுகிறது. இந்த ஊதியத்தொகையில் நாளொரன்றுக்கு ஆள் ஒன்றுக்கு ஒரு கிலோ அரிசி, மற்றும் ½ கிலோ கோதுமை குறைந்தவிலையில் தரப்படுகின்றன. மீதி ஊதியத் தொகை பணமாகத் தரப்படுகிறது.

பொதுப் பணித்துறையில் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டத்தின் கீழ் புதிய ஏரிகள் அமைத்தல், புதிய அணைக்கட்டுகள் கட்டுதல், புதிய குட்டையமைத்தல், கைவிடப்பட்ட அல்லது பாழடைந்த ஏரிகள் மற்றும் அணைக்கட்டுகளைப் புதுப்பித்தல், சீரான நீர்போக்கிற்காகப்பாசனக் கால்வாய்களைச் சீரமைத்து மதகுகளைப் புதுப்பித்தல், பாசன நிலைகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புறுதித் திட்டம் பொதுப் பணித் துறையில் 1984-85ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1984-85ம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் செலவழித்த தொகை, முடிவுற்ற வேலைகள், உருவாக்கப்பட்ட மனித நாட்கள் மற்றும் பயன்பெறும் பாசனப் பரப்பு பற்றிய விவரங்கள் பின்வருமாறு:-

| ஆண்டு | செலவிடப் பட்ட தொகை (ரூபாய் இலட்சம்) | முடிவுற்ற வேலை களின் எண்ணிக்கை | உருவாக்கப் பட்ட மனித நாட்கள் (இலட்சம்) | பயனடைந்த பரப்பு (ஹெக்டேரில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | பாசன வசதி | பாசன உறுதி | மொத்தம் |
| 1984—85 | 1122.41 | 535 | 57.61 | 8120 | 9988 | 18108 |
| 1985—86 | 746.42 | 797 | 45.03 | 2754 | 6226 | 8980 |
| 1986—87 | 669.28 | 797 | 36.92 | 10024 | 23435 | 33459 |
| 1987—88 | 669.80 | 75 | 33.25 | 2710 | 2500 | 6210 |

1988-89ஆம் ஆண்டில் ரூ. 586.00 இலட்சம் செலவிடவும், 26.64 இலட்சம் மனித நாட்களை உருவாக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு கிராமப்புற மக்களிடையே நல்ல வரவேற்புள்ளது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கு பயன்செலவு விகிதம் குறைக்கப்பட்டுள்ளதால், பல ஆண்டுகளாக எடுத்துக் கொள்ள இயலாத பல வேலைகள் இத்திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. ஆதலால் இத்திட்டத்தினை பொதுமக்கள் முழு மனதுடன் ஆதரிக்கிறார்கள். வரும் ஆண்டுகளிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 1988-89ம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்பட, ரூ. 16.00 கோடிக்கு மூன்று தொகுதிகளில் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுடன் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பட்டுள்ளது.

**பி.எம். நாகேந்திரய்யா,**
**தலைமைப் பொறியாளர் (சிறுபாசனம்)**

**"நாக்குப் பூச்சிகளை ஒழிக்க எல்லா வழிகளையும் பார்த்துட்டேன். கடைசியிலே எங்க கால்நடை மருத்துவர் கொடுத்த பன்மின்த்* தான் பலிச்சுது...பால் நஷ்டம் தராமலே!"**

கறவைப் பிராணி உலகுக்கு நல்ல சேதி!



தன்னிகரற்ற

# பன்மின்த்*

(மொரண்ட்டெல் ஸிட்ரேட்)

**நாக்குப் பூச்சிகளை அழிக்கிறது, பாலைக் காப்பாற்றுகிறது.**

"பாழும் நாக்குப் பூச்சிகளால்—அம்மம்ம, நான் பட்டபாடு: பலவீனம் பசியிராது, கறந்த பாலும் குறைவு. பிறகு, எங்க கால்நடை மருத்துவர் தந்த பன்மின்த் தான் பலிச்சுது—அதுவும் ஒரே ஒரு டோஸ்லே!"

**பால் இழப்பே இல்லை.**

"அருமையான சேதி—எங்க மாதிரி எல்லாக் கறவைகளுக்கும், சினைப் பிராணிகளுக்கும் கூட பத்திரமான மருந்து பன்மின்த். மற்ற மருந்துகளைப் போல் இல்லாமல், பன்மின்த் உபயோகித்த பிராணிகளின் பால், மனிதருக்குக் கெடுதலே இல்லை—நூற்றுக்கு 100 பத்திரமானது."

**சினைக் காலத்தில் எந்த சமயத்திலும் தீங்கற்றது.**

"என் தங்கச்சி—பிள்ளைத் தாய்ச்சி—அவளுக்கு ஒத்துக்குமான்னு கவலைப்பட்டேன். ஆனால் பன்மின்த் சினைக் காலம் முழுக்க எந்தக் கெடுதலும் செய்யலே, ஏன், பலவீனக் காலங்களிலே கூட பாதிக்கலே. பக்க விளைவுகளே கிடையாது. குணமானதும் ஆறுதலான சுகம்!"

**வசதி மிக்கதும் கூட.**

"சாப்பிட வெகு இலகு பன்மின்த். சுண்டிவிடுங்க ஒரு குளிகை (எங்க மாதிரி பெரிய பசு எருமைகளுக்கு இரண்டு), உடம்பு சுகமாயிடுது! ஆடு, கன்று மாதிரி சின்னப் பிராணிகளுக்கு மாத்திரையா வருது. சாப்பிடத் தயாரான கரைசலாகவும் கிடைக்குது. வேறென்ன வேணும் நம்மவர்களுக்கு!"

பால் இழப்பே இராது
பன்மின்த்*
விலையை ஈடு செய்வது

கால்நடை மருத்துவரிடம் பெறுவீர் சிறந்த மருந்து.

## பன்மின்த்*

புழுக்களைக் கொல்லும்! ஆரோக்கியத்தை வெல்லும்!

LINTAS BMT 2 2217 TM

*யூ.எஸ்.ஏ. ஃபைசர் இன்க்.நிறுவன டிரேட்மார்க்.

pfizer

மேலும் விவரமறிய, எழுதவீர் இம் முகவரிக்கு:
ஃபைசர் லிட்., பி.ஒ. பாக்ஸ் நம்பர் 11602, பம்பாய் 400 021.

# வ.உ.சி.யின் இலக்கியப் பணிகள்

**ம. ரா. அரசு**

வ.உ.சி. என்றதும், அவர் கப்பலோட்டியதும், செக்கிழுத்ததுமே நினைவிற்கு வரும். வ. உ. சி. போராட்ட வீரராகவே, விடுதலை வேள்வியின் தொடக்ககால அரசியல் தலைவராகவே மக்கள் நடுவே பெருமளவு அறிமுகமாகியுள்ளார்.

அவர் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவர் என்பதோ, தமிழிலக்கியத்தில் ஆழ்ந்த பயிற்சி உடையவர் என்பதோ, தமிழில் பலதுறைகளிலும் உழைத்து, சாதனைகள் பல நிகழ்த்தியவர் என்பதோ — நாட்டுணர்வோடு மொழியுணர்வும் நிறைந்தவர் என்பதோ பலர் அறியாதன.

**சொற்பொழிவாளர்**

வ.உ.சி. யை முதன் முதலில் சொற்பொழிவாளராகவே காண முடிகிறது. 1898-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் பத்தாம் நாள் வ.உ.சி. யின் சொந்த ஊரான ஒட்டப்பிடாரத்திலேயே அவருடைய முதற் சொற்பொழிவு நிகழ்த்தப் பெற்றது. அப்போது அவருக்கு வயது இருபத்தாறு.

சென்னையில் அந்நாளில் (டிசம்பர், 1898) கூடுவதாக இருந்த பதினான்காவது காங்கிரசு மகாசபையின் கூட்டம் தொடர்பான செயல்முறைகளைப் பற்றிப் பேசுவதற்காகக் கூட்டப்பட்டதொரு கூட்டத்தில் வ.உ. சிதம்பரனார் பேசிய பேச்சையே அவருடைய முதற் பேச்சாக (இதுவரை கிடைத்துள்ள சான்றுகளின் அடிப்படையில்) கொள்ள வேண்டியிருக்கிறது.

தொடக்க காலத்தில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகளை ''வ.உ.சி. பேசினார்'', 'இன்ன தலைப்பில் பேசினார்' என்ற அளவிலேயே வெளியிட்டு வந்த இதழ்கள், பின்னாட்களில்- அரசியலில் அவர் புகழ் ஓங்கியிருந்த நாட்களில், 'இன்னவாறு பேசினார்' என்று அவர் பேசிய பேச்சையும் வெளியிடலாயின. தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையிலும், வாலிபர் சங்கம் முதலிய பிற அவைகளிலும், வ.உ.சி. ஆற்றிய உரைகள் பல. சூன் 1904 முதல் ஆகஸ்டு 1905 முடிய, தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையில் மட்டும் அவர் ஆற்றிய இலக்கியச் சொற்பொழிவுகளின் எண்ணிக்கை எட்டு.

இக்காலத்தில் நிகழ்த்தப்பட்ட வ.உ.சி.யின் சொற்பொழிவுகள் எதுவும் இலக்கியச் சொற்பொழிவுகள் உட்பட நூல் வடிவம் பெறவில்லை என்பது குறிக்கத்தக்கது. கவனிப்பாரற்ற நிலையில் இருக்கும் அவையெல்லாம் முறையாகத் தொகுத்து வெளியிடப்படுமேயானால், பேச்சுக்குச் சிதம்பரம் பிள்ளை என்று எல்லோராலும் போற்றப்பட்ட வ.உ.சி.யின் சொற்பொழிவுகளின் அரிய பல உண்மைகளை அறியும் வாய்ப்பு அமையும்.

**கட்டுரையாளர்**

வ.உ.சி.யின் முதற் கட்டுரை வெளிவந்த ஆண்டு (இதுவரை கிடைத்துள்ள செய்திகளின் அடிப்படையில்) 1900 என்னலாம்! கட்டுரையின் தலைப்பு 'கடவுளும் பக்தியும்'. இதை எழுதியபோது அவர் வயது இருபத்தெட்டு. தத்துவம், சமயம், அரசியல் சார்ந்த கட்டுரைகளே பெரிதும் எழுதியுள்ளார். குறிக்கத்தக்க சில தலைப்புகள்: 'விதி அல்லது ஊழ்','ஈகை','தேசாபிமானம்'. இருபத்தெட்டு வயதிலேயே அவர் மனம் கடவுள் ஞானத்திலும், தத்துவத்திலும், தோய்ந்திருந்தமை குறிக்கத்தக்கது.



**கவிஞர்**

தாம் இயற்றிய பாடல்களையெல்லாம் தொகுத்து, (பாடல் திரட்டு) ஒரு தொகுதியாக வ.உ.சி.யே தம் வாழுங்காலத்தில் (1915) வெளியிட்டுள்ளார். இத்தொகுதி இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, முதல் பாகத்தில் சிறைக்குச் செல்வதற்கு முன் பாடிய பாடல்களும், இரண்டாம் பாகத்தில் சிறையில் வசித்த காலத்தில் பாடிய பாடல்களும் தரப்பட்டுள்ளன.

இத்தொகுதியில் சிறை செல்வதற்கு முன் பாடிய பாடல்கள் அடங்கிய முதல் பகுதி இந்தக் காலகட்டத்துக்கு உரியது. தொண்ணூற்று ஏழு பாடல்களைக் கொண்டுள்ள இப்பகுதியில் வ.உ.சி. தம் முதல் மனைவி பற்றிப் பாடியுள்ள கவிதைகள் (20) குறிக்கத்தக்கன.

என்னுடைய நேயர்களும ஏழைபர
தேசிகளும்
என்னுடைய வீடுவந்தால்
ஏந்திழைதான் - தன்னுடைய
பெற்றோர்வந் தார்களெனப்பேணி
உபசரிப்பாள்
கற்றோரும் உள்ளுவக்கக் கண்டு
ஓரிரவில் யானுமவ் வொண்
டொடியை நீத்தாலவ்
ஓரிரவும் கண்ணே யுறங்காது—
காரிரவை
நிந்தனையே செய்து நெறிகடந்த
என்றனுக்கும்
வந்தனையே செய்வாள் மகிழ்ந்து.

இவை, கவிஞர் வ.உ.சி.யை இனம் காட்டவல்லன.

**இதழாசிரியர்**

வ.உ.சி. 'விவேக பாநு' என்ற பெயரில் இதழ் ஒன்றைத்தொடங்கி நடத்தி வந்தார் எனப் பலர் குறித்துள்ளனர். வ.உ.சி.யும் தம்முடைய சுயசரிதையில்,

'விவேக பாநு'வை வெளிவரச் செய்தேன்' என்று குறித்துள்ளார்.

ஆனால், விவேக பாநு என்ற இதழில், வ.உ.சி. அதன் உரிமையாளராகவோ, ஆசிரியராகவோ இருந்தமைக்கான சான்று எதையும் காண முடியவில்லை. மாறாக, வேறு செய்திகளே உள.

1900 செப்டம்பரில் தூத்துக்குடி வள்ளிநாயகம் சுவாமிகளால், தொடங்கப்பெற்று, ஒரு வருடம் நடத்தப்பட்டதாகவும்,

இரண்டாவது தொகுதியிலிருந்து எம். ஆர். கந்தசாமிக் கவிராயர் உரிமையாளராகவும், ஆசிரியராகவும் பொறுப்பேற்றதாகவும்,

அவர் தம்முடன் சாமிநாதய்யரையும் ஆசிரியராகச் சேர்த்துக் கொண்டதாகவும் அறிய முடிகிறது.

உரிமையாளர் : கந்தசாமிக் கவிராயர் என்றும், ஆசிரியர்; கந்தசாமிக் கவிராயர் - எஃசு, சாமிநாதய்யர் என்றும் காணப்படுகிறது.

எனவே, வ.உ.சி. குறிக்கும் 'விவேக பாநு'வை வெளிவரச் செய்தேன்' என்பது, பின்னணியில் இருந்து பண, ஆள் பலத்தால் அவருடைய நண்பர்களான வள்ளிநாயகம் சுவாமிகளும், அவருக்குப் பின்னால் கந்தசாமிக் கவிராயரும் நடத்திய இதழ் முறையாகத் தொடர்ந்து வெளிவருவதற்குத் துணை நின்றார் எனக் கொள்வதுதான் பொருந்தும் எனத் தோன்றுகிறது.

ஏறக்குறைய, தம்முடைய இருபத்தாறாவது வயதில் (1898)முதல் சொற்பொழிவையும், இருபத்தெட்டாவது வயதில் (1900) முதல் கட்டுரையையும், இருபத்தொன்பதாவது வயதில் (1901) முதல் கவிதையையும் எழுதி, தம்முடைய இலக்கியப் பணிகளைத் தொடங்கும் வ.உ.சி. 1898-க்கும் 1907க்கும் இடைப்பட்ட காலத்தில் எண்ணற்ற சொற்பொழிவுகளும், நூற்றுக்கு மேற்பட்ட பாடல்களும், பல கட்டுரைகளும் எழுதி, தம் பிற்கால இலக்கிய வாழ்வுக்கு அடிப்படை அமைத்துக் கொள்கிறார்.

## சிறையில் வாழ்ந்த காலம் (1908-1912)

1908 மார்ச்சில் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்படும் வ.உ.சி. 1912 டிசம்பரில் விடுதலை அடைகிறார். ஏறக்குறைய நாலரை ஆண்டுகள் சிறைவாழ்க்கை அமைகிறது.

சிறை வாழ்க்கையிலும் அவருடைய இலக்கியப்பணி தொடர்கிறது. நூல்கள் பல எழுதப்படுகின்றன. அவற்றில் அச்சு வடிவம் பெற்றவை சில; பெறாதவை பல.

## மொழி பெயர்ப்புப் பணி

மனம் போல வாழ்வு, அகமே புறம், வலிமைக்கு மார்க்கம் எனும் இவை சிறையில் மலர்ந்த மொழி பெயர்ப்பு நூல்கள். இவற்றுள் முன்னவை இரண்டும் கோவைச் சிறையில் பிறந்தவை. 'வலிமைக்கு மார்க்கம்' எந்தச் சிறையில் எழுதப்பட்டதென அறிய இயலவில்லை. இம்மூன்றும் வ.உ.சி.யின் சம காலத்து ஆங்கில அறிஞரான ஜேம்ஸ் ஆலனின் (1864-1912) சில நூல்களின் தமிழாக்கம்.

இவற்றில் மனம்போல வாழ்வு சிறையிலிருந்தபோது எழுதப்பட்டு அப்போதே (1909) வெளிவந்து விட்டது. அச்சு உருவில் வந்த வ.உ.சியின் முதல் நூல் இதுவேயாகும். பிற, சிறையில் எழுதப்பட்டன என்றாலும், விடுதலைக்குப் பின்பே அச்சு வடிவம் பெற்றன.

'அகமே புறம்' என்னும் நூலுக்கு, மகாகவி பாரதியார் அளித்துள்ள மதிப்புரை இங்குக் குறிக்கத்தக்கது.

## படைப்பிலக்கியம்

அறம், மெய்யுணர்வு, சமயம் பற்றிய உண்மைகள் வ்.உ.சி.யின் உள்ளத்தோடும் உயிரோடும் இரண்டறக் கலந்தவை. அவற்றை ஒட்டியே தம் வாழ்வை அமைத்துக் கொண்டவர் அவர். அதனால்தான் சிறையிலிருந்தபோது ஏனைய குற்றவாளிகளின் அவல நிலைக்குத் தாழ்ந்து விடாமல், அவர்களையும், உயர்த்தும் பணியில் அவரால் ஈடுபடமுடிந்தது.

கண்ணனூர்ச் சிறையில் வாழ்ந்த காலத்தில் பிற கைதிகளின் வேண்டுகோளுக்கிணங்க, பாடப்பட்டதே மெய்யறிவு' என்னும் அற நூல். நூறு வெண்பாக்களால் ஆன இந்நூலில் 'தன்னையறிதல்' என்னும் பகுதி சிறப்பாகக் குறிக்கத்தக்கதாகும். அறத்தின்பால் நெஞ்சம் நெகிழும் ஓர் ஆண் மகனை ஆசிரியன் ஒருவன் உருவாக்கும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. கவிதை நலமும் கருத்து வளமும் இதன் சிறப்பியல்புகள்.

கண்ணனூர்ச் சிறைவாச காலத்தில் எழுதப்பட்ட இன்னொரு நூல் 'மெய்யறம்'. மாணவவியல், இல்வாழ்வியல், அரசியல், அந்தணவியல், மெய்யியல் என்னும் ஐந்து இயலும், நூற்று இருபத்தைந்து அதிகாரமுமாக அமைந்தது இந்நூல். இந்நூலைப் பற்றி, பேராசிரியர் திருமணம் செல்வகேசவராய முதலியார் கூறியுள்ளது இங்குச் சுட்டத்தக்கது.

வ.உ.சி.யின் சுயசரிதையின் முதற் பகுதியும், பாடல் திரட்டின் இரண்டாம் பகுதியும் இந்தக் காலக்கட்டத்தில் உருவானவையே. சுயசரிதையின் முதற்பகுதி வ.உ.சியோடு நெருங்கிப் பழகியவரும், தேசபக்தருமான பரலி சு. நெல்லையப்பரின் வேண்டுகோளுக்கிணங்கக்



கோவைச் சிறையில் இருந்தபோது எழுதப்பட்டு, நெல்லையப்பரின் 'லோகோபகாரி' யில் வெளிவந்தது. இலக்கிய அழகும்,இலட்சிய ஆழமும் நிறைந்த சுயசரிதையில் நகைச் சுவையும் நையாண்டியும் ஆங்காங்கு நடம் புரிகின்றன. பாடல் திரட்டில்இரண்டாம் பகுதி(கோவை, கண்ணனூர்ச் சிறைகளில் பாடியவை)யில் உள்ள பாடல்களுள் வ.உ.சி.யின் 'புலம்பல் பாக்கள்' நினைவில் நிற்கத்தக்கன.

கூட்டினை விட்ட குரீஇக் குஞ்சே நீ
வீட்டினை விட்ட மிகையால் இக்-
காட்டினில்
துன்பமுறு கின்றேன்போல் துன்ப
முறு கின்றனையோ
இன்பமுறும் சுற்றம் இழந்து.

தனிமைத் துன்பத்தில் வீழ்ந்து, நொந்த வ.உ.சி.யின் துயரம் நிறைந்த இக்கவிதை கண்களைப் பனிக்கச் செய்யவல்லது.

வ.உ.சி. தம் சிறை வாழ்க்கையில் மேலும் பல நூல்களை எழுதியுள்ளார். தமிழிலிருந்து ஆங்கிலத்திலும், ஆங்கிலத்திலிருந்து தமிழிலுமாகச் சில மொழிபெயர்ப்புகளையும், பொது நூல்கள் சிலவற்றையும், ஆங்கில நூல் ஒன்றையும் இயற்றியுள்ளார், என்ன காரணத்தாலோ அவை அச்சேறவில்லை.

கை நோவக் கால் நோவக் கல்லுடைத்துச் செக்கிழுத்து மெய் சோர்ந்து

சணல் கிழி இயந்திரம் சுற்றி, கைத்தோல் உரிந்து இரத்தம் கசிந்து,

(வாடிய நிலையிலும், ஊக்கம் விடாது நின்று தமிழ்ப்பணி செய்த செம்மல் வ.உ.சி.யை நினையும் போது, உடல் சிலிர்க்கும்; உயிர் நிமிர்ந்தே உணர்ச்சி பொங்கும்; உள்ளமெல்லாம் நெக்கு நெக்கு உருகுமன்றோ?'

## விடுதலைக்குப் பின் (1913-1936)

விடுதலைக்குப் பின் அமைந்த வாழ்க்கையின் பெரும் பகுதியில்

பதிப்புப் பணியிலும், உரை எழுதும் பணியிலுமே வ.உ.சி. தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். எஞ்சிய காலத்தைத் தாம் சிறையில் எழுதிய நூல்களை வெளியிடுவதிலும், சுய சரிதையின் இரண்டாம் பகுதியை முடிப்பதிலும் இடையிடையே சொற்பொழிவுகள் ஆற்றுவதிலும், கட்டுரைகளும் கவிதைகளும் எழுதுவதிலும் பயன்படுத்தினார்.

**பதிப்பாசிரியர்**

திருக்குறள் மணக்குடவர் உரையை - அறத்துப் பாலிற்கு மட்டுமான உரையை முதன் முதல் பதிப்பித்த பெருமை வ.உ.சி.யையே சாரும். இப்பதிப்பு ஏப்ரல் 1917-இல் வெளி வந்துள்ளது. பதிப்புத் துறையில் வ.உ.சி.யின் முதல் நூல் இது. அவருடைய திருக்குறள் பதிப்பு முயற்சிகளைப் பற்றிய விரிவான செய்திகளை நூலின் பதிப்புரையில் காண முடிகிறது. 'பொருட்பாலும் காமத்துப் பாலும் விரைவில் அச்சாகி வெளி வரும்' என்ற குறிப்பும் பதிப்புரையில் உள்ளது. ஆனால், அவை வெளிவந்ததாக அறிய முடியவில்லை.

தொல்காப்பியம் - இளம்பூரணம் -எழுத்ததிகாரத்தையும், பொருளதிகாரத்தையும் பதிப்பித்தார். வ. உ. சி. சொல்லதிகாரத்தையும் பதிப்பிக்க வேண்டும் எனப் பெரிதும் விரும்பினார். ஆனால் அஃது இயலவில்லை. பொருளதிகாரத்தில் அகத்திணையியல், புறத்திணையியல் இரண்டையும் முதலில் வெளியிட்டார். இப்பதிப்பு 1928-இல் வெளிவந்தது. பின், களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய மூன்று இயல்களையும் 1933-இல் வெளியிட்டார். இதனை அடுத்து மெய்ப்பாட்டியல், உவமயியல், செய்யுளியல், மரபியல் இவை அடங்கிய பகுதி 1936-இல் வெளிவந்தது. தொல்பொருள் இளம்பூரணப் பதிப்புகள் மூன்று பகுதிகளாக வெளிவந்தன.

எழுத்ததிகாரம் ஒரே பதிப்பாகப் பொருள் அகத்திணையியல் புறத்திணையியல் பதிப்பை அடுத்து, 1929-லேயே வெளிவந்தது. இவ்விருபதிப்புகளும் வ.உ.சி.யின் தனி உழைப்பின் பயன்கள். 1933லும் வெளிவந்த தொல்பொருள் இளம்பூரணத்தின் ஏனைய இயல்கள் அமைந்த பதிப்புகள் இரண்டிலும் வ.உ.சி. யொடு பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையும் இணைந்து பணியாற்றியுள்ளார்.

இளம்பூரணத்தின் • பெரும் பாகத்தைப் பதவுரையொடு வெளியிட்ட பெருமை வ.உ.சி.யையே சாரும்.' வ. உ. சி.யின் பதிப்பில் பல புதுமைகளும் சிறப்புகளும் அமைந்துள்ளன' என்பர் திரு சு.ப. அறவாணன்..

**உரையாசிரியர்**

திருக்குறள், சிவஞானபோதம், இன்னிலை இவற்றிற்கு வ.உ.சி. உரையெழுதியுள்ளார். முடிமன் முத்துசாமி' என்பவர் வள்ளியம்மை சரித்திரம் என்னும் கவிதைநூலுக்கு அரும்பதவுரை எழுதியுள்ளார்.

இவ்வரிசையில் முதலில் வந்தது இன்னிலைக்கு வ.உ.சி. எழுதிய உரையாகும். இதில் ஒவ்வொரு பாட்டுக்கும் அன்னுவயம், பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விசேடவுரை என்ற பாகுபாட்டின் அடிப்படையில் விளக்கம் தந்துள்ளார். 'விசேடவுரை' என்ற பகுதி ஆசிரியரின் பேரறிவையும் நுண்மாண் நுழைபுலத்தையும் புலப்படுத்த வல்லது. இன்னிலைக்கு வ. உ. சி. எழுதிய உரை தனி ஆய்வுக்கு உரிய ஒன்றாகும்.

திருக்குறள் முழுமைக்கும் வ.உ.சி உரையெழுதியுள்ளார். ஆனால், அறத்துப்பால் உரை மட்டுமே (1935) வெளிவந்தது.

சிவஞானபோதத்துக்கு வ.உ.சி. எழுதிய உரையும் 1935-லேயே வெளிவந்துள்ளது. இதற்கு வ.உ.சி எழுதியிருக்கும் உரைப்பாயிரமும் 'சிவஞான போத வரலாறு' என்ற பகுதியும் படிக்கத்தக்கன.

இவ்வுரையின், ஒவ்வொரு சூத்திரத்தின் சாரத்தையும் அதனதன் தலைப்பாகவும், சூத்திரத்தின் பொருளைப் 'பொருள்' என்றும், இலக்கணக் குறிப்பு முதலியவற்றை 'அகலம்' என்றும், கருத்துரையைக் 'கருத்து' என்றும் குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

வள்ளியம்மை சரித்திரம் என்னும் நூலுக்கு அரும்பதவுரை மட்டும் எழுதியுள்ளார், வ.உ.சி. இந்நூலை எழுதியவர் முடிமன் முத்துசாமி. ஆனால் இந்நூல் எழுதியவர் வ.உ.சி.யே என்பர் பலர்.

மகராசி என்னும் வள்ளியம்மையை
.... .... .... .... .... .... .... ....
..............................
..................யான் மணந்ததும்
அளகையூர் அடைந்ததும் அதன்பின்
நிகழ்ந்ததும்

முடிமன் மைத்துனன் முத்துசாமி
விளம்பிய சரிதையுள் விரிவாக்
காணலாம்.

என்றுதான் வ.உ.சி. குறிப்பிடுகின்றார். அதனால், வ.உ.சி.யின் வாக்கையே அடிப்படையாகக் கொண்டு, வள்ளியம்மை சரித்திரம் அவர் எழுதியது இல்லை என்று கூறலாம்.

**பிற இலக்கியப் பணிகள்**

சாந்திக்கு மார்க்கம், பேரின்ப மார்க்கம் என்னும் ஜேம்ஸ் ஆலனின் இரு நூல்களை மொழிபெயர்த்துள்ளார். முதலாவது மட்டுமே அச்சில் வந்துள்ளது.

தம் சுயசரிதையின் இரண்டாம் பகுதியை இக்காலக் கட்டத்திலேயே எழுதி முடித்தார். தனிப்பாடல்கள் சிலவும் பாடப்பட்டுள்ளன.

கட்டுரைகள் பல எழுதியுள்ளார். சிறை செல்லும் முன்பு எழுதப்பட்ட கட்டுரைகள் போலவே இவையும் தொகுக்கப்படவில்லை. மொழி, இலக்கியம் பற்றி அமைத்த கட்டுரைகள் பல.

செய்த சொற்பொழிவுகள் பல. அவை அரசியல், சமுதாயம், சமயம், இலக்கியம் சார்ந்தவை. அவற்றில் 1927-ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் கூடிய மூன்றாவது அரசியல் மாநாட்டுத் தலைமையுரை மட்டும், 'எனது அரசியல் பெருஞ்சொல்' என்ற தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது.

**பன்மொழிப் புலமை**

வ.உ.சி. பன்மொழிப் புலவராக விளங்கினார். தமிழ், ஆங்கிலம் இரண்டிலும், ஆழ்ந்த புலமை உடையவராய்த் திகழ்ந்தார் என்பதற்கு அவருடைய இலக்கியப் படைப்புகளும் மொழிபெயர்ப்புகளும் சான்று. தெலுங்கு மொழியிலும் அவர் தேர்ந்திருந்தார். தாம் எழுதிய 'மனம்போல வாழ்வு' என்ற நூலைத் தாமே தெலுங்கில் 'மதிவலனே கதி' என்ற பெயரில் மொழிபெயர்த்திருக்கின்றார்.

வ.உ.சி. தமிழுக்கு ஆற்றிய தொண்டு போற்றுதலுக்கு உரியதாகும். வ.உ.சி.யின் இலக்கியப் பணிகளை நினைக்கும்போதெல்லாம் அவை உருவான காலச் சூழலையும் நினைவுகூர்வது அவசியமாகும். அப்போதுதான் அவற்றின் பெருமையை முழுமையாக உணர முடியும்.





தியாகச் செம்மல் சிதம்பரனாரின் தியாகத்தை நினைவுகூரும் வகையில், கோவை சிறையில் அவர் இழுத்த செக்கு, 1970-இல் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு, அரசினர் தோட்டம், காந்தி இல்ல வளாகத்தில் வைக்கப் பட்டது.

# வ.உ.சி. இயற்றிய நூல்கள்

**1. உரைநடை நூல்கள் :**

1. மனம்போல வாழ்வு
2. அகமே புறம்
3. வலிமைக்கு மார்க்கம்
4. சாந்திக்கு மார்க்கம்

(மொழிபெயர்ப்பு)

5. எனது அரசியல் பெருஞ்சொல் (சொற்பொழிவு)
6. வ.உ.சி. கண்ட பாரதி (வாழ்க்கை வரலாறு)

**2. செய்யுள் நூல்கள் :**

1. மெய்யறம்
2. மெய்யறிவு
3. பாடல் திரட்டு
4. சுயசரிதை

**3. பதிப்பித்த நூல்கள் :**

1. திருக்குறள் - அறத்துப்பால்-மணக்குடவர்
2. தொல்காப்பியம், பொருள், இளம்பூரணம்
3. தொல்காப்பியம், எழுத்து, இளம்பூரணம்

**4. உரையெழுதிய நூல்கள் :**

1. இன்னிலை
2. திருக்குறள்
3. சிவஞானபோதம்

**வ.உ.சி. எழுதி அச்சில் வராத நூல்கள் :**

1. திருக்குறள் அறத்துப்பாலின் ஆங்கில மொழிபெயர்ப்பு.
2. ஊழை வெல்ல உபாயம்
3. முத்தி நெறி
4. அழகும் ஆரோக்கியமும்
5. ஆயுளை நீட்டிக்கும் நெறி
6. சிவமதம்
7. விஷ்ணுமதம்
8. புத்தமதம்
9. இஸ்லாம் மதம்
10. கிறிஸ்து மதம்
11. மனித மதம்
12. THE UNIVERSAL SCRIPTURE
13. பேரின்ப மார்க்கம்
14. திருக்குறள்-மணக்குடவர் உரை. பொருட்பால்.
15. திருக்குறள்-மணக்குடவர் உரை— காமத்துப்பால்.

தியாக சீலர் வ. உ. சி, அவர்களுக்கு, பொது மக்களின் இறுதி அஞ்சலி.





# படமும் செய்தியும்

தீரர் சத்தியமூர்த்தியின் 101-வது பிறந்தநாள் விழாவினையொட்டி சென்னை கலைவாணர் அரங்கத்தில் 26.8.'88 அன்று நடத்தப் பட்ட புகைப்படக் கண்காட்சியினை மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி அலெக்சாண்டர் அவர்கள் திறந்துவைத்துப் பார்வை யிட்டார்.

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் பத்தாம் ஆண்டு நிறைவு விழா மற்றும் தொழிலாளர் நல விழா 23 8.'88 அன்று நடை பெற்றது. ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி.வி. இராமகிருஷ்ணா அவாகள் ஒய்வூதியம் மற்றும் கையேடுகளை வழங்கினார்.



மாநில கைத்தறி ஏற்றுமதிக்கான விருது வழங்கும் விழா 28.8 '88 அன்று சென்னையில் நடைபெற்றது. விழாவில் தலைமைச் செயலர் திரு எம். எம். இராஜேந்திரன், இ.ஆ.ப. அவர்கள் பரிசுகள் வழங்கினார்கள்.




உங்கள்
வளர்ச்சிக்கு
எங்கள்
பாதுகாப்பான
திட்டங்கள்
தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி
உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான
சிறந்த பல சேமிப்புத் திட்டங்களை வகுத்துள்ளது.
இன்றே வருவீர்—உங்கள் வாழ்க்கை
வளம்பெற செய்திடுவீர்.
உங்கள் சேமிப்பிற்கு 1/4% கூடுதல் வட்டி உண்டு.
• சேமிப்புத் திட்டம்
• நிரந்தர வைப்புத் திட்டம்.
• தொடர் வைப்புத் திட்டம்.
• ரொக்க சான்றிதழ்.
• சிறப்பு வைப்பீட்டுத் திட்டம்.
TNSC BANK
தமிழ்நாடு மாநிலத்
தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001.
TNSC வங்கி—வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி

# பண்டித
# கோவிந்த வல்லப பந்த்

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் 'மலைகளின் மைந்தன்' என்று அன்போடு அழைக்கப் பட்டவர் பந்த். அவரது முழுப்பெயர் பண்டித கோவிந்த வல்லப பந்த் ஆகும். இமயமலைத் தொடரின் மடியில் எழில் கொஞ்சும் அல்மோரா மாவட்டத்தில் உள்ள குந்த் என்னும் சிற்றூரில் அவர் பிறந்தார். அவரது தந்தையார் பெயர் மனோரத் பந்த்; தாயார் பெயர் கோவிந்தி. 1887 செப்டம்பர் 10 ஆம் நாள் பந்த் பிறந்தார். அவரது முன்னோர்கள் மகாராஷ்டிரத்தின் கொங்கணப் பகுதியிலிருந்து குடியேறிய பிராமண வகுப்பினர் ஆவர். ஜெய்தேவ் பந்த் என்னும் அவரது குல முதல்வர் 11 ஆம் நூற்றாண்டிலேயே மகாராஷ்டிரத்திலிருந்து அங்கு குடியேறியதாக வரலாறு கூறுகிறது.

## வாழ்க்கைக் குறிப்பு

**10.9.1887**—பிறப்பு

**1897**—பள்ளிக்கல்வி தொடக்கம்

**1899**—திருமணம்

**1903**—பள்ளியிறுதி வகுப்பில் தேர்ச்சி

**1905**—காசி காங்கிரஸ் மாநாட்டில் 'ஸ்வயம் சேவக்' தொண்டர்

**1909**—சட்டத் தேர்வில் வெற்றி - அலகாபாத் பல்கலைக்கழகத்தின் 'லும்ஸ்டென்' தங்கப் பதக்கம் பெறுதல்.

**1910**—அல்மோராவில் வழக்கறிஞராய்ப் பதிவு

**1914**—பிரேம்சபா மூலம் சமூகப் பணி

**1916**—குமாவூன் பரிஷத் மூலம் பொதுப்பணி

**1920**—நைனிடால் மாவட்டக் கழகத் தலைவர்



1887—1961

**1923**—உ.பி. சட்டமன்ற உறுப்பினர்

**1928**—பண்டித நேருவுடன் சைமன் கமிஷன் புறக்கணிப்பு அறப்போர்

**1931**—காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்

**1932**—ஒத்துழையாமைப் போராட்டம்

**1934**—நாடாளுமன்ற உறுப்பினர்

**1937**—உ.பி. சட்டமன்ற முதல்வர்

**1940**—தனிநபர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைத்தண்டனை.

**1942**—'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைத்தண்டனை

**1946**—உ.பி. மாநில முதலமைச்சர்

**1954**—மத்திய அமைச்சர்

**1955**—உள்துறை அமைச்சர்

**1957**—'பாரத ரத்னா' விருது பெறுதல்

**7.3.1961**—மறைவு

பண்டித நேரு அவர்களின் இதயத்தில் இடம் பெற்ற கோவிந்த வல்லப பந்தின் வாழ்வே ஒரு சாதனைச் சரித்திரமாகும். 50 ஆண்டுக்காலம் பாரதப் பொதுவாழ்வில் உயர்ந்தோங்கியவர் அவர். 30 ஆண்டு காலம் காந்தியடிகளின் ஆளுமைக்குக் கட்டுப்பட்ட மிகப் பெரும் அரசியல் தலைவர்களில் அவர் ஒருவர். காங்கிரஸ் கட்சியின் கொள்கை வகுப்புக் குழுக்களில் இடம் பெற்று, செயற்குழுத் தீர்மானங்கள் பலவற்றுக்கும் உருவமைத்தவர் அவர். உடல் நலம் சிதைந்தாலும் கொண்ட கொள்கைக்கும், நாட்டு மக்கள் நலத்துக்கும், உண்மையாக நடந்து உயர் தொண்டாற்றியவர் அவர். அவருடைய பேச்சாற்றல், வாதத்திறன் இவையெல்லாம் சட்டமன்ற, நாடாளுமன்றக் கூட்டங்களில் எதிர்க்கட்சியினராகவும், ஆளுங்கட்சியினராகவும் அவர் இருந்த இருவகைச் சமயங்களிலும் இணையற்றவையாய் விளங்கியவை.



# தேவாரப் பாடல்கள்

சைவசமயக் குரவர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவர்களாலும் தேவாரப் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசு நாயனாரும் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். சுந்தரமூர்த்தி சுவாமி களோ, அவ்விருவருக்கும் பிற்பட்ட அடுத்த நூற்றாண்டில் வாழ்ந்தவர். நேர்ச்சொல் முறையில் திருவாசகம் புனித வாசகங்களைக் குறிக்கும். இங்கு ''திரு'' என்னும் சொல் சிவபெருமான் வாக்காகி அப்பெருமானையே குறிப்பதாகும். இம்முறையில், சிவபெருமானின் பேரருளைச் சிறப்பிக்கும் முறையில், அவனைத் துதிப்பதற்குரியது மாணிக்கவாசகர் அருளிய திருவாசகமாகும். ஒரு நாள் நடராஜப் பெருமான் மாணிக்க வாசகர் முன்தோன்றி திருவாசகப் பாடல்களைத் தம் முன்னிலையில் பாட வேண்டும் என மாணிக்கவாசகரிடம் விருப்பம் தெரிவித்தார். மாணிக்கவாசகரும் அவ்வாறு பாட, நடராஜப் பெருமான் அவற்றை பனைஓலைகளில் எழுதி சிற்றம்பலத்தில் வைத்தார் என்பதாக சிதம்பரத்தின் புராண வரலாறு தெரிவிக்கிறது. திருவாசகத்தில் 656 பாடல்கள் உள்ளன. மற்ற சைவ சமய ஆசிரியர்கள் இயற்றிய ஒன்பது முதல் பன்னிரெண்டாம் திருமுறைகளிலுள்ள பாடல்களில், சேந்தனாரின் திருப்பல்லாண்டு, திருமூலர் திருமந்திரம், காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதி, சேக்கிழாரின் பெரியபுராணம் ஆகியவற்றிலுள்ள பாடல்களையும் ஓதுவார்கள் இசைக்கின்றனர்.

திருமுறைகள் ஆற்றல் மிக்க தோத்திரப் பாடல்களாக அமைந்துள்ளதோடன்றி, கி.பி. 2-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு வரையிலும் விளங்கி வந்த தமிழ் இலக்கியத்திற்கும் ஆக்கம் தந்து அக்காலத்தில் நடைமுறையிலிருந்த சீரிய பண்பாட்டை நமக்கு அறிவிக்கின்றன.

திருஞானசம்பந்தர் அருளிய பாடல்கள் பதினாறாயிரம். ஆனால் தற்போது கிடைக்கப் பெற்றவை 4159 பாடல்களே திருநாவுக்கரசு நாயனார் அருளிய பாடல்கள் நாற்பத்து ஒன்பதனாயிரம். ஆனால் தற்போது கிடைக்கப் பெற்றவை 3045 பாடல்களே. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியவை முப்பத்தெட்டாயிரம் பாடல்களாகும். ஆனர்ல் தற்போது நமக்கு கிடைத்துள்ளவை 1026 பாடல்களே. இதனால் தேவார ஓலைச் சுவடிகள் எந்த அளவுக்கு இழக்கப்பட்டன என்பது புலனாகிறது. மூவர் தேவாரப் பாடல் பெற்ற கோயில்கள் 276 ஆகும்.

பனையோலை வடிவில் கிடைக்கப்பெற்ற தேவாரப் பாடல் களைத் திரட்டிக்கொண்ட இராஜ ராஜ சோழன் அப்பாடல் களின் பண்களை வகுக்க நடவடிக்கை எடுத்தான். இதற்காக இம்மன்னன் தென்னார்க்காடுமாவட்டத்தில் உள்ள திருவெருக் கத்தம் புலியூர் கோயிலுக்குச் சென்று இப்பதிகங்களின் பண் களைத் தமக்கு தெரிவிக்குமாறு அக்கோயிலில் வீற்றிருந்த சிவ பெருமானிடம் முறையிட்டான். அப்போது திருஞானசம்பந் தருக்கு யாழ் வாசித்து உதவிய திருநீலகண்டப் பெரும்பாணர் மரபில் உதித்த பெண்மணி ஒருத்தியின் உதவியை அம்மன் னன் நாடவேண்டும்என ஓர் அருள்வாக்கு அறிவித்தது. இம் மன்னன் எடுத்த முயற்சியின் பயனாக, இப்பெண்மணியும் கண்டுபிடிக்கப்பட்டுச் சிதம்பரம் கோயிலுக்கு அழைக்கப்பட்ட போது, அங்கு தேவாரப் பாடல்களை அவற்றிற்குரிய பண் களில் அப்பெண்மணி பாடினாள். இம்முறையில் தேவாரப் பாடல்களுக்குப் பொருத்தமான பண்கள் வகுக்கப்பட்டன.



# தொண்டு

டாக்டர் அரங்க. இராமலிங்கம்

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பது திருநாவுக்கரசரின் திருவாக்கு. தொண்டினையே தொழுகையாய்க் கொண்டு வாழ்பவர்களால் இவ்வுலகம் வாழ்கிறது. தொண்டு பல வகைப்படும். மனிதராகப் பிறப்பெடுத்த ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு வகையில் தம்மால் முடிந்த அளவு தொண்டு செய்தால் நாட்டுக்கும் வீட்டுக்கும் நன்மை விளையும். தொண்டு செய்வதால் மனம் பண்படும். திருநாவுக்கரசர் உழவாரப்படை கொண்டு திருக்கோயில் திருப்பணி செய்ததும், மகாத்மா காந்தியடிகள் இராட்டினம் கொண்டு நூல் நூற்றதும் மனதைப் பக்குவப்படுத்த அவர்கள் மேற்கொண்ட தொண்டுகளாகும்.

மனித குலத்திற்குத் தொண்டு செய்ய வேண்டுமானால் எல்லா உயிர்களையும் தம்முயிர்போல் கருதுகிற மனநிலையினைப் பெற வேண்டும். "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்னும் திருமூலரின் கருத்தினை முழுமையாக உணர்ந்தவர்களே தொண்டு செய்யத் தகுதி பெற்றவர்கள்.

ஒருமுறை விவேகானந்தர் தம் சிஷ்யரை நோக்கிப் பின்வருமாறு கூறினார்: "எவ்வளவோ தவத்திற்குப் பின் நான் இந்த ஓர் உண்மையை உணர்ந்தேன். கடவுள் ஒவ்வொரு உயிரினிடத்தும் உறைகின்றார். உயிர்கள் அனைத்தும் இறைவனின் பல்வேறு வடிவங்களே. மக்கட் சேவை செய்தவன் கடவுளுக்குச் சேவை செய்தவனாகிறான். நான் இன்று சொல்லியவற்றை உன் இதயத்திலே எழுதிவை. மறந்துவிடாதே!" என்றார். மக்களுக்குச் செய்யும் தொண்டை பகேசனுக்குச் செய்யும் தொண்டாகக் கருதியவர் விவேகானந்தர். மக்களுக்குத் தொண்டு செய்யக் கருதுபவர், முதலில் தமக்குள்ளே இருக்கும் பேதத்தை—வேறுபாட்டை வேரறுக்க வேண்டும். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உயர்ந்த மனப் பண்பாட்டைப் பெறுதல் வேண்டும்.

"காக்கை குருவி எங்கள் ஜாதி, நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்' என அனைத்து உயிரினங்களையும் தம் சுற்றமாகக் கருதியவர் மகாகவி பாரதியார். வேதத்தின் கடைசிக் கருத்தாகக் கவிஞர் குறிப்பிடுவது கவனத்திற்குரியது.

"கவனி! அண்ட பகிரண்டங்கள் எல்லாவற்றையும் உள்ளேயிருந்து ஆட்டுவிக்கும் பரஞ்சுடரே நம்மைச் சூழும் அனந்தகோடி ஜீவராசிகளாக நின்று சலிக்கிறது. இதுதான் வேதத்தின் கடைசியான கருத்து. தன்னிடத்தில் உலகத்தையும், உலகத்தினிடம் தன்னையும் எவன் காண்கிறானோ, அவனே கண்ணுடையவன் என்பது முன்னோர் கொள்கை" என்கிறார் மகாகவி.

உயிர்களிடத்து வேறுபாடு காணாத மனநிலை பெற்றவரே தொண்டு செய்வதற்கு முழுத் தகுதி படைத்தவராவர். அவ்வாறு செய்யப்பெறும் தொண்டுகளும் பயன்நோக்கிச் செய்யப்படுவன அல்ல. கைம்மாறு வேண்டாத மழை போலவும், ஊரின்கண் அமைந்துள்ள உண்ணுநீர்க் குளம் போலவும், பழுத்த கனிகளைத் தாங்கி ஊரின் நடுவே நிற்கும் பயன் மரம் போலவும் தொண்டு அமைதல் வேண்டும்.

தொண்டு செய்யாத வாழ்க்கை குறையுடைய வாழ்க்கையாக முழுமை பெறாத வாழ்க்கையாக அமையும். 'தமக்கென முயலாது பிறர்க்கென முயன்று தொண்டு செய்பவர் இருப்பதனாலேயே, இவ்வுலகம் இன்றுவரை சிறப்புடன் வாழ்கிறது' என்கிறது புறநானூறு. தொண்டு செய்வதற்கு, எல்லா உயிரையும் தம்முயிர்போல் எண்ணுவதற்குரிய மனப்பக்குவத்தைத் தமக்கு அருளுமாறு இறைவனிடம் வேண்டுகிறார் தாயுமானவர்.

"எவ்வுயிரும் என்னுயிர்போல்
எண்ணியிரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய்
பராபரமே."

இவ்வாறு இறைவனிடம் வேண்டி, தொண்டு செய்வதற்கேற்ற மனப் பக்குவத்தைப் பெற்ற தாயுமானவர் மக்களுக்குத் தொண்டு செய்யத் தன்னை ஆளாக்கி விடும்படி அடுத்து வேண்டுகிறார்.

"அன்பர்பணி செய்யஎனை
ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்து
எய்தும் பராபரமே"

இன்பத்தைத் தேடியலைவோர் இன்பத்தை நாடிப் பல்வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டாம். இன்பத்தைத் தேடியலைவோரை நாடி இன்பமே தேடி வந்து அடைக்கலமாகும் வழியைத் தாயுமானவர் எடுத்துரைக்கின்றார். அன்பர் பணியாகிய மக்கள் தொண்டினைச் செய்யச் செய்ய இன்பநிலை தானாக உள்ளத்தில் வந்தமையும் வழியினை மிக நுட்பமாகத் தாயுமானவர் புலப்படுத்துகின்றார்.

"அற்றார் அழிபசி தீர்த்தல்
அஃது ஒருவன்
பெற்றான் பொருள் வைப்புழி"

என்னும் குறளில் வறியவரின் பசிப் பிணியினைப் போக்கச் செலவிடப்படும் பொருள், செலவிடுவான் தனக்கே பின்னாளில் வந்து உதவும் எனக் குறிப்பிடுகிறார் திருவள்ளுவர்.

பசிப்பிணி போக்கும் தொண்டு, தொண்டு செய்தவனுக்குப் பிற்காலத்தில் உதவும் கருவூலமாகப் பயன்படுவதுபோல, மக்களுக்குச் செய்யும் தொண்டினால் இன்ப நிலை தானாகவே மனதில் வந்து அமையும் எனும் நுட்பத்தைத் திருவள்ளுவரும், தாயுமானவரும் மிக நுணுக்கமாகக் குறிப்பிட்டுள்ளனர். தொண்டு செய்தால் இன்ப நிலை பெறலாம். இவ்வாறு தொண்டு செய்து இன்பநிலை பெற்ற மனம் எதை விரும்பும்! பொன்னை விரும்புமா! புகழை விரும்புமா! பொருள் விரும்புமா! தொண்டு செய்து பண்பட்ட மனம் இவற்றையெல்லாம் விரும்பாது! பின் எதை விரும்பும்!

"எல்லோரும் இன்புற்று
இருக்க நினைப்பதுவே,
அல்லாமல் வேறொன்று
அறியேன் பராபரமே"

எல்லோரும் இன்புற்றிருக்க நினைக்கும் மனத்தைப் பெறத் தொண்டு செய்வோம். தொண்டு செய்வதன் வழிபிறக்கும் இன்பம் நல்குவோம். நாமும் இன்பநிலை எய்துவோம்.

# குடிசைவாசிகளுக்குப் புதிய குடியிருப்புகள்



நகரங்களில் வேலைவாய்ப்பு அதிகமாக உள்ளது என்றும், நகர வாழ்க்கை மிகவும் வசதிகள் நிறைந்தது என்றும் கிராம மக்கள் பொதுவாக நினைக்கின்றனர். இந்த நம்பிக்கையின் காரணமாக கிராமங்களை விட்டு நகரங்களை நோக்கிக் கிராமவாசிகள் வருகிறார்கள். ஆனால் போதுமான கல்வி அறிவும், தொழில்நுட்ப அறிவும் அவர்களுக்கு இல்லாததால், நகரங்களில் நிரந்தரமான வேலைவாய்ப்பு அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

கிராமங்களில் இருந்து நகரத்தை நோக்கி கிராம மக்கள் வந்து கொண்டு இருப்பதால், நகரங்களில் குடியிருப்பு வசதிக்கு மிகுந்த சிரமங்கள் உள்ளன. வீட்டு வசதி இல்லாத காரணத்தினால் ஏற்கெனவே உள்ள குடிசைப் பகுதிகளில் இவர்கள் புதிதாக குடிசைகளை அமைத்து வாழ வேண்டியுள்ளது. அங்கும் இங்கும் காலியாக உள்ள இடங்களில் புதிதாகக் குடிசைகளைக் கட்டி வாழ வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்படுகிறது. குடிநீர், சுகாதார வசதி போன்ற பிரச்சனைகளும் ஏற்படுகின்றன. இந்த வகையில் தான் சென்னை நகரத்தின் மக்கள் தொகை அதிகரித்து வந்துள்ளது. சென்னை நகரத்தின் மக்கள் தொகை 1971-இல் 24,69,449; 1981-இல் மக்கள் எண்ணிக்கைக் கணக்குப்படி சென்னை நகர எண்ணிக்கை 32,76,622 ஆக அதிகரித்துள்ளது இன்று சென்னை நகரின் மக்கள் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கினர் குடிசையில் வாழ்கிறார்கள்.

சென்னை நகரில் குடிசைகள் தோன்றுவதற்கு முக்கிய காரணங்கள் இரண்டு; முதலாவது, நகரில் போதுமான இடவசதி இல்லாதது. இரண்டாவது, ஏதாவது சிறு இடம் கிடைத்தால், அந்த இடத்தினை வாங்குகின்ற சக்தி இல்லாமை, இதனால், சென்னை நகரின் சாலையோரங்களில், கழிவு நீர்ப்பிடிப்புக் காலி இடங்களில், முச்சந்தி மறைவிடங்களில், வீடில்லாத மக்கள் சிறு குடிசைகளைக் கட்டிக் கொள்கிறார்கள். காலி இடம் ஆக்கிரமிப்பு செய்யப்படுகிறது. அதனால் போக்குவரத்துப் பாதிப்பு; பொது சுகாதாரப் பாதிப்பு; அடிக்கடி விபத்தில் சிக்கி உயிரிழக்கும் அவலம், இப்படிப் பல பிரச்சினைகள்.

இத்தகு நிலைமையைக் குடிசை வாழ் மக்களும், பொதுமக்களும் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். பல குடியிருப்புகள் ஆட்சேபனைக்குரிய இடங்களில் உள்ளன. அவைகளை அகற்ற நடவடிக்கை எடுப்பதால் பாதிக்கப்படும் குடிசைவாசிகளுக்கு மாற்று இடம் அளிப்பது இன்று ஒரு முக்கியமான பிரச்சனையாகும். சுமார் 37,542 குடும்பங்கள் இத்தகைய குடிசைகளில் வாழ்கின்றனர். இக்குடும்பங்களுக்கு நல்வாழ்வு தர, தமிழ்நாடு அரசு திட்டம் வகுத்துச் செயல்படுகிறது.

இக்குடும்பங்களை மாற்றுக் குடியிருப்புகளில் குடியமர்த்துவதற்கான இடங்களைத் தேர்ந்தெடுப்பதில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியமும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமமும் ஈடுபட்டுள்ளன. வேளச்சேரி, கொடுங்கையூர், எருக்கஞ்சேரி, கடயக்குப்பம் ஆகிய நகர்ப்புறப் பகுதிகளில் 77 ஏக்கர் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமமும் மணலிப்பகுதியில் நலிந்த பிரிவினருக்கென வீட்டு மனைகளை அபிவிருத்தி செய்துள்ளது. இங்கும் குடிசைவாழ் மக்களுக்கு மாற்றுக் குடியிருப்புகள் தர முடியும்.

முதல் கட்டமாக, வேளச்சேரியிலும், மணலிக்கு அருகிலும், 5300 குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒரு குடும்பத்திற்குச் சுமார் 21 சதுர மீட்டர் முதல் 30 சதுர மீட்டர் வரையுள்ள வீட்டு மனைகள் கொடுக்கப்படும். குறைந்த விலையில் மனைகள் தரப்படும். பின்னர் அவர்களுக்குப் பட்டாவும் தரப்படும். மனையின் விலையை எளிதான தவணை முறையில் செலுத்தினால்போதும். இத்தகைய குடியிருப்பு மனைகள் உள்ள இடத்தில் குடிநீர் வசதி செய்து தரப்படும். சுமார் 75 குடும்பங்களுக்கு ஒரு ஆழ்குழாய்க் கிணறு என்ற அடிப்படையில், குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்படும். கழிவு நீர் வசதி, தெரு விளக்கு வசதிகளும் செய்து தரப்படும். இவை அனைத்தும் இலவசமாகச் செய்து தரப்படும்.

குடிசைவாசிகளை மாற்றுக் குடியிருப்புகளில் குடியமர்த்துவதற்காகத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கடன் உதவி செய்ய முன்வந்துள்ளன. மனை இடங்களைப் பெற்றுள்ளவர்கள் வங்கிகளிடமிருந்து கடன் பெற்று, வீடுகளைக் கட்டிக் கொள்ளலாம். குறைந்த செலவில் கட்டிக் கொள்ளக் கூடிய மாதிரி வீட்டு வடிவமைப்பு ஒன்றினைக் குடிசை மாற்று வாரியம் தயாரித்துள்ளது. அதன்படி, ஒரு வீட்டை ரூபாய் 3500-இல் கட்டி முடிக்கலாம். பண வசதி உள்ளவர்கள் சற்று விரிவாகவும் கட்டிக் கொள்ளலாம். இப்போது உடனடியாக 8000 குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கி, அவர்களைக் குடியமர்த்தப் போதுமான நிலம் கைவசமுள்ளது.

குடிசை மாற்றுப் பணி ஒரு முக்கிய சமுதாய நல, நகர்வளர்ச்சிப் பணியாகும். இந்தப் பணியில் குடிசைவாசிகள் நம்பிக்கை வைத்து, சுகாதார வசதியுள்ள மாற்று இடங்களுக்குச் சென்று, சிறிய அளவிலான வீடுகளைக் கட்டி, மகிழ்ச்சியாக, மன நிறைவுடன் வாழலாம். இத்திட்டம் அம்மக்களின் நலனுக்காக உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தால் போக்குவரத்து இடையூறுகள் குறையும். நகரின் தூய்மை பெருகும். மக்களின் நல்வாழ்வினைப் பெருக்கும் இத்திட்டத்திற்கு நடைபாதைக் குடிசை வாழ் மக்களும், பொதுமக்களும் ஒத்துழைப்பு தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அன்புநெறி மறக்கக்கூடாது!

—புலமைதாசன்

கண்மணிகாள்! கண்மணிகாள்!
ஓடி வாருங்கள் - அறிவுக்
கருத்துகளைக் கேட்டிடவே
நாடி வாருங்கள்!

நன்மணியாம் உங்களுக்கே
ஒன்று சொல்லுவேன் - தெளிந்த
நற்பண்பால் உயர்வுபெற்றே
உலகை வெல்லுவீர்!

தாய்தந்தை பேச்சுதனை
தட்டக் கூடாது - நல்ல
தகவுடையோர் நட்புதனை
இழக்கக் கூடாது!

வாய்த்துடுக்காய் எவரிடமும்
பேசக் கூடாது - எந்த
வம்புதும்புச் செயலினிலும்
மாட்டக் கூடாது!

புறங்கூறி மற்றவரைக்
கெடுக்கக் கூடாது - தூயோர்
பொன்மொழியை ஒருபோதும்
துறக்கக் கூடாது!

அறநெறியில் எந்நாளும்
விலகக் கூடாது - என்றும்
அன்புநெறி ஆட்சிசெய்யும்
மறக்கக் கூடாது!






உலகிலேயே மிகப் பெரிய பள்ளிக் கூடம் எங்குள்ளது?

—நியூயார்க்கிலுள்ள டிவிட் கிளின்டன் ஸ்கூல்.

காளிதாசர் எழுதிய நான்கு நாடகங்கள் யாவை?

—மேகதூதம், சாகுந்தலம், ரகுவம்சம், குமாரசம்பவம்.

உடலில் ஹார்மோன்களைச் சுரப்பவை எவை?

—நாளமில்லாச் சுரப்பிகள்.

தோடர்கள் எங்கு வாழ்கிறார்கள்?

—நீலகிரியில்.

வீடுகளில் மின் இணைப்புகள் எம்முறையில் அமைகின்றன?

பக்க அடுக்கு முறையில்.

பென்சில்கள் செய்யப் பயன்படுவது எது?

—கிராபைட்.

மின் பல்பில் நிரப்பப்படும் வாயுக்கள் கூறு?

—நைட்ரஜன், ஆர்கான்.

டைனமோவில் எவ்வகை மின்சாரம் உண்டாகிறது?

—இரு திசை மிசாரம்.

மின் மோட்டார் உள்ள கருவிகள் வீடுகள்ல் பயன்படுவதற்கு இரு எடுத்துக்காட்டுகள் கொடு?

நீரை மேலேற்றும் பம்பு. மாவு அறைக்கும் இடந்திரம்.

நடுவில் மெலிந்தும் ஓரங்களில் தடித்தும் உள்ள லென்சு எது?

—குழி லென்சு.

முதன்முதலில் ஒலியைப் பதிவு செய்தவர் யார்?

—தாமஸ் ஆல்வா எடிசன்.

தீப்பெட்டிகள் செய்ய எவ்வகை பாஸ்பரஸ் பயன்படுகிறது?

சிவப்பு பாஸ்பரஸ்.

நீரில் மிதக்கும் உலோகங்கள் யாவை?

சோடியம், பொட்டாசியம்.

நீராவி அழுத்தம் மிக அதிகமாகி, கொதிகலம் சேதமடையாமல் பாதுகாப்பது எது?

—காப்பு வால்வு.

தூரப் பார்வையை நீக்க எதைப் பயன்படுத்த வேண்டும்?

—தகுந்த குவிய தூரமுள்ள குவி லென்சு.

ஓடும் மின்சாரத்தைக் கண்டறிந்தவர் யார்?

—வோல்ட்டா.

இலண்டனில் நகை வேலைகளுக்கு, தையல் வேலைகளுக்குப் புகழ் பெற்ற தெருவின் பெயர்?

—பான்ட் தெரு.

இரத்தச்சோகை என்ற நோய், உணவில் எந்தச் சத்து குறைவால் ஏற்படுகிறது?

—இரும்புச்சத்து.



# பார்த்தோம் படித்தோம்

16.8.'88 இதழில், சிந்தனையைத் தூண்டும் கவிதைகள் படித்து ரசித்தேன். விடுதலைக்குப் பாடுபட்ட வீரர்களின் வாழ்க்கை பற்றி படித்துத் தெரிந்து கொண்டேன். மொத்தத்தில் ஒரு அருமையான தொகுப்பை வெளியிட்டு என்னைத் திணற வைத்து விட்டீர்கள்!

—எஸ்.பி.சந்தானராஜகோபால்
களப்பால்.

'நாடு விடுதலை பெறப் பாடுபட்ட தலைவர்கள்' மிக அருமையான கட்டுரை. 14 தியாகிகளின் அற்புதச் சேவைக் குறிப்பு. விடுதலை இயக்கத்தின் வீரமிக்க வரலாறு, மிகமிக உபயோகமான தொகுப்பு. பாரதியார், கவியரசர் பாடல்கள் மேலும் மணமூட்டுகின்றன. தியாக வேள்வியில் பூத்த சுதந்திரச் செம்மல்கள் படங்களாய் பவனி வந்தது கண்கொள்ளாக் காட்சி!

—ராதா ராமலிங்கம்
திருவண்ணாமலை.

''மாவீரன் மண்டேலா-வின் வரலாற்றைப் படித்தேன். இந்த அருமையான கட்டுரையைத் தந்த ஆசிரியருக்கு என் நன்றி!

— எஸ். பிரபாகரன்
மேல்பாலானந்தல்.

இதந் தரும் மனைவி மக்கள் இன்னுயிர் ஈந்துப் பெற்ற சுதந்திர நாள் விழா ''தமிழரசு'' சிறப்பிதழ் கண்டேன். தென்கோடி கட்டபொம்மன், வ.உ.சி, ராஜாஜி முதல், வடகோடி திலகர், லாலா லஜபதி, கோகலே, காந்திஜியடிகள் வரை பல மூத்த தலைவர்களை இந்த நாளில் படங்களுடன் வாழ்க்கைக் குறிப்பையும் வெளியிட்டது போற்றத்தக்கது.

—ஆர்.அத்தியப்பன்,
மூணுசாவடி.

நாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட தலைவர்கள் பற்றிய குறிப்பும், மாவீரன் மண்டேலா வீரவாழ்க்கையும் 'தமிழரசு' மூலம் அறிய முடிந்தது.

பி.ரமேஷ்,
வந்தவாசி.

இந்திய நாட்டில் 400ஆண்டு விடுதலை வரலாற்றையும், இந்திய விடுதலைக்காகத் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்த தியாகச் செம்மல்களுடைய வாழ்க்கைக் குறிப்பையும் அறிந்து பெரிதும் வியப்பும் மகிழ்வும் கொண்டேன்.

கே.எஸ்.எம். சாமிராஜன்,
அம்பலூர்.

நாடு விடுதலை பெறப் பாடுபட்ட தலைவர்களின் புகைப்படத்துடன் அவர்களின் இளமை முதல் முழு வரலாறும் தொகுத்து வெளியிட்ட விதம் மிகச் சிறப்பாக இருந்தது. அத்துடன் விடுதலை இயக்கத்தின் வீரமிக்க வரலாறு-400 ஆண்டுக் காலச் சரித்திரத் தொகுப்புகள் மிகவும் அருமை.

மு.வேதபுரி,
கோட்டுப்பாக்கம்.

## விளையும் பயிர்



சென்னைப்பல்கலைக் கழகத்தில் இளங்கலை, உளவியல் இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர் ஜி.நாகராஜ்.

இவர் பல்வேறு துறைகளில் ஆர்வம் கொண்டு, பல பரிசுகளும் பாராட்டுகளும் பெற்று வருகிறார்.

இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கம் நடத்திய பள்ளிகளுக்கான கட்டுரைப் போட்டியில், இவர் முதல் பரிசு பெற்றவர். கதை, கட்டுரை, கவிதைகளிலும் ஈடுபாடுள்ள இவர் நாடகங்களிலும் நடித்துள்ளார். நாட்டு நலப்பணித் திட்டத்திலும் தொண்டாற்றியுள்ளார். சாரண இயக்கத்திலும் சேர்ந்துள்ள இவர், காந்தி சமாதான நிறுவனம் நடத்திய காந்தி வினா விடை மற்றும் கட்டுரைப் போட்டிகளிலும் வெற்றி பெற்றுச் சான்றிதழ் பெற்றுள்ளார்.

வளரும் இளைஞரை நாமும் வாழ்த்துவோம்!

விடுதலைக்குவித்திட்ட சுதந்திரப் போராட்டத் தலைவர்களைப் பற்றி செய்திகளை அழகாக வெளியிட்டது 'தமிழரசு', பள்ளிக் குழந்தைகள் அறியவேண்டிய பல விஷயங்கள் அதில் இருந்தன. அதே இதழில் 'மாவீரன் மண்டேலா' கட்டுரை, அவரைப் பற்றிய முழு விளக்கத்தினையும், அவரின் வாழ்க்கை வரலாற்றையும், தியாகத் தன்மைகளையும் சிறப்பாக விளக்கின.

எஸ்.இளையவன்,
படுக்கப்பத்து.

நமது சுதந்திரப் போராட்ட வீரத் தியாகிகளின் சுடர் முகம் தாங்கி இவ்விதழ் விளங்கியது; அவர்தம் பணிகள், அவர்தம் சிந்தனைகள் எல்லாம் சீராகத் தொடுக்கப்பட்ட சிறந்த மலர்ச் செண்டாக மணந்தது. குறிப்பாக விடுதலை இயக்கத்தின் வீரமிக்க வரலாறு எம் போன்ற இளைய தலைமுறையினர் நெஞ்சங்களில் எழுச்சிக் கனலைச் சுடர்விடச் செய்தது.

அரிமா பூபாளம்,
ப.முருகேசபாண்டியன்,
கரப்பாடி.

சுதந்திர மலரில் பூத்த விடுதலை இயக்கத்தின் வீரவரலாறு மற்றும் நாடு விடுதலைப் பெறப் பாடுபட்ட தேசத் தந்தைகளைப் பற்றிய கட்டுரைகளை வெளியிட்ட தமிழரசு இதழுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

கே.செந்தில்குமார்,
மாவலிப்பட்டி.

அடிமைத் தனத்தை ஒழித்து நாடு விடுதலை பெறப் பாடுபட்ட தலைவர்களின் வரலாற்றைப் படித்தவுடன் என் மெய்சிலிர்த்தது.

எஸ்.நாகரத்தினம்
படமாத்தூர்.

கறுப்பு இனமக்களின் நலனை நாடும் 70 வயது மாவீரன் மண்டேலாவின் வீர வரலாற்றைப் படிக்கும்போது உள்ளமே சிலிர்க்கிறது. 26 ஆண்டுகளாகச் சிறையில் அடைபட்டுக் கிடக்கும் மண்டேலாவின் மாபெரும் சாதனையை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

ப.ஆ.சண்முகம்,
களம்பூர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில்

# ஜீவன்தாரா திட்டம்

புதுக்கோட்டை மாவட்டக் கிராமங்களில் 20.8.88 மற்றும் 21.8.88 ஆகிய நாட்களில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளைப் பார்வையிடவும், பல நலத் திட்டங்களைத் துவக்கி வைக்கவும், மாண்புமிகு மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு ப.சிதம்பரம் அவர்கள் வருகை புரிந்தார்.

20.8.88 அன்று பொன்னமராவதி ஒன்றியம் கொன்னைப்பட்டி எனும் கிராமத்தில் ரூ. 35,000 செலவில் கட்டப்பட்ட சமுதாயக் கூடக் கட்டடத்தைத் திறந்து வைத்து, அமைச்சர் பேசுகையில், ''தமிழ்நாட்டில் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் 12 கிலோ அரிசி இம்மி அளவும் குறையாது என்றும், வெளிமார்க்கெட்டில் அரிசி வாங்கும் திட்டத்தின் அடிப்படையில் மாநில அரசு 65 ஆயிரம் டன் அரிசியை பஞ்சாப், ஆந்திரா ஆகிய பகுதிகளிலிருந்து கொள்முதல் செய்து விட்டது'' என்றும், ''மேலும் 35 ஆயிரம் டன் அரிசியைக் கொள்முதல் செய்ய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றும், மத்திய தொகுப்பிலிருந்து மாநிலத்திற்கு வழங்கப்படும் அரிசியின் அளவு இருமடங்காக ஆக்கப்பட்டுள்ளது என்றும், ''மாநிலத்திற்கு மேலும் அரிசி தேவைப்படும் என்றால், அது குறித்த புரிந்துரைகள் பரிவுடன் மத்திய அரசால் கவனிக்கப்படும்'' என்றும் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ப.செல்வம் அவர்கள் தமது உரையில், ''மக்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடின்றிக் கிடைக்கப் பொது விநியோக முறை சீராக்கப்பட்டுள்ளது,'' என்றும், ''தவறு செய்த ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது'' என்றும் தெரிவித்தார்.

பின்பு அம்மாபட்டிக் கிராமத்தில் ரூ. 2,04,000 செலவில் ஆதிதிராவிடர்களுக்காகக் கட்டப்பட்ட அன்னை இந்திரா நினைவுக் குடியிருப்பைத் திறந்துவைத்தார். விழாவில் அமைச்சர் பேசுகையில் ''இங்குள்ள வீடுகள் 3 மாதத்தில் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. மேதகு குடியரசுத் தலைவர் ஆட்சியில் பணிகள் துரிதமாக நடைபெறுவதை இது காட்டுகிறது'' என்று குறிப்பிட்டார்.

''ஆதிதிராவிடர்களுக்காக மத்திய அரசு பல சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது, அதில் ஒன்று 'ஜீவன்தாரா' திட்டம்; இத்திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக 470 பாசனக் கிணறுகள் வெட்டப்படும்'' என்றும், ''புதுக்கோட்டை மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்காக ரூ. 7 கோடியே 9 லட்சத்து 59 ஆயிரம் செலவிடப்படும்'' என்றும் குறிப்பிட்டார்.

பொன்னமராவதியில் ரூ. 27 லட்சம் செலவில் கட்டப்பட்ட கூட்டுறவு விசைத்தறிக் கூடத்தைத் துவக்கிவைத்தார். 48 கதிர்கள் உள்ள இந்த ஆலையில், 100 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. பின்பு, பொன்னமராவதி ஊராட்சி ஒன்றிய வளாகத்தில அரிசி மற்றும் சிமெண்ட் கிடங்கினைத் திறந்து வைத்து உரையாற்றுகையில், ''தமிழகத்தில் வளர்ச்சிப் பணிகளுக்காக ரூ. 1,457 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது'' என்றும், ''இதில் ரூ.197 கோடி ஆதிதிராவிடர் நல வாழ்வுத் திட்-



டங்களுக்காகச் செலவிடப்படுகிறது" என்றும் குறிப்பிட்டார்.

21.8.88 அன்று மணவாளன்கரை என்ற கிராமத்தில் ஜீவன்தாரா திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக வெட்டப்பட்ட கிணற்றில பம்பு செட்டுகளை இயக்கி வைத்தார். மேலும் அந்த ஆதிதிராவிடருடைய வயலில் நெல் விதைகளைத் தூவினார். பின்பு கோட்டையூரில் ஜீவன்தாரா திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்கள் 5 பேருக்கு ஆயில் என்ஜின் பம்பு செட்டுகளை வழங்கினார். அன்னை இந்திரா நினைவுக் குடியிருப்பைத் திறந்து வைத்தார். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகளை வழங்கி அமைச்சர் அவர்கள் பேசுகையில், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் மாவட்ட ஆட்சிமுறையை கொண்டு வரவேண்டும் என்று விருப்பப்படுவதன் நோக்கத்தைத் தெளிவுபடுத்தினார். ''அரசினால் தீட்டப்படும் திட்டங்கள் பஞ்சாயத்து அளவில் ஆரம்பித்து உரிய பலன்களைக் கிராம மக்கள் பெற வேண்டும்'' என்றும் கூறினார்.

21.8.88 அன்று மாலை புதுக்கோட்டையில் ஆயுள் காப்பீட்டுக் கழகப்புதியகட்டடத்தைஅமைச்சர் திறந்து வைத்தார். கூட்டு இன்சூரன்ஸ் திட்டத்தின் கீழ் 5 விவசாயத் தொழிலாளர்களின் இல்லத்தைச் சார்ந்தவர்களுக்குத் தலா 1,000 ரூபாய் வழங்கினார். கோடி ரூபாய்க்குமேல் இன்சூரன்ஸ் வசூல் செய்த முகவர்களுக்குப் பொன்னாடை அணிவித்தார். இவ்விழாவிற்கு ஆயுள் காப்பீட்டுக் கழக நிறுவனத் தலைவர் திரு நாராயணன் தலைமை தாங்கினார். இவ்விழாவில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ப.செல்வம், பாராளுமன்ற உறுப்பினர் திரு என்.சுந்தர்ராஜ், புதுக்கோட்டை நகரசபைத் தலைவர் திரு தியாகராஜ காடுவெட்டியார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**ச. கோவிந்தம்மாள்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**புதுக்கோட்டை.**

---

# ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சித் திட்டப் பணியில் பெருமைமிகு சாதனை



மதுரை மாவட்டம் பொதும்பு கிராமத்தைச் சேர்ந்த திரு காளிமுத்து சொல்கிறார்.

எனது குடும்பத்தில் என்னைச் சேர்த்து ஆறு நபர்கள் இருக்கிறோம்.

திருநகர் வீடு கட்டும் சங்கத்தின் மூலம் ரூ. 2500 கடன் மற்றும் ரூ. 500 மான்யம் பெற்று வீடு கட்டியிருந்தேன்.

முன்னர் கூலி வேலை தான் பார்த்து வந்தேன். வருடத்தில் ஆறு மாதங்கள் தான் வேலை கிடைக்கும். தினக்கூலி ரூ. 7 முதல் ரூ. 10 வரை கிடைக்கும். என் மனைவிக்கு வருடத்தில் மூன்று மாதங்கள் தான் வேலை கிடைக்கும். நடவு நடும்போதுதான் ரூ.6 முதல் ரூ. 7 வரை கிடைக்கும். மீதி நாட்களில் ரூ. 4 முதல் ரூ. 5 தான் கிடைக்கும். வருமானம் குடும்பத்துக்குப் போதவில்லை

ரூ. 5000 த்தில் ரூ. 1666 மான்யம் கிடைத்தது. மீதிப்பணத்தை மதுரை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் கடனாகப் பெற்று வட்டியுடன் திரும்பச் செலுத்திவிட்டேன். தற்சமயம் என்னிடம் மூன்று எருமைகளும், இரண்டு கிடாரிக் கன்றுகளும் இருக்கின்றன. சுமார் ரூ. 7000க்குப் பெறுமான மாடுகள் மீதமிருக்கின்றன. வீட்டிற்கு வாங்கிய கடனில் பாதிக்கு மேல் அடைத்துவிட்டேன். பாலின் வருமானத்தின் மூலம் முதல் இரண்டு பெண்களை ரூ. 2000 செலவு செய்து திருமணம் செய்து கொடுத்து விட்டேன். மாடுகள் வாங்கிய பின்னர் கணவன் மனைவி இருவரில் ஒருவர் தான் கூலி வேலைக்குச்செல்கிறோம். இம்மாதிரி பால் மாடு வழங்குவது ஏழைகளின்வாழ்க்கைத் தரத்தை உயரச் செய்வதற்கு மிகவும் உதவியாக இருக்கிறது. உண்மையாக உழைத்தால் இம்மாதிரி திட்டத்தால் மேலும் பல ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாம். பால் மாட்டிலிருந்து முதல் ஆறு மாதங்களுக்கு தினசரி 4 லிட்டர் பால் கிடைத்தது. 6 முதல் 8 மாதம் வரை 3 லிட்டர் பால் கிடைத்தது. 8 முதல் 10 மாதம் வரை 2 லிட்டர் பால் கிடைத்தது.

எருமைப்பாலுக்கு நல்ல விலை கிடைத்ததால் விற்பதற்கும் சுலபமாக இருந்தது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மானியம் பெற்று இரண்டு மாடுகள் வாங்கினேன். குடும்ப வருமானம் பெருக வாய்ப்பு எற்பட்டது●

# நாய்களுக்கு வெறிபிடிக்காமல் இருக்க புதிய மருந்து!



இந்தியாவில் கிட்டத்தட்ட 5 இலட்சம் பேர் ஆண்டுதோறும் நாய்க்கடிக்கு ஆளாகின்றனர். குறைந்தபட்சம் 25,000 பேராவது வெறிநாய்க்கடியால் ஆண்டு தோறும் சாவைத் தழுவுவதாக மருத்துவப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. நம் நாட்டில் ஐந்து கோடி அளவிற்குத் தெரு நாய்கள் சுற்றி வருகின்ற நிலையில், வெறிநாய்க்கடிப் பிரச்சினை கொடுமையானதுதான்.

வெறிநாய்க்கடிக்கு ஆளானவர்களைச் சாவினின்றும் மீட்க மருந்துகள் பல வந்தவண்ணம் இருப்பினும், வீட்டு நாய் வெறிபிடிக்காமல் இருக்க மருந்துகள் கண்டுபிடிப்பது அரிதாக இருந்து வந்தது. ஆனால் தற்போது நீலகிரி மாவட்டத்தில் குன்னூரில் உள்ள பாஸ்டியர் இன்ஸ்டிடியூட் விஞ்ஞானிகள் நாய்களுக்கு வெறி பிடிக்காமல் தடுக்க புதிய ஊசி மருந்தினைக் கண்டுபிடித்து வெளியிட்டுள்ளனர்.

*16-7-88* அன்று குன்னூரில் பாஸ்டியர் இன்ஸ்டிடியூட்டில் இப்புதிய மருந்து அறிமுக விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு இமாசலப் பிரதேசம் கசோலியில்உள்ளமத்திய ஆராய்ச்சி நிலைய முன்னாள் இயக்குநர் டாக்டர் ஏ. கே. தாமஸ் தலைமை வகித்தார். இந்த இன்ஸ்டிடியூட்டின் இயக்குநர் டாக்டர் வி. ஆர். கல்யாணராமன் விழாவில் வரவேற்புரை நல்கினார். இவர் தம் வரவேற்புரையில் ''நாய்களுக்கு எவ்வாறு வெறி பிடிக்கிறது என்பது பெரும்பான்மை மக்களுக்குத் தெரியாமல் உள்ளதாகவும், தக்க நேரத்தில் தங்கள் வீட்டு நாய்களுக்குத் தடுப்பு ஊசி போட்டுக் கொள்வதன் மூலம் நாய்களுக்கு வெறி ஏற்படுவதைத் தடுக்க முடியுமென்றும், இதுபற்றி தொடர்ந்து விளம்பரம் செய்யப்பட வேண்டும் என்றும், தெருவில் திரியும் நாய்களுக்கு வெறி பிடிக்காமல் தடுக்க தடுப்பூசி போடப்பட வேண்டும். இல்லாவிட்டால் அவற்றைக் கொன்றுவிட வேண்டுமென்றும்' குறிப்பிட்டார்.

மேலும் இவர் 'வெறி நாய்க்கடி மருந்து தயாரிப்பு பற்றிப் பயிற்சி பெற உலகச் சுகாதார அமைப்புப் பயிற்சியாளர்களை இந்த பாஸ்டியர் இன்ஸ்டிடியூட்டிற்கு அனுப்பி வைப்பதாகவும், இந்த உலக சுகாதார அமைப்பு (WHO) வெறிநாய்களுக்குப் புதிய மருந்து கண்டுபிடிக்க இந்த நிலையத்தைத் தேர்ந்தெடுத்துள்ளதென்றும், அதற்கென நவீன எந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளதாகவும், இன்று இங்கு அறிமுகப்படுத்தப்படும் மருந்து முன்பு இருந்தவைகளைக் காட்டிலும் சக்தி வாய்ந்தது என்றும், வீட்டில் வளரும் நாய்கள் அனைத்திற்கும் இந்த மருந்தைப் பயன்படுத்தினால் அவற்றிற்கு வெறி பிடிக்காது' என்றும் எடுத்துரைத்தார்.

இவ்விழாவில் முக்கிய விருந்தினரான மத்திய சுகாதாரத்துறைச் செயலாளர் திரு எஸ். என். தனோவா இ.ஆ.ப., அவர்கள் இப்புதிய மருந்தை அறிமுகப்படுத்திப் பேசும் போது 'வெறிநாய்களுக்கு மருந்து தயாரிப்பதில் குன்னூர் பாஸ்டியர் இன்ஸ்டிடியூட் உலகப் புகழ்பெற்று விளங்குகிறது. இந்த நிறுவனம் இன்றைய உலகினை அச்சுறுத்தும் 'எய்ட்ஸ்' நோய்க்கும் மருந்து கண்டுபிடிக்க முயல வேண்டும். போலியோ நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கும் பிரிவினை மீண்டும் ஏற்படுத்தி, இந்த நிறுவனத்தின் விஞ்ஞானிகள் மருந்து கண்டுபிடிக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

டாக்டர் ஜி.வி. ஜெ. ஏ. ஹர்ஷவர்த்தன் அவர்களின் பாராட்டுரையைத் தொடர்ந்து விழாவின் முடிவில் பாஸ்டியர் இன்ஸ்டிடியூட் துணை இயக்குநர் டாக்டர் வசந்த் பண்டிட். நன்றி கூறினார்.

**வி. கோவிந்தபிரசாத்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், நீலகிரி மாவட்டம்.**

# தஞ்சை மாவட்டத்தில் ஆளுநரின் ஆலோசகர்

தமிழ்நாட்டில் விவசாய உற்பத்தியை பெருக்கும் நோக்கத்துடன் விவசாய உற்பத்தியில் உள்ள தடைகள் மற்றும் விவசாயிகளின் குறைகளை நேரில் கண்டறிந்து களைவதற்கு, தமிழக அரசு ஓர் உயர்நிலைக் குழுவை மாநில அரசின் திட்டக் குழுத் தலைவர் திரு டி.வி. அந்தோணி, இ.ஆ.ப., தலைமையில் நியமித்துள்ளது. இக்குழு மாவட்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விவசாயிகளின் பிரச்னைகளை நேரில் கண்டறிந்து தீர்வு காண முடிவு செய்தது.

தமிழக அரசின் உயர்நிலைக்குழு 18.8.88 அன்று தஞ்சாவூர் வந்தடைந்தது. மாநில திட்டக் குழுத் தலைவர் திரு. டிவி. அந்தோணி, இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு அரசு கூட்டுறவு வங்கி தனி அலுவலர் திரு எஸ். லெட்சுமிநாதன், இ.ஆ.ப., மாநில கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு. என். பி. குப்தா, இ.ஆ.ப., வேளாண்மைத் துறை இயக்குநர் திரு.வி.விசுவநாதன், இ.ஆ.ப., பொதுப்பணித் துறை (நீர்ப்பாசனம்) தலைமைப் பொறியாளர் திரு.நாகேஸ்வரன் ஆகியோர் வருகை புரிந்தனர். இவர்களைத் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். மச்சேந்திர நாதன், இ.ஆ.ப., வரவேற்றார்.

இக்குழு அன்று சுற்றுப் பயணத்தைத் தொடங்கியது. கும்பகோணம், மயிலாடுதுறை, மன்னார்குடி, பட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளுக்குச் சென்று, அப்பகுதியிலுள்ள விவசாயிகள் மற்றும் விவசாயச் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்து, அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தது. இது தொடர்பான தஞ்சாவூர் மாவட்ட விவசாய மாநாடு, தஞ்சாவூரில் 23.8.88 அன்று நடைபெற்றது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. சிங்காரவடிவேலு, திரு.இ.எஸ்.எம். பக்கீர்முகம்மது, ஊராட்சி மன்றத் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள், முன்னோடி விவசாயிகள், விவசாயச் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களைக் கூறினார்கள். மாநாட்டிற்கு வந்திருந்தவர்களை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் வரவேற்றார்.

மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஜி. வி. இராமகிருஷ்ணா, இ.ஆ.ப., அவர்கள் விவசாயக் கண்காட்சியைத் திறந்து வைத்து, விவசாய மாநாட்டுப் பேருரையாற்றினார். அவர் உரையாற்றுகையில் :

விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவை மீது ஒரு மாதக்காலத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். தொலைநோக்குடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு அவற்றின் மீது சரியான முறையில் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். துவக்கத்தில் பேசிய தஞ்சாவூர் மாவட்ட முன்னோடி விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர் தலைவர்களின் பலவேறு கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கும் வகையில் ஆலோசகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாநில திட்டக் குழுத் தலைவர் திரு.டி.வி.அந்தோணி, இ.ஆ.ப., தமது தலைமையுரையில், ''வாய்க்காலைப் பராமரிக்கும் பணியில் அரசும், பொதுமக்களும் இணைந்து செயலாற்ற வேண்டும்'' என்றும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 1987-88இல் சி.ஆர். 1,009 நெல்விதை 146 மெட்ரிக்டன் தான் தேவைப் பட்டதென்றும், ஆனால் இந்த ஆண்டு சிறப்பு அரிசி உற்பத்தித் திட்டத்தின் கீழ் 960 மெட்ரிக் டன் சி.ஆர். 1009 விதை நெல் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதென்றும்" கூறினார். "இனிமேல் விதை தெளிக்கும் விவசாயிகள் குறுகிய காலப் பயிர்களான ஐ.ஆர். 20, கோ-43 வகை விதை நெல்லைப் போடவேண்டுமென்றும்" அவர் கூறினார். "கடந்த நான்கு நாட்களாக 8 இடங்களில் விவசாயிகளின் கருத்தை அறிந்ததாகவும், அவர்களின் கோரிக்கைகளான விவசாய ஊக்கத் தொகை வழங்குதல், பட்டிகள் (பவுண்டுகள்) அமைத்தல், நீண்ட காலக் கடன் வழங்குதல், முதலியவற்றைப் பற்றி அரசு உடனே பரிசீலிக்கும் என்றும்" தெரிவித்தார்.

நீர்ப்பாசனத் தலைமைப் பொறியாளர் திரு.நாகேஸ்வரன் பேசும்போது, தஞ்சாவூர் மாவட்டத்தில் செல்லும் 65 முக்கியமான வாய்க்கால்களில், இதுவரை 23 வாய்க்கால்களில் சீரமைப்புப் பணிகள் முடிவடைந்து விட்டதாகவும், இவ்







வாண்டு 11 வாய்க்கால்களில் சீரமைப்புப் பணி முடிக்கப்படுமென்றும், மீதமுள்ளவைகள் 1990க்குள் பணி முடிக்கப் பெறும் என்றும் தெரிவித்தார். "மேலும் தஞ்சாவூர் மாவட்டத்தில் 138 கண்மாய்களில் தூர் எடுக்கும் பணி நடைபெறுவதாகவும் இதற்கு 80 புல்டோசர்கள் பயன்படுத்தப்படுவதாகவும்" அவர் தெரிவித்தார்.

தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி தனி அலுவலர் திரு. லெட்சுமிரதன், இ.ஆ.ப., பேசும்போது, "தமிழகத்தில் சிறப்பு அரிசி உற்பத்தித் திட்டத்தின் கீழ் ரூ. 215 கோடி வழங்கப்படுவதாகத் தெரிவித்தார். மேலும் தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயிகளின் துயரைத் துடைப்பதற்காகவே ரூ. 121 கோடிக்கு வட்டித் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும், இதுவரை ஒரு ஏக்கருக்குப் பயிர்க்கடனாக வழங்கப்பட்ட ரூ. 1000 தற்போது ரூ. 1460 என உயர்த்தப்பட்டுள்ளதாகவும், மத்தியக் காலக் கடனாக ரூ. 214 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளதாகவும்" தெரிவித்தார். "நிலவள வங்கிகளில் கடன் பெற்றிருந்த விவசாயிகள் அத்தொகையைக் கட்டியவுடனே தாமதமின்றி, பத்திரத்தைத் திரும்பக் கொடுத்துவிடுமாறு ஆணையிட்டுள்ளதாகவும்" அவர் கூறினார். 'வாரம்தோறும் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு விவசாயக் கூட்டுறவுச் சங்கக் கடையில் ஆய்வு செய்வார் என்றும்' அவர் தெரிவித்தார்.

## நவீன அரிசி ஆலை

சீர்காழி வட்டம், எருக்கூரில் 200 இலட்ச ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள நவீன அரிசி ஆலை, தவிட்டுச் சமையல் எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலையை 23.8.88 அன்று மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி.வி.இராமகிருஷ்ணா, இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார். மேலும் இரண்டாவது கட்ட நவீன அரிசி ஆலைக்கும் அடித்தளம் இட்டார். அப்போது அவர் பேசியதாவது:

''தஞ்சாவூர் மாவட்டத்தை, தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்று அழைக்கின்றோம். கடந்த சில ஆண்டுகளாக மழையின் அளவு குறைந்துள்ளதால், குறைந்த அளவு தண்ணீரைப் பெற்று, அதற்கு ஏற்ப நெல் சாகுபடி செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம். பெரும்பாலும், ஒரு போகம் நெல் சாகுபடி செய்கிறோம். உற்பத்தியாகும் நெல்லை நாம் சேதமாக்காமல் பயன்படுத்த வேண்டும்.

''விஞ்ஞான முறையில் நெல்லைச் சேமிப்பதன் மூலம் நெல் வீணாவதைத் தவிர்க்கலாம். அரைக்கும் பொழுது அரசு அமைத்துள்ள இது போன்ற நவீன ஆலைகளில் அரைக்க வேண்டும். அப்பொழுது அரிசி உடையாமலும், அதே நேரத்தில் தவிட்டிலிருக்கும் சமையல் எண்ணெய் எடுத்துப் பயன்படுத்த முடியும்.

விழாவில் தலைமையுரையாற்றிய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. டி. ஆர். சீனிவாசன், இ.ஆ.ப., "7ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் 6 நவீன அரிசி ஆலை அமைக்கப்படவிருப்பதாகவும், அவற்றில் மூன்று ஆலைகள் இவ்வாண்டு முடிவிற்குள் நெய்வேலி, போளூர், மானாமதுரை ஆகிய இடங்களில் பூர்த்தியடைந்துவிடும் என்றும், தற்போது திறக்கப்பட்டுள்ள நவீன அரிசி ஆலை நாள்தோறும் 100 டன் நெல் வேகவைக்கும் திறன் வாய்ந்தது என்றும்" குறிப்பிட்டார்.

சிறப்புரையாற்றிய தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். மச்சேந்திரநாதன், இ.ஆ.ப., "மழைக்காலத்தில் நெல்லைக் காய வைப்பதற்கு இந்த நவீன அரிசி ஆலையை, தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகள் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

திரு. இ.எஸ்.எம். பக்கீர் முகமது எம்.பி., கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் திரு. கோ ஜெயராமன், எருக்கூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு அ. ரெத்தினம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

## பேருந்து நிலையத் திறப்பு விழா

மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி. வி. இராமகிருஷ்ணா,




# பெரியார் மாவட்டத்தில் இலவச சித்த மருத்துவ முகாம்

பெரியார் மாவட்டத்தில் உள்ள லக்காபுரம் அரசு உயர்நிலைப்பள்ளியில் 7.8.88 அன்று மொடக்குறிச்சி ஆரம்பச் சுகாதார நிலைய சித்த மருத்துவப் பிரிவினர் இலவச சித்த மருத்துவ முகாம் நடத்தினர். அதில் சுமார் 550 நோயாளிகள் சிகிச்சை பெற்றனர். பவானி அரசு மருத்துவமனை உதவி மருத்துவ அலுவலர் டாக்டர் மணிவண்ணன் அனைவரையும் வரவேற்றார்.

லக்காபுரம் மில் அதிபர் திரு. அய்யாசாமி விழாவிற்குத் தலைமை வகித்தார். பெரியார் மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு எம்.பாலச்சந்திரன் முகாமைத் துவக்கி வைத்துச் சிறப்புரையாற்றும்போது, ''சித்த மருத்துவம் நமக்கு ஒன்றும் புதியதல்ல. பழையது தான். நாம் பாட்டி வைத்தியம், கை வைத்தியம் என்று சொல்வது எல்லாம் சித்த வைத்தியத்தைத்தான். சித்த மருத்துவத்தின் மூலம் உடல் திடகாத்திரமாக இருக்கும். சித்தர்கள் கண்டுபிடித்த மூலிகைகள், மருந்துகள் இப்பொழுது வழிவழியாக நம் சமுதாயத்திற்குப் பலன அளித்து வருகின்றன. சித்த மருத்துவத்தை - நாம் இருக்கும் இடம் தேடி வந்து, நாம் அனைவரும் பயன்பெறுவதற்காகவே, இத்தகைய இலவச சித்த மருத்துவ முகாம்களை நடத்துகிறார்கள். இவைகளை நாம் பயன்படுத்தி சித்த மருத்துவத்தை அனைவரும் கடைப்பிடித்து நல்வாழ்வு பெற வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

லக்காபுரம் அரசு உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் திரு.சுப்பிரமணியம், டாக்டர் ராஜு, தாயம்பாளையம் உதவி மருதத்துவ அலுவலர் டாக்டர் தங்கராஜ், டாக்டர் தெரசா, மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் டாக்டர் கா.பழனிச்சாமி ஆகியோர் சித்த மருத்துவத்தின் பெருமைகளை விளக்கிப் பேசினர். மொடக்குறிச்சி உதவி மருத்துவ அலுவலர் டாக்டர் தர்மராஜ் நன்றி கூறினார்.

**நா. தில்லை கோவிந்தன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், ஈரோடு.**

---

இ.ஆ.ப., அவர்கள் 24.8.88 அன்று நாகப்பட்டினத்தில் 55 லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தைத் திறந்து வைத்தார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டார்—

''நாகப்பட்டினத்தில் 55 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அறிஞர் அண்ணா பேருந்துநிலையத்தைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சியுறுகிறேன். இந்தப் பேருந்து நிலையத்தின் மூலம் பல புனித தலங்கள் இணைக்கப்பட்டு, அதன் மூலம் இலட்சக்கணக்கானோர் பயனடைவார்கள். நகராட்சி நடத்துவதில் பல சிரமங்கள் இருப்பதை நான் நன்கறிவேன். சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பு நகராட்சி நிர்வாகச் செயலராக இருந்தபொழுது, நகராட்சியின் நிர்வாகம் மற்றும் அதன் நிதி வசதியினை நன்கறிவேன். இந்திய அளவில் தற்போது நகரங்கள் பல விதத்திலும் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளன. நாகப்பட்டினம் நகராட்சியும் விதிவிலக்கல்ல. ஜனப்பெருக்கம் இருக்கும் அளவிற்கு நகராட்சியின் நிதி வசதி திருப்திகரமாக இல்லை. நகராட்சிகளுக்கு அரசு நிதியுதவியும் மானியமும் வழங்கி வருகிறது. அரசின் நிதிநிலைமை தற்போது திருப்திகரமாக இல்லையென உங்களுக்குத் தெரியும்.

''சமீபத்தில் மேதகு ஆளுநர் அவர்கள் இந்தியப் பிரதமர் அவர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டிற்கு ரூ. 150 கோடி அதிக நிதி ஒதுக்கீடு செய்து தரும்படி கோரியுள்ளார். கிராம வளர்ச்சிக்கும், மாநகராட்சிக்கும் மத்திய அரசின் வளர்ச்சித்திட்டங்கள் உள்ளன. அதுபோல் நகராட்சி மேம்பாட்டிற்கெனத் திட்டங்கள் ஏதுமில்லை. நகராட்சிக்கென்று நிதிக்கமிஷன் நிறுவி அதன் மூலம் நகராட்சியின் நிதி ஆதாரத்தைப் பெருக்கி, அதன்மூலம் நிர்வாகம், பொதுச் சுகாதாரம், குடிநீர் மற்றும் சாலை வசதிகளை நன்கு பராமரிக்க முடியும். நகராட்சியின் செலவும் தற்போது மிகவும் அதிகரித்துள்ளது. வருவாய்க்குத் தகக வாறு செலவுகளைக் குறைத்து, வளர்ச்சிப் பணிகளுக்கு ஆக்கப்பூர்வமாக நிதி ஆதாரங்களைத் திருப்பி விட வேண்டும்.

விழா முடிவில் மேதகு ஆளுநரின் ஆலோசகர் 67 முன்னோடி விவசாயிகளுக்குப் பண்ணைக்குட்டைத் திட்டத்திறகாக ரூ. 27 இலட்சம் கடன் வழங்கினார். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1,579 நபர்களுக்கு ரூ.75 இலட்ச ரூபாய் கடன் வழங்கினார். தொழிலாளர் ஈட்டுறுதியுடன் இணைந்த சிறப்பு ஓய்வூதியத்தின் கீழ் பாதிக்கப்பட்டவர்களின் வாரிசுதாரர்கள் 18 நபர்களுக்கு 90,000 நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்குக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் 66 நபர்களுக்கு ரூ. 66,000 வழங்கினார். 142 ஏழை விவசாயிகளுக்கு வருவாய்த் துறை மூலம் வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டது. முன்னதாக நகரமன்றத் தலைவர் திரு.இரா.ஈஸ்வரி, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எம்.மகாலிங்கம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜி.வீரையன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. கே.ஆர்.கிருஷ்ணமூர்த்தி, திட்ட அலுவலர் திரு. அசோக்வரதன் ஷெட்டி, இ.ஆ.ப., முதலானோர் சிறப்புரையாற்றினார்கள்.

**ஜி. டி. மோகன்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர். தஞ்சாவூர்.**



# நல்விதையின் நற்பண்பு


**வ. கிருஷ்ணசாமி**

**இணைப் பேராசிரியர்**
**(விதை நுண்ணியல்)**
**வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்**
**பாலூர்-607 113.**


இனத்தூய்மை அல்லது பாரம்பரியத்தூய்மை என்பது ஒரு நல்ல விதையின் சிறப்பியல்பாகும். விதைக்கும் விதையில் இனத் தூய்மை இருந்தால்தான் பயிரில் சமச்சீர் வளர்ச்சியும், நீர், உரம் மற்றும் பூச்சி-பூசாணங்கொல்லி, போன்ற இடுபொருள்களின் முழுப் பயனும், நல்ல மகசூலும் பெற முடியும். வல்லுனர், அடிப்படை மற்றும் சான்று விதைகளின் இனத் தூய்மை முறையே 100, 99.5 மற்றும் 99.0 சதம் இருக்க வேண்டும்.

விதை உற்பத்தியின்போது இனத் தூய்மையைப் பராமரிக்கத் தனி கவனம் செலுத்தப்படுகிறது. இருப்பினும் பல்வேறு காரணங்களினால் ஒரு பயிர் இரகம் அதன் தனித் தன்மைகளைச் சிறிது சிறிதாக இழக்கின்றது.

**சுற்றுப் புறவேறுபாடு;** ஒரு இரகத்தின் விதைப்பயிரை அந்த இரகத்திற்கு ஏற்ற சூழ்நிலையில் வளர்க்காமல், மாறுபட்ட சூழ்நிலையில் வளர்க்கும்பொழுது, பயிர் வளர்ச்சியில் வேறுபாடு காணப்படுகிறது.

**இயந்திரக் கலப்பு:** ஒரே விதைப் பானைக் கொண்டு இரு இரகங்களை விதைப்பதாலோ அல்லது அதே பயிரைச் சேர்ந்த மற்ற இரகங்களின் தான்தோன்றிச் செடிகள் மூலமாகவோ இயந்திரக் கலப்பு விதைகளில் ஏற்படுகிறது. இரு இரகங்களை அருகருகில் உள்ள வயல்களில் வளர்த்தால் அறுவடையின் போதும், கதிரடிக்கும் போதும் கலப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. கதிரடிக்கும் களம் மற்றும் சுத்திகரிப்பு இயந்திரம் சுத்தமாக இல்லாத போதும் இந்நிலை ஏற்படலாம்.

**சடுதி மாற்றம்:** இது மிக அபூர்வமாக நிகழ்கிறது. சடுதி மாற்றத்தால் மாறுபட்ட செடிகள் பாரம்பரியத்தன்மையில் வேறுபட்டிருக்கும்.

**அயல் மகரந்தச்சேர்க்கை:** தானே நடக்கும் அயல் மகரந்தச் சேர்க்கை மூலம் இரகம் பாதிக்கப்படும்.

**பராம்பரியத் தன்மையில் சில வேறுபாடுகள்:** ஒரு இரகம் வெளியிடப்படும்பொழுது செடிகள் பார்வைக்கு ஒரே தோற்றம் கொண்டிருந்தாலும் சிறு பாரம்பரிய வேறுபாடுகளை இன்னும் கொண்டிருக்கலாம். பிற்பட்ட தலைமுறைகளில் இந்த வேறுபாடு வெளியில் தெரிய ஆரம்பிக்கும். இவ்வாறு வேறுபடும் செடிகளை கருவிதை மற்றும் வல்லுநர் விதை உற்பத்தியின் போது நீக்கிவிடுதல் நலம் பயக்கும்.

**நோய்த் தாக்குதல்:** நோய்க் கிருமிகளில் புதிய இனங்கள் தோன்றும் பொழுது அவை புதிய பயிர் இரகத்தைப் பாதிக்கலாம்.

**விதை உற்பத்தியில் இனத்தூய்மை எவ்வாறு பராமரிப்பது?**

விதை உற்பத்தியின் போது இனத்தூய்மையைப் பராமரிக்கப் பல வழிகள் உள்ளன. (அ) மூல விதைக் கட்டுப்பாடு: விதைப் பயிரைப் பயிர் செய்யும் பொழுது அங்கீகரிக்கப்பட்ட மூல் விதைகளையே உபயோகிக்க வேண்டும். விதைச்சான்றளிப்பு முறைகளில் நான்கு விதை வகுப்புக்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அவை வல்லுநர், அடிப்படை ,பதிவு மற்றும் சான்று விதை வகுப்புக்களாகும்.

**வல்லுனர் விதை:** வல்லுனர் விதையென்பது அந்த இரகத்தை வெளியிட்ட பயிர் வல்லுனர் அல்லது நிலையத்தின் நேரடி மேற்பார்வையில் உற்பத்தி செய்யப்படுவதாகும். ஆரம்பம் மற்றும் அவ்வப்போது உற்பத்தி செய்யப்படும் அடிப்படை விதைக்கு மூல விதையாகும்.

**அடிப்படை விதை:** இவை வல்லுனர் விதையிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்றன. இரகத்தின் பாரம்பரியத் தனிதன்மையும் இனத் தூய்மையும் பராமரிக்கப்பட்டிருக்க வேண்டும். இவை நேரிடையாகவோ

அல்லது பதிவு விதைகளின் மூல மாகவோ சான்று விதை உற்பத் திக்கு மூல விதையாக அமைகிறது.

**பதிவு விதை**: இவை அடிப்படை விதையில் இருந்து உற்பத்தி ஆகின்றன. பாரம்பரிய தனித்தன் மையும் இனத்தூய்மையும் திருப்தி கரமான அளவு அமைந்திருக்க வேண்டும். சான்று விதை உற்பத் திக்கு இது மூல விதையாக அமை கிறது.

**சான்று விதை**: இவை அடிப் படை பதிவு அல்லது சான்று விதைகளிலிருந்து உறபத்தியாகின் றன. தன் மகரந்தச்சேர்க்கையுள்ள நெல், பயறுவகை போன்ற பயிர் களில் சான்று விதைகளை ஒரிரு தலைமுறைக்குச் சான்று விதைகளி லிருந்தே உற்பத்தி செய்யலாம். இந்த விதைதான் விவசாயிக்குக் கிடைக்கிறது.

**(ஆ) முந்தைய பயிர்த் தேவை**: முதிரும் காலத்தில் விதை தெறிக் கும் தன்மையைக் கொண்டுள்ள பயிர்களில் ஒரு இரகத்தைப் பயிர் செய்யும் வயலில் முந்தைய பருவத் தில் அதே பயிரைச் சேர்ந்த வேறு இரகங்கள்பயிர் செய்யப்பட்டிருக்கக் கூடாது. இதனால் தான்தோன்றிப் பயிர்களைத் தவிர்க்கலாம்.

**(இ) பயிர் விலக்கம்**: இது விதைப் பயிரை மற்ற இரகப் பயிர்களில் இருந்து விலக்கி வைத்தல் ஆகும். அயல் மகரந்தச் சேர்க்கையுள்ள பயிர்களுக்குப் பயிர் விலகு தூரம் அதிகம் தரவேண்டும்.

**(ஈ) கலப்புச் செடி நீக்கம்**: விதைப் பயிரில் அந்த இரகத்தை விட்டு மாறுபட்ட குணாதிசயங்கள் கொண்ட செடிகள் இருப்பின் அவைகளைக் கலப்பு அல்லது கள வான்கள் என்கிறோம். இம்மாதிரி யான கலப்புச் செடிகளை விதைப் பயிரிலிருந்து அவ்வப்பொழுது நீக்கு தல் வேண்டும்.

**விதைகளின் இனத்தூய்மையை அறிவது எவ்வாறு?**

விதைகள், நாற்றுகள் மற்றும் செடிகளில் ஒரு இரகத்தின பாரம் பரியத் தனித்தன்மைகள் உள்ள னவா என, கூர்ந்து ஆராய்வதன் மூலம், விதைகளின் இனத்தூய்மை யைக் கண்டறியலாம். விதைகளின் இனத்தூய்மையைக் கண்டறியும் முறைகளை மூன்று வகைப்படுத்த லாம்.

1. ஆய்வுக்கூட முறை
2. வளர்ப்பு முறை
3. வெளி வளர்ப்புச் சோதனை

**1. ஆய்வுக்கூட முறை**

**விதைகளைக் கவனித்தல்**: விதை களை நேரிடையாகவோ அல்லது பூதக் கண்ணாடி மூலமாகவோ ஆராய்ந்து, அவைகளின் பருமன், வடிவம், நிறம், மற்றும் இதர புற அமைப்புக்களைக்கொண்டு இனத் தூய்மையை அறியலாம்.

ஆய்வுக்கூட முறையில் ஃபீனால் ஆய்வு என்பது கோதுமை மற்றும் நெல் விதை களின் இனத்தூய்மையை அறியப் பயன்படுகிறது. ஒருசதம் ஃபீனால் திரவத்தில் ஊற வைக்கும் பொழுது சில இரகங்களில் விதைகளின் தோல் நிற மாற்றம் அடைகிறது. சில இரகங்களின் விதைகளில் அவ் வாறு ஆவதில்லை. பயறு வகைப் பயிர்களில் 1 சதம் பொட்டாசியம் டைக்குரோமட் அல்லது சோடியம் ஹைட்ராக்சைடு உபயோகித்து, விதைகளின் தோலில் நிற மாற் றத்தை உண்டாக்கி இரகத்தை அறியலாம்.

வேதியியல் முறையில் இனத் தூய்மை அறிய இன்னொரு முறை எலெக்ட்ரோ ஃபாரசிஸ் ஆகும். இம்முறை இனத் தூய்மையைத் துல்லியமாக அறிய உதவுகிறது. இன்னொரு முறை குரோமட்டோகிராஃபி முறையா கும். இம்முறை எலெக்ட்ரோ ஃபாரசிஸ் முறையை விட வேகமாக வும் துல்லியமாகவும் இரகங்களை அறிய உதவுகிறது.

**நாற்றுக்களைக் கவனித்தல்**: விதைகளை முளைக்க வைத்து நாற் றுக்களை உண்டாக்கி பின் அவை களை ஆராய்ந்து இரகங்களை அறியலாம். நாற்றுத்தண்டின் நிறம் இரகங்களைப் பாகுபடுத்தி உதவுகிறது. சில சமயம் நாற்றுக் களை அல்ட்ரா வைலட் வெளிச்சத் தில் பார்க்கும் பொழுது சில இரகங் களில் நாற்றின் வேர் மினுமினுப் பைக் கொடுக்கும்.

**2. வளர்ப்பறை முறை**: குறைந் தது நூறு செடிகளையாவது வளர்ப் பறையில் வளர்த்து ஒரு இரகத் திற்குரிய குணாதிசயங்கள் அச்செடி யில் உள்ளனவா என ஆராய வேண் டும். சில சமயம் நோய்க் கிருமி களைச் செடியின் மீது தெளிக்கும் போது அந்நோயின் பாதிப்புள்ள இரகங்களின் செடிகள் நோய்வாய்ப் படும். வேறு இரகத்தின் செடிகள் அவ்வாறு பாதிக்கப்படாது.

**3. வெளி வளர்ப்புச் சோதனை**: இப்முறையில் சோதிக்க வேண்டிய விதைகளை வயலில் வரிசையில் விதைத்தல் வேண்டும். நடுநடுவே இரகம் தெரிந்த விதைகளையும் வரிசையில் விதைத்து வைக்க வேண்டும். சில இரகங்களில் சிறு செடியாய் இருக்கும் பொழுது அடையாளம் காணமுடியும். சில வற்றில் மலர்ந்த பிறகு தான் வேறு பாடு செவ்வனே தெரியவரும்.

இந்திய விதைச் சட்டப் 1966ஆன் படி மத்திய விதைக் குழுவினால் அறிவிக்கப்பட்ட இரகங்களின் விதைகளை விற்பனை செய்யும் பொழுது உண்மைநிலை அட்டை பொருத்துவது கட்டாயமாகும். சான்றிதழ் பெறுவது விதை உற் பத்தியாளரின் விருப்பம். சான்று விதைகள் இனத்தூய்மைக்கு உத்தர வாதம் அளிக்கப்பட்டவை. ஆனால் உண்மை நிலை விதைகள் அவ்வா றில்லை. ஆகையால் வேளாண் பெருங்குடி மக்கள் சான்றிதழ் விதை களை விதைத்துப் பயன்பெறவேண் டும்.

---



## ஒரு நாளும் மறக்க முடியாது!

நமக்கு நியாயமென்று பட்ட கருத்துக்களை அஞ்சாது வெளி யிடுவதில் ஸ்ரீ நாயக்கர் முதல் ஸ்தானம் பெற்றவர் என்பதை ஒருவரும் மறுக்க முடியாது. சமய- சமூக - அரசியல் துறைகளில் ஸ்ரீநாயக்கர் செய்துள்ள தியாக மும், ஊழியமும், அவர் பட் டுள்ள கஷ்டங்களும் இத் தேசத் தினர் ஒரு நாளும் மறக்க முடியா தென்பதே நமது கருத்தாகும்.

—'தமிழ்நாடு' தலையங்கத் தில் டாக்டர் பி. வரதராஜலு நாயுடு (1934)

# தமிழக அரசின் அரும்பணிகள்

மக்கள் நலனில் அக்கறை கொண்டு தமிழக அரசு பல நலப் பணிகளை ஆற்றி வருகின்றது. அவைகளில் சில:

சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும் பூண்டி ஏரியில் தேவையான அளவு நீரைச் சேமித்து வைத்தால் குடிநீர்ப் பஞ்சத்தை எளிதில் போக்கி விடலாம் என்று ஆளுநர் ஆட்சியில் முடிவு செய்யப்பட்டது. இதற்காக ஊத்துக்கோட்டை அருகில் உள்ள ஆரணி ஆற்றில் இருந்து பூண்டி ஏரிக்குத் தண்ணீர்கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது.

15 கிலோ மீட்டர் தூரம் உள்ள இந்தக் கால்வாய்க்கு ''சுருட்டைப் பள்ளி'' என்று பெயரிடப்பட்டு, ரூ. 2 கோடி அரசு வழங்கியுள்ளது.

சென்னை நகரில் பல்வேறு தெருக்களுக்கு சோடிய விளக்குகள் ரூ. 1 கோடியே 95 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

சேலத்தில் விமான நிலையம் 130 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட உள்ளது. மத்திய விமானப்போக்குவரத்து அமைச்சர் சிவராஜ்பாட்டில் அடிக்கல் நாட்டினார்.

தமிழகத்தில் மூடப்பட்டுள்ள 41 நூற்பாலைகளில் 13 நூற்பாலைகள் திறக்கப்பட்டுச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும் ஏழு நூற்பாலைகள் விரைவில் திறக்கப்பட இருக்கின்றன.

தமிழக அரசின் பல்வேறு துறைகள் சீரமைக்கப்பட்டுள்ளன. பல்வேறு துறைகள் இதர துறைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.

பணிச் சுமையைச் சமத்துவப் படுத்திச் சீரமைக்கவும், துரிதமாகப் பணிகளை நிறைவேற்றுவதற்கு வசதியாகவும் இந்தச் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கிகள், வணிக வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகள், மண்டல ஊரக வங்கிகள் ஆகியவற்றிடமிருந்து கடன்வாங்கிப் பாசனக் கிணறு தோண்டி, அது பொய்த்துப் போனால், சிறிய மற்றும் குறுவிவசாயிகளுக்கு முழுச் செலவும் ஈடு செய்யப்படும். விவசாயிகள் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை.

''பொய்த்த கிணறுகளுக்கான இழப்பு நிதி'' ஒன்று ஏற்படுத்தப்படும். மாநில அரசு இதற்கு ரூ. 12.30 இலட்சத்தையும், மைய அரசு ரூ. 12.30 இலட்சத்தையும் அளிக்கும்.

தமிழ்நாடு கனிம நிறுவனப் பாறைகளில் கல் உடைக்கும் தொழிலாளர்களுக்கு தினக்கூலி உயர்வும், பிற சலுகைகளும் வழங்க ஒப்பந்தம் கையெழுத்தானது. 1988 ஜூன் மாதம் முதல் 1980 டிசம்பர் மாதம் வரை இந்த ஒப்பந்தம் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தின் சார்பில், பள்ளிக்கூட மாணவ-மாணவிகளுக்காக இதுவரை நான்கு கோடியே 22 இலட்சம் பாடப்புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மேற்கு ஜெர்மனி நாட்டில் உள்ளதைப் போல பக்கவாட்டில் நகரும் இருக்கைகள் (சீட்) கொண்ட பேருந்துகள் விரைவில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினால் விடப்படும்.

மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு ''டானிடா'' திட்டத்தின்கீழ் தமிழ் நாட்டில் தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த **தளி வட்டாரம்** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ரூ. 2 கோடி செலவிடப்படும். இதன்மூலம் ஏறத்தாழ ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பேர் பயனடைவார்கள்.

சென்னை கோட்டூர்புரத்தை அடுத்த தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப வளாகத்தில் ரூ.10 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுவரும் அறிவியல் பூங்கா திறந்து வைக்கப்பட்டது.

காசநோய்த் தடுப்பு மாத்திரைகள் விற்பனையில் இந்தியாவிலேயே தமிழகம் சாதனை படைத்து **முதற் பரிசு** பெற்றுள்ளது.

5 கல்லூரிகட்குத் தன்னாட்சி அந்தஸ்தைச் சென்னைப் பல்கலைக் கழகம் வழங்கியுள்ளது.

தேசிய உணர்வையும், நாட்டுப் பற்றையும் மக்களிடையே வளர்க்கும் நோக்கத்தோடு விடுதலைப் போராட்ட வரலாற்றை விளக்கும் அருங்காட்சியகம் ரூ. 2 கோடி செலவில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் சார்பில் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**கேரளாவில்** உள்ள வைக்கத்தில் ரூ. 15 இலட்சம் செலவில் தந்தை பெரியாருக்கு திருவுருவச் சிலையும் நினைவுத் தூணும் தமிழக அரசின் சார்பில் வைக்கப்படும்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் 63 ஏரிகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த ஏரிகளைச் சீரமைக்க ரூ.138 இலட்சம் செலவிடப்பட்டு வருகின்றது. இப்பணிகள் 1989 ஜூன் மாதத்திற்குள் முடிவடையும்.

நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் ஒரு பேருந்து ரூ. இரண்டு இலட்சம் செலவில் **எவர்சில்வரில்** உருவாக்கப்பட்டு வருகிறது. இந்த எவர்சில்வர் பேருந்து, முதலில் கன்னியாகுமரி மாவட்டக் கடற்கரைக் கிராமங்களில் விடப்படும். இந்தப் பேருந்துகளின் பாடி, என்ஜின் மற்றும் கருவிகள் எவர்சில்வரால் ஆனவை.

தமிழ்நாட்டில் நெல் உற்பத்தியை அதிகரிக்க, விவசாயிகளுக்கு ரூ.12 கோடி கடன் வழங்க இந்தியன் வங்கி திட்டமிட்டுள்ளது. இத்திட்டம் செங்கல்பட்டு மாவட்டம் கம்மவார் பாளையத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

—**அ. மருதவிநாயகம்**

## வேதாரணியத்தில்

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் துணைவியார் திருமதி ஜானகி வெங்கட்ராமன் அவர்கள் 4.9.'88 அன்று வேதாரணியம் கஸ்தூரிபாய் காந்தி கன்யா குருகுலத்தில் 4.50 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்ட அரவிந்த புனித அன்னை குழந்தைகள் இல்லத்தைத்திறந்து வைத்து, குருகுலத்தைச் சுற்றிப் பார்வையிட்டார். குழந்தைகள் இல்லத்திற்கு மத்திய சமூகநல வாரியமும், தமிழ்நாடு அரசும் மானியமாக 2.75 இலட்ச ரூபாய் வழங்கியுள்ளது.

அண்ணல் காந்தியடிகள் தம் வாழ்நாளில் கடைப்பிடித்த சத்தியம், நேர்மை, உண்மை இவைகளைக் கடைப்பிடித்து சிறப்பாக வாழ வாழ்த்துவதாக, குருகுலத்தில் நடந்த விழாவின்போது மேதகு குடியரசுத்தலைவர் அவர்களின் துணைவியார் திருமதி ஜானகி வெங்கட்ராமன் அவர்கள் கூறினார்.

# சென்னையில் தொழிலாளர் தினவிழா

நாடு விடுதலை பெற்ற நாற்பதாண்டு விழா, நேரு நூற்றாண்டு விழா, தொழிலாளர் தின விழா ஆகியவற்றை முப்பெரும்விழாவாக, தொழிலாளர் துறை 13.8.88 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் கொண்டாடியது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி.அலெக்சாண்டர் விடுதலைப்போராட்டத்தியாகிகளைப் பாராட்டி, போட்டிகளில் வெற்றி பெற்ற தொழிலாளர்களுக்குப் பரிசுகளை வழங்கிப் பேசினார்.

"சுதந்திரத்துக்காகவும், தொழிலாளர் நலன்களுக்காகவும் அந்த நாட்களில் பாடுபட்டவர்களை நன்றியோடு நினைவுகூர்வதற்கு இவ்விழா பயன்படுகிறது' என்று சொன்ன அவர், ""தமிழ்நாட்டிலுள்ள தொழிலாளர்கள் மிகுந்த கட்டுப்பாடு உடையவர்களாகவும், அறிவுத் திறன் மிக்கவர்களாகவும் உள்ளனர். தமிழ்நாட்டில் தொழிலாளர் நலனும், தொழில் உறவும் மிக நேர்த்தியாக உள்ளன"" என்று பாராட்டினார். ""மாநிலத்தில் மொத்தமுள்ள சுமார் 16,000 தொழிற்கூடங்களில், 29 தொழிற்கூடங்கள் மட்டுமே வேலை நிறுத்தம், கதவடைப்பு காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

தலைமை வகித்துப் பேசிய ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் ஆ.பத்மநாபன், 'தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது' என்றார்.

திரு ஜி.ராமானுஜம் (ஐ.என்.டி.யூ.சி), திரு எஸ்.ராகவானந்தம் (அண்ணாதொழிற்சங்கப்பேரவை); திரு கே.டி.கே. தங்கமணி (ஏ.ஐ.டி.யு.சி), திரு எஸ்.சி.சி. அந்தோணிப் பிள்ளை (எச்.எம்.எஸ்.), திரு ஆர். செங்காளியப்பன் (எம்.எல்.ஓ), திரு ராமநாதன் (யு.டி.யு.வி) உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கத் தலைவர்களும், தென்னிந்திய சர்க்கரை ஆலைச் சங்கத் தலைவர் திரு எஸ்.பி. பாலசுப்பிரமணியம், பொறியியல் தொழில் கூட்டமைப்பைச் சேர்ந்த திரு சேதுராமன் உள்ளிட்டவர்களும் விழாவில் பேசினர். தொழிலாளர், வேலைவாய்ப்புத் துறை ஆணையர் மற்றும் செயலாளர் திரு ஏ.பி.முத்துசாமி அனைவரையும் வரவேற்றார். தொழிலாளர்துறை ஆணையர் திரு கே.மலைச்சாமி நன்றி கூறினார்.

திரு எஸ்.சி.சி. அந்தோணிப் பிள்ளை, திரு கே.குருமூர்த்தி, திரு.கே.டி.கே.தங்கமணி, திரு.கே.ரமணி, திரு ஆர்.செங்காளியப்பன் உள்ளிட்ட 41 விடுதலைப் போராட்டக் காலத் தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களைப் பாராட்டி ஆளுநர் கௌரவித்தார்.

மாநில அளவிலான பேச்சு, கவிதை கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற ஆறு தொழிலாளர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. சிறந்த முறையில் தொழில் உறவைப் பேணிக் காத்ததற்காக, தமிழ்நாடு தேசியப் பொறியியல் ஊழியர்கள் தொழிற்சங்கத்தின் லூகாஸ் டி.வி.எஸ். பிரிவு, சுந்தரம் கிளேட்டன், ஹரிதா ஊழியர்கள் சங்கம், எம்.ஆர்.என்.சைக்கிள் உயர் ஆலை ஊழியர்கள் சங்கம் உள்ளிட்ட நான்கு தொழிற் சங்கங்களுக்கும், நான்கு நிறுவனங்களின் நிர்வாகத்துக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

சிறந்த தொழிலாளர் என்பதற்காக வழங்கப்படும் 'சிரம்வீர்' விருதுகள் திரு என். கலியமூர்த்தி (திருச்சி), திரு கே.கோபிநாத் (எண்ணூர்), திரு எஸ்.சுரேந்திரன் (திருச்சி), திரு பி.ராஜாமணி (திருச்சி), திரு என். குருசாமி (திருச்சி), திரு பி. மாதவன் (சென்னை), திரு எல். நீலமோகன் (சென்னை) ஆகியோருக்குக் கொடுக்கப்பட்டது.







# காவலர் குடியிருப்பு

தமிழ்நாட்டில் காவலர்கள் வசிக்க தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறது. அந்தக் கழகத்தின் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம் அலமாதியை அடுத்த வீராபுரத்தில், 84 வீடுகள் அடங்கிய புதிய குடியிருப்பு கட்டப்பட்டு உள்ளது. 62 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் இந்தக் குடியிருப்பு கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி.வி. ராமகிருஷ்ணா புதிய குடியிருப்பை 3.9.88 அன்று திறந்து வைத்தார். விழாவில் அவர் பேசியதாவது:

''நாட்டில் 20 வருடங்களுக்கு முன்பு இருந்த நிலைமை மாறிவிட்டது. குற்றங்கள் பெருகி விட்டன. இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கே பல இடங்களில் தீங்கு ஏற்பட்டு இருக்கிறது.

''20 வருடங்களுக்கு முன் சட்டத்தை மதித்தது போல, தற்போது மதிப்பது இல்லை. சட்டத்தைக் கண்டு கொள்ளாத நிலை அதிகரித்து வருகிறது.

''காவலர் வீட்டு வசதிக் கழகத்துக்கு அரசு வழங்கும் நிதி உதவிக்கான வட்டித் தொகையைக் குறைப்பதுபற்றிப்பரிசீலிக்கப்படும். காவலர்களுக்கு மேலும் அதிகமான வீடுகள் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்குத் தேவையான முயற்சிகளைத் தமிழக அரசு மேற்கொள்ள இருக்கிறது.''

தொடக்கத்தில், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத் தலைவர் திரு யோகன்தாஸ் வரவேற்றுப் பேசினார்.

விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. என்.வி.என்.சோமு கலந்துகொண்டு பேசினார்.

இறுதியில், காவலர் வீட்டு வசதிக் கழக நிர்வாக அலுவலர் திரு தங்கரத்தினவேலு நன்றி கூறினார்.





# ராஜரத்தினம் விளையாட்டு அரங்கில்

ஆசிரியர் தினவிழா விளையாட்டு விழாவின் நிறைவு விழா, சென்னை ராஜரத்தினம் விளையாட்டு அரங்கில் 4.9.88 அன்று நடைபெற்றது.

மாணவர் பேரணியைத் தலைமைச் செயலாளர் திரு எம்.எம். இராசேந்திரன் துவக்கி வைத்தார். விழாவிற்கு, கல்வித்துறைச் செயலாளர் டாக்டர் எச்.பி.என்.ஷெட்டி தலைமை வகித்துப் பேசினார். சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு புஜங்கராவ் வரவேற்றார். விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு, தலைமைச்செயலாளரின் துணைவியார் திருமதி சுசீலா இராசேந்திரன் பரிசுகளை வழங்கினார். பள்ளிக்கல்வி இயக்குநர் திரு.கி.கோபாலன் நன்றி கூறினார்.

# தேசிய ஒருமைப்பாட்டுப் பணிக்கு நிதியுதவி



தேசிய ஒருமைப்பாட்டுப் பணிகளுக்காக, தொண்டு நிறுவனங்கள்-அமைப்புகள் - பல்கலைக் கழகங்கள் மற்றக் கல்வி நிலையங்களுக்கு மானிய உதவி அளிப்பதற்கான நிபந்தனை விவரங்கள் வருமாறு:

**1. தொண்டு நிறுவனம் என்பதற்கு விளக்கம்**

இந்தத் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெறுவதற்கு, 'தொண்டு நிறுவனம்' எனப்படுவது.

(அ) 1860-ஆம் ஆண்டு இந்தியச் சங்கங்கள் பதிவுச் சட்டப்படி [1860-ஆம் ஆண்டுச் சட்டம் (XXI) பதிவு செய்யப்பட்டதொரு அமைப்பாக இருக்க வேண்டும்; அல்லது

(ஆ) தற்பொழுது அமலில் உள்ள ஏதேனும் ஒரு சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்டுள்ளதொரு பொது அறக்கட்டளையாக இருக்க வேண்டும்: அல்லது

**2. உதவிபெறத் தகுந்த நிறுவன அமைப்பு வகைகள்**

ஒரு நிறுவனம் உதவி பெறத் தகுதியாவதற்கு, பின்வரும் நிபந்தனைகளை அது நிறைவேற்றி வைப்பதாக இருக்க வேண்டும்.

(அ) தகுதியானதொரு சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்டதாகவோ, பதிவு செய்யப்பட்டதொரு நலப்பணி அமைப்பின் ஒழுங்குமுறைப்படி உருவாக்கப்பட்டதொரு கிளையாகவோ இருக்க வேண்டும். (பதிவு செய்யப்பட்டதொரு நிறுவனத்தோடு இணைக்கப்பட்டதாகவோ இருந்தால் மட்டும் இந்தக் காரியத்திற்குப் போதாது.)

(ஆ) சரியான முறையில் அமைக்கப்பட்ட நிர்வாகக் குழுவைக் கொண்டதாகவும், அதன் அதிகாரங்கள், கடமைகள், பொறுப்புகள் ஆகியவை தெளிவாக வரையறுக்கப்பட்டு, எழுத்து மூலமான அமைப்பு விதிகளைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

(இ) தொண்டு நிறுவனம் அல்லது நலப்பணி அமைப்பின் இலட்சியங்களும் குறிக்கோள்களும் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் குறிக்கோள்களுடன் ஒத்த தொடர்புடையவையாக இருக்க வேண்டும்.

(ஈ) ஓர் அமைப்பு-நிறுவனம், மாநில அரசு அல்லது ஊராட்சியால் நிர்வகிக்கப்படுவதாகவோ, அல்லது மாநிலச் சட்டமன்றத்தின் சட்டமொன்றின் மூலம், அல்லது மாநில அரசின் தீர்மானமொன்றின் மூலம் ஏற்பட்டதாகவோ, அல்லது பல்கலைக்கழகம் அல்லது கல்வி நிலையம் நீங்கலாக அரசு அல்லது ஊராட்சி நிதியிலிருந்து நிதி வசதி பெறுவதாகவோ இருந்தால். அது இந்தத் திட்டத்தின் கீழ் உதவி பெறத் தகுதியுடையதாகாது.

(உ) ஒரு நிறுவனம் சட்டப்படியான பொறுப்புகளை நிறைவேற்றுவதில் மாநில அரசின் தனிநபர் மானியம் பெறுவதாக இருந்து, அதைக் கூடுதலாக்கும் வகையில் அந்த நிறுவனத்துக்கு உதவியளிக்கப்படமாட்டாது.

(ஊ) தனி நபர் அல்லது ஒரு குழுவின் நன்மைக்காக நடத்தப்பட்டால் உதவி கிடையாது. ஆனால் கூட்டுறவாக நடத்தப்பட்டால் உதவி உண்டு.

(எ) ஒரு பணி/ பணிகளின் மொத்த மதிப்பீட்டுச் செலவில் குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பங்கை அந்தத் தொண்டு நிறுவனம் ஏற்க வேண்டும்.

(ஏ) உள் அல்லது வெளி தணிக்கையாளர்களால் கணக்குகள் ஒழுங்காகத் தணிக்கை செய்யப்படும் நிறுவனமாக அது இருக்க வேண்டும்.

(ஐ) சாதி, மதம், மொழி, இனம் என்ற எந்தவொரு வேறுபாடுமின்றி இந்திய மக்கள் அனைவருக்கும் உரியதான அமைப்பாக அது இருக்க வேண்டும்.

**3. உதவிக்குத் தகுதியான பணிகளின் தன்மை**

இந்த மானிய உதவி பெறுவதற்கான பணிகள் தேசிய ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் வளர்ப்பவையாக இருக்க வேண்டும். முக்கியமாக, 1968 ஜூன் மாதத்தில் ஸ்ரீநகரில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பிரகடனத்தில் கண்ட குறிக்கோள்களை நிறைவேற்றி வைப்பவையாக இருக்க வேண்டும். அந்தப் பணிகள் பின்வருமாறு:—

(அ) வகுப்பு, பிராந்திய வெறுப்பை வளர்க்காதிருத்தல், தவறாக வழிகாட்டப்பட்டவர்களை வன்முறையிலிருந்து திருப்புதல்.

(ஆ) இந்த நாட்டின் அடிப்படைக் கொள்கைகளான சகிப்புத் தன்மை, ஒற்றுமை போன்றவற்றைத் திடமாகவும் தீவிரமாகவும் பரப்புதல்.

(இ) தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாட்டு முயற்சிகள் ஆக்க சக்திகளை ஒன்று திரட்டி, அவர்களுக்குத் தலைமையும், ஊக்கமும், உயிர்ப்பும் அளித்தல்.

(ஈ) மக்களின் உரிமைகளையும் கடமைகளையும் வலியுறுத்தி, தேசிய வாழ்க்கையின் தரத்தை உயர்த்தி, சகோதர உணர்வை வளர்க்கும் சமுதாய அல்லது கூட்டு நடவடிக்கைகளை வகுத்தல்.

**4. நடவடிக்கைகளுக்கான வழி முறைகள்**

மேலே சொன்ன நடவடிக்கைகளை, பின்வரும் வழிகள் ஏதாவது ஒன்றின் மூலம் நிறைவேற்றலாம்;

(அ) கருத்தரங்குகள், விவாதக் குழுக்கள்.

(ஆ) சமூகங்களுக்கிடையே தேசிய நாட்களையும் விழாக்களையும் கொண்டாடுதல்.

(இ) கலாச்சார விழாக்கள்.

(ஈ) பிராந்தியங்களுக் கிடையே முகாம்கள், பயணப் பரிமாற்றங்கள்.

(உ) ஒருமைப்பாடு, தேசிய இலட்சியங்களை வலியுறுத்தும் வெளியீடுகளை வெளியிடுதல்.

(ஊ) சமூக ஒற்றுமையைப் பேணுவதற்கான மக்கள் குழுக்கள்.

(எ) மக்களிடையே அமைதி, நல்லெண்ணம், சகிப்புத்தன்மை போன்றவற்றைப் பேணிட உதவும் நிகழ்ச்சிகள், பிரச்சினைகளை எடுத்துக் கொண்டு அவை பற்றி ஆய்வு நடத்துவது.

(ஏ) இந்திய தேசிய வாழ்வு, மதச்சார்பின்மை ஆகியவற்றை வலியுறுத்தும் சமூக உணர்வை வளர்க்கும், கூட்டு முயற்சிகள், பொருட்காட்சிகள், பொதுக்கூட்டங்கள் நடத்துதல்.

(ஐ) சமூக ஒற்றுமை, மதச்சார்பின்மை, தேச ஐக்கியம் ஆகியவற்றை வளர்க்கும் ஓர் அமைப்பின் பொருளாதார வளங்களுக்கு மேலும் பலம் சேர்ப்பது.

**5. மானிய உதவிக்கான நிபந்தனைகள்**

(அ) எந்தப் பணிக்காக ஒரு மானியம் வழங்கப்படுகிறதோ அந்தப் பணியை, அந்த மானிய உதவி வழங்கும் கடிதத்தில் கண்டுள்ள காலத்துக்குள் முடித்துவிட வேண்டும்.

(ஆ) நிறுவனம் - அமைப்பு - பல்கலைக்கழகம் இதற்கான கணக்கை வங்கி அல்லது அஞ்சலகத்தில் தனது பெயரில் வைத்துக் கொள்ள வேண்டும். தனி நபர் பெயரிலோ அல்லது பதவிப் பெயரிலோ அல்ல. இரண்டு பதவிப் பொறுப்பாளர்கள் கூட்டாகக் கணக்கை நிர்வகிக்க வேண்டும்.

(இ) நிறுவனம் - அமைப்பு - பல்கலைக் கழகம், அனுமதிக்கப்பட்ட திட்டத்தை நிறைவேற்றும் பொழுது சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

(ஈ) நிறுவனம் - அமைப்பு - பல்கலைக் கழகம் இதே காரியத்திற்காக மத்திய அரசின் வேறு எந்தத் துறையிடமிருந்தும் மானியம் பெறவில்லையென்று சான்றளிக்க வேண்டும்.

(உ) நிறுவனம் - அமைப்பு -பல்கலைக்கழகம் இந்த வேலைத்திட்ட அமல்பற்றிய முன்னேற்ற அறிக்கை அல்லது அது தொடர்பான விவரத்தை, வேண்டும்பொழுது உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(ஊ) ஒரு தொண்டு நிறுவனத்திற்குத் தரப்படும் மானிய உதவியைக் கொண்டு அசையாச் சொத்து எதையும் வாங்கக் கூடாது.

(எ) ஒரு தொண்டு நிறுவனத்துக்குத் தரப்படும் மானிய உதவியைக் கொண்டு ரூபாய் 1,000க்கு மேற்பட்ட அசையும் சொத்து எதையும் வாங்கக்கூடாது.

**6. விண்ணப்பம் அனுப்புவதற்கான நடைமுறை**

ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பின்வரும் பத்திரங்கள் இணைக்கப்பட வேண்டும்:—

(அ) பதிவுச் சான்று நகல் பதிவு செய்யப்பட்ட நலப்பணி நிறுவனத்தின் ஒழுங்குமுறைகள் கிளையாக இருந்தால், தாய் நிறுவனத்தின் பதிவுச் சான்று நகல், அத்துடன் அந்த நிறுவனத்திடமிருந்து, இந்த அமைப்பு அதன் முறைப்படியான கிளை என்பதற்கும், மானிய உதவி சரியாகப் பயன்படுத்தப்பட, தான் பொறுப்பாகஇருப்பதற்கும் சான்று.

(ஆ) நிறுவனம் - அமைப்பு - பல்கலைக்கழக அமைப்பு விதிகளின் நகல்.

(இ) நிர்வாகக் குழு அமைப்பு விதிகளின் நகல் ஒவ்வொரு அங்கத்தினரின் விவரங்களுடன்.

(ஈ) முந்திய ஆண்டறிக்கையின் நகல்.

(உ) நிறுவனம்-அமைப்பு- பல்கலைக் கழகத்தின் முந்திய மூன்றாண்டுகளுக்கான முழு வரவு செலவுக் கணக்கு அறிக்கை. அது ஒரு சார்ட்டர்டு அக்கவுண்டண்ட் அல்லது அரசு ஆடிட்டரால் சான்றளிக்கப்படவேண்டும். (தணிக்கை செய்யப்படாத நிறுவனங்கள், தணிக்கை செய்யப்படாத கணக்கு அறிக்கைகளை அனுப்ப வேண்டும்).

**7. மானிய அனுமதிக்கான நடைமுறை:**

(அ) மானிய உதவிக்கான ஒவ்வொரு விண்ணப்பமும், மானியம் கேட்கப்படுவதற்கான பணி அல்லது பணிகள், அதற்கான மதிப்பீட்டுச் செலவுகள், அதில் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பங்கு ஆகிய விவரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

(ஆ) மானிய உதவி பெறும் நிறுவனம், அந்த மானிய உதவி பற்றிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலவரம்புக்குள் அனுமதிக்கப்பட்ட மானியத்திலிருந்து எவ்வளவு செலவானது என்பது பற்றிய தணிக்கை செய்யப்பட்ட கணக்கு விவரங்களை அனுப்பி வைக்க வேண்டியது முக்கிய நிபந்தனையாகும்.

(இ) அனுமதிக்கப்பட்ட மானியத்தை, அந்த நிறுவனம்தான், அந்த மானியம் எதற்காக வழங்கப்பட்டதோ அந்த காரியத்திற்காகப் பயன்படுத்த வேண்டும். இது பற்றிய சான்றினை, மேலே பிரிவு (ஆ) வில் சொல்லப்பட்டபடி தணிக்கை செய்யப்பட்ட கணக்கு விவரங்களுடன் அனுப்ப வேண்டும். மானியம் அனுமதிக்கும் அதிகாரிகளின் முன் அனுமதியின்றி மானியத்தை வேறொரு அமைப்புக்கோ அல்லது வேறொரு பணிக்கோ மாற்ற இயலாது.

(ஈ) மானியத்தில் செலவழிக்கப்படாத மிச்சத்தை, மானிய அனுமதிக் கடிதத்தில் கண்டுள்ள உத்தரவுகளின்படி, அரசுக் கணக்கில் சேர்க்க வேண்டும்.

(உ) ஒரே நிதியாண்டில் எந்தவொரு நிறுவனத்துக்கும் இருமுறை மானியம் வழங்கப்படமாட்டாது. ஆரம்பத்தில் கேட்கப்பட்ட செலவு மதிப்பீட்டின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட மானியத்தொகைக்கு விஞ்சி செலவாகிவிட்டதென்று மேற்கொண்டு கேட்கப்படும் மானியக் கோரிக்கை எதுவும் கவனிக்கப்படமாட்டாது.



## சேக்கிழுத்த செம்மல்

செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் பிறந்தநாளையொட்டி (5.9.88) சென்னையில் உள்ள சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் அருகேயுள்ள வ.உ.சி. திருவுருவச் சிலைக்கு மேதகு ஆளுநரின் ஆலோசகர்கள் திரு. ஜி.வி.ராமகிருஷ்ணா, டாக்டர் ஆ.பத்மநாபன், தமிழக அரசு தலைமைச் செயலர் திரு எம். எம். இராஜேந்திரன், தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம், சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத் தலைவர் திரு. பால்ராஜ், செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ண பாரதி, வ.உ.சி அவர்களின் புதல்வர் திரு வ.உ.சி. சுப்பிரமணியம் மற்றும் முக்கிய பிரமுகர்கள் மாலையணிவித்தார்கள்.

## எக்ஸ்போ '88 தேசிய கைத்தறிக் கண்காட்சி

தேசிய கைத்தறிக் கண்காட்சியான 'எக்ஸ்போ 88' நிறைவுவிழா சென்னையில் 4.9.88 அன்று நடந்தது. விழாவில், நெசவாளர்களின் 12 குழந்தைகளுக்கு 'எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல அறக் கட்டளை'யின்கீழ் கல்வித் திட்ட நிதியுதவிகளை ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் ஆ. பத்மநாபன் அவர்கள் வழங்கிப் பேசுகையில் கூறியதாவது.

''கடந்த ஒரு மாதமாக நடந்த இந்தக் கண்காட்சி மூலம் 8 கோடி ரூபாய்க்குக் கைத்தறி துணி விற்பனையாகியுள்ளது. இது இலக்கை விட 4 கோடி ரூபாய் அதிகமாகும். அரசு சார்பில் கடந்த ஆண்டுகளில் ஆறாயிரம் வீடுகள் நெசவாளர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் மேலும் இரண்டாயிரம் வீடுகள் கட்டப்படும்.

''கடந்த சில மாதங்களுக்கு முன்பு தமிழ்நாட்டில் நெசவாளர்களுக்குப் பஞ்சு கிடைக்கவில்லை. மத்திய அரசுடன் பேசி 30 ஆயிரம் பேல் பஞ்சை, பாகிஸ்தான், சூடான் போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய தமிழக அரசு அனுமதி பெற்றது.

''விஜயா வங்கி, கனரா வங்கி மூலம் பொதுமக்களுக்கும், வங்கி ஊழியர்களுக்கும் கைத்தறித்துணி விற்பனையை நடத்தும் திட்டத்தைத் தமிழகக் கைத்தறித்துறை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் கைத்தறித் துணி விற்பனை அதிகரிக்கும்.

விழாவுக்குத் தமிழக அரசின் கதர் மற்றும் கைத்தறித்துறை ஆணையாளர் திரு எம்.பரமசிவம் தலைமை வகித்துப் பேசும்போது, ''மாவட்டத் தலைநகரங்களிலும் கைத்தறிக் கண்காட்சி நடத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மார்க்கெட்டில் நிலைத்து நிற்கக் கூடிய வடிவமைப்புக்களை உருவாக்குவதில் கைத்தறிக் கலைஞர்கள் ஈடுபடவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

கைத்தறித்துறை இயக்குநர் திரு. ஆர்.சி.பண்டா வரவேற்றார். தனி அலுவலர் திரு ஏ.பி.பட்டிகர் நன்றி கூறினார்.



# நல்லாசிரியர் விருது வழங்குவிழா

தமிழக நல்லாசிரியர் விருது வழங்கும் விழா, டாக்டர் ராதா கிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 5ஆம்நாளன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றது.

மேதகு ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் ஆ. பத்மநாபன் அவர்கள் தலைமை ஏற்றார்.

அனைவரையும் வரவேற்றுப் பேசிய சென்னை மாவட்ட ஆட்சியர் திரு ஜி.புஜங்கராவ், தேசிய ஆசிரியர் நல நிதிக்காக ரூ. 2 இலட்சத்திற்குரிய காசோலையை மேதகு ஆளுநரிடம் வழங்கினார்.

தமிழ்நாடு ஆரம்பக்கல்வி இயக்குநர் திரு நாச்சிமுத்து வாழ்த்துரை வழங்கியபோது குறிப்பிட்டதாவது.

''ஓராசிரியர் பள்ளியை இரு ஆசிரியர் பள்ளியாக்கியுள்ளோம். கட்டடம் இல்லாத பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டிக் கொடுத்திருக்கிறோம். ஒரு கட்டடமாக இருந்ததை இரண்டு கட்டடமாக ஆக்கி இருக்கிறோம்''.

பள்ளிக் கல்வி இயக்குநர் திரு கி.கோபாலன் தமது உரையில் தெரிவித்தார்:

''சென்னைக்கு வரும் ஆசிரியர்கள் தங்குவதற்கு வசதியாகச் சென்னையில் ரூ. 60 இலட்சம் செலவில் ஆசிரியர்கள் தங்கும் விடுதி கட்டத் திட்டமிட்டுள்ளோம். டாக்டர் ராதாகிருஷ்ணன் நூற்றாண்டு விழாவான இந்த ஆண்டுக்குள் அந்த விடுதி கட்டி முடிக்கப்படும்''

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு ஆர். கற்பூரசுந்தரபாண்டியன் குறிப்பிட்டார்;

''ஆசிரியர் பணி புனிதமான பணி; அனைவரும் போற்றிப் பாராட்டும் பணி. சமுதாயத்தில் உயர்ந்த எந்த மனிதரும், ஆசிரியரின் உதவி இன்றி அந்த நிலையை அடைந்திருக்க முடியாது.

''இந்த ஆண்டு 4½ கோடி பாட நூல்கள், ஆளுநர் அவர்களின் ஆணைப்படி, உருவாக்கப்பெற்று, அனைவருக்கும் அனுப்பப்பட்டு விட்டன''.

கல்வித்துறைச் சிறப்பு ஆணையர் மற்றும் செயலர் டாக்டர் எச் பி.என் ஷெட்டி தமது உரையில் தெரிவித்ததாவது:

''கல்வி ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படை; தமிழக ஆசிரியர் பெருமக்களுக்குத் தனிப்பெருமை உண்டு.

''ஆசிரியர்களின் குறைகளை நீக்குவதற்கு அரசு உறுதி எடுத்துள்ளது. ஆசிரியர்கள் தங்கள் குறைகளை வகுப்பறைகளுக்கோ வீதிகளுக்கோ எடுத்துச் செல்ல வேண்டாம். சம்பந்தப்பட்டவர்களைச் சந்தித்து வாதாடி நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

''நமது மாநிலத்தில் 40 ஆயிரம் கல்வி நிலையங்கள் உள்ளன. மூன்று இலட்சம் ஆசிரியர்கள் இருக்கின்றனர். புதிய தலைமுறையினரை உருவாக்கும் சிறந்த செயல் ஆசிரியர்களிடம் தான் இருக்கிறது.

விழாத்தலைவர் -மேதகு ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் ஆ. பத்மநாபன் அவர்கள், தமது தலைமை உரையில் தெரிவித்ததாவது:

''கல்விப்பணி நல்ல பணி; ஆண்டவனுக்குச் செய்கின்ற பணி. நமது ஆசிரியர்களுக்குப் பாரம்பரியம் உண்டு. பண்பாடு உண்டு. கலைத் திறன் உண்டு.

''ஆசிரியர்களுக்கு விருது வழங்குவது என்பது தமிழுக்கு-கல்விக்கு-தமிழ்நாட்டுக்குச் செய்கின்ற தொண்டு என்று சொல்லலாம்''.

அடுத்து உரையாற்றிய மேதகு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் சில விநாடிகள் தமிழில் பேசி, அனைவரையும் மகிழ வைத்தார்; அவரது உரை வருமாறு:

''ஆசிரியர் பெருமக்களே! மாணவர்களே! எனது ஆலோசகர் மதிப்பிற்குரிய பத்மநாபன் அவர்களே! கூடியுள்ள பெரியோர்களே! நண்பர்களே!

''நாடெங்கும் ஆசிரியர் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வரும் இந்த இனிய நாளிலே உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் நல்வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

''இந்தப் பெருமைமிக்க விழாவில் கலந்து கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.



''ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அனைவரும் கொண்டாடுவதற்கு ஏற்பட்ட நாள் இது! ஆசிரியர்களுக்கு, பொதுமக்கள் அனைவரும் நன்றி செலுத்தவேண்டிய நாள்.

''அறிவு புகட்டுவது ஆசிரியர்களின் முக்கியமான பணி. அத்துடன் நல்லொழுக்கம், நற்பண்பு ஆகியவற்றை மாணவர்களிடம் உருவாகச் செய்வது அதைவிட முக்கியமான பணி!

''ஆசிரியர்களைப் பாராட்டி கௌரவிக்கிறோம் என்றால், நாட்டை உருவாக்கும் சிற்பிகளை கௌரவிக்கிறோம் என்று அர்த்தம்.

''இன்று விருதுபெறும் நல்லாசிரியர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களது சீரிய தொண்டினைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். அவர்களுக்குப் பணிவன்புடன் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''இனிமேல் ஆங்கிலத்தில் ஒரு சில வார்த்தைகள் பேச இருக்கிறேன்''

இவ்வாறு குறிப்பிட்ட மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம் வருமாறு:

''தேசத்தை உருவாக்கும் அரிய பணியில் ஈடுபட்டுவரும் ஆசிரியர் பெருமக்களைப் பாராட்டுவதற்காக நாம் இங்கே குழுமியுள்ளோம்.

''டாக்டர் ராதாகிருஷ்ணன், தாம் எந்தெந்தப் பதவியை வகித்த போதிலும், தாம் ஆற்றிய ஆசிரியர் பணி பற்றிப் பெருமைப்பட்டுப் பேசி வந்தார். வாழ்நாளின் கடைசி வரை அவர் ஆசிரியராகவே விளங்கி வந்தார்.

''சென்னை கிறித்துவக் கல்லூரியிலும், மாநிலக் கல்லூரியிலும் கல்வி கற்றார்.

''குடியரசுத் தலைவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றபோது, சென்னைக்கே வந்து தமது இறுதிக்காலம் வரை இங்கேயே வாழ்ந்து வந்தார்.

''டாக்டர் ராதாகிருஷ்ணன் எண்ணற்ற புத்தகங்களைப் படித்தார். இந்தியத் திருநாட்டில் வெளியிடப்பட்ட புத்தகங்கள் மட்டுமின்றி, வெளிநாட்டில் வெளியிடப்பட்ட புத்தகங்களையும் படித்தார். உலகின் பல திசைகளிலும் வெளியான நூல்களையும் விரும்பிப் படித்தார்.

''அவருக்கு அஞ்சலி செலுத்த நினைக்கும் நாம், அவர் கைக்கொண்டிருந்த புத்தகம் படிக்கும் வழக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.

''ஆசிரியப் பெருமக்கள் படித்து ஆசிரியர்களான பின்னர், புத்தகங்கள் படிக்கும் வழக்கத்தை மறந்து விடுகிறார்கள். சிலர் பாடப்புத்தகங்களைப் படிப்பதுடன் நிறுத்திக் கொள்கிறார்கள்.

''டாக்டர் ராதாகிருஷ்ணன் ஒரு நாளில் குறைந்தது 7 அல்லது 8 மணி நேரமாவது புத்தகங்களைப் படித்து வந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. அனைவரும் புத்தகம் படிக்கும் வழக்கத்தை விடாது கடைப்பிடித்து அவரை நினைவு கூர்வோமாக!''

தமது உரைக்குப் பின்னர், தேர்வில் முதலாவது 2வது மதிப்பெண்கள் பெற்ற பள்ளி மாணவ-மாணவியருக்கு, பதக்கங்களும், நல்லாசிரியர் 228 பேருக்கு விருதுகளும் வழங்கினார்.

முதன்மைக் கல்வி அலுவலர் திரு எம். இராசாராம் நன்றி கூற, விழா இனிது முடிந்தது.

—நமது செய்தியாளர்

# பூம்புகார் சாதனைகள்

விநாயக சதுர்த்தியை முன்னிட்டுத் தமிழக அரசு நிறுவனமான பூம்புகார் கைத்திறத் தொழில் வளர்ச்சிக் கழகம், சென்னையில், சிறப்புக் கண்காட்சி ஒன்றினை நடத்தி வருகிறது. இந்தக் கண்காட்சியின் மூலம் நான்கு இலட்சம் ரூபாய் விற்பனை எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டு இத்தகைய கண்காட்சி மூலம் இரண்டரை லட்சம் ரூபாய்க்கு விற்பனை இருந்தது.

சென்னை அண்ணா சாலையில் உள்ள பூம்புகார் விற்பனைக் கூடத்தில் - மரம், செம்பு, பித்தளை, கல், காகிதக்கூழ் ஆகியவற்றாலான விநாயகர், முருகன், நடராஜர், அர்த்த நாரீசுரர், கிருஷ்ணன் போன்ற பல எண்ணற்ற தெய்வ உருவமைப்புகள் அணி செய்கின்றன.

''பொதுவாகவே, மரத்தாலான கலைப் பொருட்கள் தஞ்சாவூர், தென்னார்க்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களிலும் - உலோகத்தாலான உருவமைப்புகள் சுவாமிமலை, ஈரோடு ஆகிய இடங்களிலும் அதிகம் செய்யப்படுகின்றன. வறட்சி நிலவிய நேரத்தில் கைவினைக் கலைஞர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். அவர்கள் துயர்போக்கும் வகையில் மத்திய அரசு 78 இலட்சம் ரூபாய் நிதி அளித்திருக்கிறது. பாதிக்கப்பட்ட கலைஞர்களுக்கு அந்தப் பணம் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது. மாநில அரசும் அதிக அளவில் உதவி வருகிறது'' என்றெல்லாம் நமக்குத் தெரிவித்தார், 'பூம்புகார்' அமைப்பின் வடக்கு மண்டல மேலாளர் திரு என். ஆர். இராமலிங்கம்.

சென்ற ஆண்டில்-அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், சிங்கப்பூர், போன்ற வெளிநாடுகளுக்கெல்லாம் பதினைந்து இலட்ச ரூபாய் பெறுமானமுள்ள கலைப்பொருட்கள் பூம்புகார் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

இந்தியாவெங்கும் - டில்லி, பெங்களூர், கல்கத்தா, திருப்பதி, புதுவை போன்ற 17 முக்கிய நகரங்களில் பூம்புகார் கலைப்பொருள் விற்பனை நிலையங்கள் இருக்கின்றன. எல்லாவற்றின் மூலமும் சென்ற ஆண்டில் மூன்று கோடி ரூபாய்க்கு விற்பனை இருந்தது. 1973-ல் துவக்கப்பட்ட இந்த அமைப்புகளில் பொதுவாகவே மார்ச், ஆகஸ்ட் மாதங்களில் அதிக விற்பனை இருக்கும்.

பூம்புகார் அமைப்பின் மூலம்- உடுப்பியில் உள்ள கிருஷ்ணன் கோயிலுக்குத் தங்கரதம் செய்து தரப்பட்டது. மலேசியா-கோலாலம்பூரில் உள்ள மகாமரியம்மன் கோயிலுக்கு வெள்ளி ரதம் செய்து தரப்பட்டிருக்கிறது. ஹவாயில் உள்ள சைவ சித்தாந்தக் கூடத்திற்கு துவஜஸ் தம்பமும், கல்லில் வடிக்கப்பட்ட நந்தியும் உருவாக்கி அளிக்கப்பட்டிருக்கிறன. வியன்னாவுக்கு-இராமாயண மகாபாரதக் காட்சிகள் மரத்தில் திறம்படச் சித்திரித்து அனுப்பப்பட்டிருக்கின்றன.

இங்கே-முத்துராமலிங்கம் மாவட்டத்தில் உள்ள பனங்குடி பெரிய நாயகியம்மன் கோயிலுக்கும், நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள திருவேங்கிநாதபுரம் கோயிலுக்கும் கைவேலைப்பாடுடைய இரண்டு மரத்தேர்கள் 'பூம்புகார்' மூலம் உருவாக்கித் தரப்பட்டுள்ளன.

இவை தவிர, இலங்கைக்கு ஐந்து தேர்கள் செய்து தருவதற்கான ஆணை எதிர்பார்க்கப்படுகிறது இவர்களால்.

தெய்வத் திருவுருவங்கள் மட்டுமல்ல; பித்தளை விளக்குகள் சித்திர மேஜைகள் ஸ்டாண்டுகள், தஞ்சாவூர்த் தட்டுகள், கடிகாரப் பெட்டிகள், படுக்கைப் பாய்கள், பிரம்பு இருக்கைகள் ஆகியவைகளும் இவர்களால் உருவாக்கித் தரப்படுகின்றன.

கண்காட்சிக் காலத்தில்பொருள் வாங்குவோருக்குப் பத்து சதவீதம் கழிவு அளிக்கப்படுகிறது.

—'ராஜி'

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
100 சதவிகிதம் அசல் பட்டு மற்றும் தங்க சரிகைகளைக் கொண்டு நெசவுசெய்யப்பட்ட புதுமையான பட்டுச்சேலைகளை கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.
இந்தியாவின் மிகப்பெரிய கைத்தறி கூட்டுறவு விற்பனை நிறுவனம் கோ-ஆப்டெக்ஸ். அதற்குச் சொந்தமான 560 விற்பனைக்கூடங்கள் மூலமாக கோடிக்கணக்கான வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்கிறது
DIPR: Efficient

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23








